# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை 13 சனிக்கிழமை (29-11-2003) UTHAYAN - A Lively National Tamil Daily


## சமாதான முயற்சிக்கு ஒருங்கிணைப்புக் குழு; ஐரோப்பிய யூனியன் முன்வைத்த புதிய திட்டம்

### சென்னையில் கிறிஸ் பெட்டன் வெளியிட்ட தகவல்

இலங்கைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண இலங்கை அரசு, விடுதலைப் புலிகள், சிங்கள - தமிழ் - முஸ்லிம் தலைவர்கள் ஆகியோரைக் கொண்ட ஓர் ஒருங்கிணைப்புக்குழு ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற ஒரு புதிய திட்டத்தை ஐரோப்பிய யூனியன் முன்வைத்திருக்கிறது. இப்புதிய திட்டம் குறித்து இலங்கைத் தலைவர்களிடமும் விடுதலைப் புலிகளின் தலைவரிடமும் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது.

இலங்கையில் இருநாள் விஜயத்தை மேற்கொண்டுவிட்டு சென்னை சென்ற ஐரோப்பிய யூனியனின் வெளியுறவுக்கான ஆணையாளர் கிறிஸ் பெட்டன் இத்தகவலை சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நிருபர்களிடம் வெளியிட்டிருக்கிறார்.

இலங்கைப் பயணத்தின்போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து ஐரோப்பிய யூனியனின் அமைதி முயற்சிக்கான புதிய திட்டம் குறித்து பேசினேன். அவரும் அத்திட்டம் குறித்து திருப்தி தெரிவித்தார் எனவும் குறிப்பிட்டிருக்கும் கிறிஸ் பெட்டன், நிருபர்களிடம் மேலும் கூறியிருப்பதாவது:-

சகல தரப்பினரையும் கொண்ட அமைப்பின் ஒப்புதலுக்குப் பின்னரே அனைத்துத் தீர்மானங்களும் செயற்படுத்தப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசும் போது தனிநாடு கோரிக்கையை கைவிட வேண்டும் என்று கூறினேன். தற்போது உள்ள போர் நிறுத்த ஒப்பந்தம் நீடிக்க வேண்டும் என்று சொன்னேன். எக்காரணத்தைக் கொண்டும் விடுதலைப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிரபா - பெட்டன் சந்திப்புக் குறித்து பொதுமக்கள் முன்னணி திருப்தி

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ் பெட்டன், புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு எமக்கு மகிழ்ச்சியளிக்கும் விதமாகவே அமைந்தது.

- இவ்வாறு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரபாகரனைச் சந்தித்து கிறிஸ் பெட்டன் கூறிய கருத்துக்கள் அனைத்தும் நாம் ஏற்கனவே கூறிவருகின்ற விடயங்களாகும். புலிகள் மீண்டும் யுத்தத்துக்குச் செல்லக்கூடாது. ஆயுதங்களின் மூலம் புலிகள் செய்யும் இம்சைகள் நிறுத்தப்பட வேண்டும். புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகள் சமஷ்டி முறைக்கு அப்பால் உள்ளன என்றெல்லாம் கிறிஸ் பெட்டன் பிரபாகரனிடம் தெரிவித்தார்.

இது ஒரு வரவேற்கத்தக்க விடயம். பிரபாகரனுக்கு மாத்திரமல்ல சர்வதேச சமூகத்திற்கும் இதனையே நாம் இவ்வளவு காலமும் கூறிவந்துள்ளோம். கிறிஸ் பெட்டன் பிரபாகரனைச் சந்திக்கக் கூடாது என்று ஆர்ப்பாட்டம் செய்தமை அவ்வமைப்பினர்களின் தனிப்பட்ட கருத்தாகும். சர்வதேச சமூகத்தினையும் இணைத்

(16ஆம் பக்கம் பார்க்க)

### அமைதிப் பேச்சுக்களை வழிநடத்த கூட்டு சமாதானக் கவுன்ஸில்; அத்தோடு

# பாதுகாப்புக்கு உதவும் அமைச்சர் என்ற பதவியை வழங்க ஜனாதிபதி இணக்கம்

## அரசுடன் சேர்ந்து சமாதான முயற்சிகளை முன்னெடுக்க சமரசத் திட்டம் ஒன்றை முன்வைக்கின்றார் சந்திரிகா

கொழும்பு,நவம்பர்29

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் அதிகார விடயத்தில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடியால் தடைப்பட்டிருக்கும் சமாதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்காக சமரசத்திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் ஆவணத்தில் பாதுகாப்புக்கு உதவும் அமைச்சர் என்ற பதவியில் ஒருவரை நியமிப்பது மற்றும் சமாதானப் பேச்சுக்களை வழிப்படுத்துவதற்கான கூட்டு சமாதானக் கவுன்ஸில் ஒன்றை அமைப்பது ஆகிய விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

பொறுப்பான எவரது ஒப்பமுமின்றி கடிதத் தலைப்பிலும் இல்லாமல் இந்த ஆவணம் நேற்று கொழும்பில் ஊடகவியலாளர்களுக்குக் கசியவிடப்பட்டது.

ஓராண்டுக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய பங்காளிச் செயற்பாடுகள் என்று குறிப்பிட்டு, அந்த ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் யோசனைகள் வருமாறு:-

முழு சமாதான நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்து நிர்வகிப்பதற்காக ஜனாதிபதியையும், பிரதமரையும் இணைத் தலைவர்களாகக் கொண்ட கூட்டு சமாதானக் கவுன்ஸில (Joint Peace Council) ஒன்று அமைக்கப்படும்.

இக்கவுன்ஸில் முழு சமாதான நடவடிக்கைகளுக்கும் பூரண பொறுப்புள்ளதாக இருப்பதோடு, அந்நடவடிக்கைகளின் செயற்பாடு, இயக்கம் ஆகியவற்றையும் தீர்மானிக்கும்.

இந்தக் கவுன்ஸிலுக்கு உதவி வழங்குவதற்காக இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காண்பதில் ஈடுபாடும், பங்களிப்பும் தர விரும்புகின்ற சகல அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகள் மற்றும் மதத் தலைவர்கள், நிபுணர்கள், தேசியக் குழுக்கள் ஆகிய

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாறிமாறி ஆட்சி செய்த கட்சிகள்தான் இன்றைய நெருக்கடிக்குக் காரணமாம்!

### ஜனாதிபதி சந்திரிகா சொல்கிறார்

கொழும்பு,நவ.29

இந்த நாட்டில் தொடர்ச்சியாக - மாறிமாறி - ஆட்சி புரிந்து வந்த கட்சிகள் மேற்கொண்ட தவறான செயற்பாடுகளின் காரணமாகவே இன்றைய நெருக்கடி நிலை உருவானது.

- இப்படிக் கூறியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

கொழும்பு நகர மண்டபத்தில் டி.ஏ. ராஜபக்ஷவின் ஞாபகார்த்த நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### சகதியில் படையினர் புதைந்த சம்பவம்:

## சாவகச்சேரி நீதிமன்றத்தில் வாக்கு மூலங்கள் பதிவாகின

சாவகச்சேரி,நவ.29

நாகர்கோயில் பகுதியில் கடந்த புதன்கிழமை கிளாலிப் படைமுகாமைச் சேர்ந்த படையினர் 10பேர் சகதியில் மூழ்கி உயிரிழந்தனர். இச்சம்பவம் தொடர்பாக அந்த முகாமைச் சேர்ந்த சக படையினரின் வாக்கு மூலங்கள் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் பதிவுசெய்யப்பட்டன.

சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் பாலசுப்பிரமணியம் முன்னிலையில் வாக்கு மூலங்கள் பதிவுசெய்யப்பட்டன. அப்போது இராணுவ சட்ட அதிகாரி ஒருவர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## 7 பேர் கொண்ட புலிகள் குழு தென்னாபிரிக்கா பயணம்

கொழும்பு, நவ.29

விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தின் பொறுப்பாளர் புலித்தேவன் தலைமையிலான 7பேர் கொண்ட அரசியல் குழு ஒன்று தென்னாபிரிக்காவுக்குப் பயணமாகியுள்ளது. இந்தக் குழுவில் இரு பெண்புலிகளும் அடங்கியுள்ளனர்.

தென்னாபிரிக்காவில் உள்ள அதிகாரப்பரவலாக்கல் முறை பற்றி ஆராய்வதற்காகவே இந்தக் குழுவினர் தென்னாபிரிக்காவுக்குச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அங்கு அவர்கள் தென்னாபிரிக்க அரசியல் நிபுணர்களைச் சந்தித்து பல்வேறுபட்ட

(16ஆம் பக்கம் பார்க்க)

## ரூபா 1,680 கோடி வெளிநாட்டுக் கடன்கள் இலங்கைக்கு வழங்கப்படுவது இடைநிறுத்தம்!

நாட்டில் நிலவும் ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலை காரணமாக சர்வதேச நாணயச் சபையும் உலக வங்கியும் அரசுக்கு வழங்கவிருந்த 1,680 கோடி ரூபா கடனுதவி இடைநிறுத்தப்பட்டிருப்பதாக அரச வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூன்றாண்டு கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சர்வதேச நாணயச் சபையினால் வழங்கப்படும் வறுமை ஒழிப்பு - அபிவிருத்தி வசதிகளுக்கான கடனுதவியில் இவ்வாண்டுக்கான தவணைப் பணமாக 720

(16ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தின் மீதான பற்றுறுதியைப் புலிகள் மீண்டும் ஒரு தடவை வெளிப்படுத்தியுள்ளார்கள்

### பிரபாவின் உரை குறித்து செல்லச்சாமி கருத்து

சமாதான வழிமுறைகளில் இனநெருக்கடியைத் தீர்ப்பதில் தான் தொடர்ந்தும் பற்றுறுதியுடன் இருக்கிறார் என்பதை புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தமது மாவீரர்தின உரையில் மீண்டும் வலியுறுத்தியுள்ளமை, சமாதானத்தில் விடுதலைப் புலிகள் முழுமையாகவும், உறுதியாகவும் இருப்பதையே உலகுக்குத் தெட்டத் தெளிவாக உணர்த்தியுள்ளது.

- இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் எம்.எஸ்.செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர்தின உரை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

சமாதான முன்னெடுப்புக்கள் முடங்கிய நிலையில், முழு உலகும் ஆவலாக எதிர்பார்த்திருந்த இந்த மாவீரர் தின உரை சமாதானத்தில் நம்பிக்கை வைத்த சகலருக்கும் தெம்பூட்டுவதாக அமைந்துள்ளது.

"சமாதான வழிமுறையில் ஆழமாக நாம் பற்றுதல் கொண்டுள்ளோம். மக்களும் போரை விரும்பவில்லை. போருக்கான ஆயத்தங்களை நாம் செய்யவில்லை. தமிழர்களின் பிரச்சினை முடிவில்லாத துன்பியல் நாடகமாகத் தொடர்வது கவலைக்குரியது" என்று பிரபாகரன் பிரஸ்தாபித்திருப்பமை கவனத்தைத் தொடுகின்றது.

"நாம் வன்முறையைத் துறந்து,

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இனிய நாளிதழ்

# ஜனாதிபதி-பிரதமர், சு.கட்சி-ஜே.வி.பி. பேச்சுக்கள் இரண்டும் இருவேறுபட்ட காரணங்களுக்கானவை

## பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பேச்சாளர் அமுனுகம விளக்கம்

"ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமிடையிலான அதிகாரமட்டப் பேச்சுக்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டுப் பேச்சுக்களும் முன்னேற்றகரமான முறையில் நடைபெற்று வருகின்றன. இவ்விரு பேச்சுக்களும் இரு வேறுபட்ட காரணங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றன.

இரண்டையும் ஒன்றாகப் பார்த்து குழப்பமடையத் தேவையில்லை என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவற்றைத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் நடைபெறும் அதிகாரமட்டப் பேச்சுக்கள் ஒரு கூட்டு செயற்பாட்டுக்காக மேற்கொள்ளப்படுகின்றன. அவை சமாதான முயற்சி, பொருளாதாரம், தேர்தல்முறை, சிறந்த நிர்வாகம் ஆகியவற்றில் கூட்டாகச் செயற்பட்டு அவற்றை முன்னெடுத்துச் செல்வது தொடர்பானவையாகும். இந்தப் பேச்சுக்கள் இணக்கம் காணக்கூடிய விதத்தில் சாதகமாக நடைபெற்று வருகின்றன.

ஜே.வி.பியுடன் நடைபெறும் பேச்சுக்கள் அரசியல் கூட்டணி அமைப்பது தொடர்பானவை. இக்கூட்டணி தொடர்பான சுதந்திரக்கட்சியின் யோசனைகள் கட்சியின் மத்திய குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவை இன்னும் இரு வாரங்களில் ஜே.வி.பியிடம் கையளிக்கப்படும். பின்னர் ஜே.வி.பியின் யோசனைகளையும் இணைத்து ஒரு பொது இணக்கப்பாடு காணப்பட்டு கூட்டணி ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்.

இவ்வாறு சரத் அமுனுகம தெரிவித்தார்.

ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர் எதிர்க்கட்சியும், ஜனாதிபதியும் குரங்குபாய்ஞ்சான் முகாம் தொடர்பாகவும், நாட்டின் பாதுகாப்பு தொடர்பாகவும் பேசுவதில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

தற்போது நாட்டில் அரசமைப்புப் பிரச்சினை ஒன்று ஏற்பட்டுள்ளது. சமாதான முயற்சிகளில் பாதுகாப்புத் துறையை எவ்வாறு தொடர்புபடுத்தி முன்னெடுத்துச் செல்லலாம் என்பது குறித்து ஜனாதிபதி பேச்சு நடத்திக் கொண்டிருக்கிறார் என்று சரத் அமுனுகம அக்கேள்விக்குப் பதிலளித்தார்.

## வீடு இடிந்து வீழ்ந்ததில் இளைஞர் காயம்

சுமார் 100 வருடங்கள் பழைமை வாய்ந்த வீடொன்று பெருஞ் சத்தத்துடன் திடீரென இடிந்து வீழ்ந்ததில் அதற்குள் அகப்பட்டு 16 வயது இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். புலோலி தெற்கு மந்திகைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வைகுந்தன் என்பவரின் வீடே இடிந்து தரைமட்டமானது.

வீட்டில் உள்ள பெரும்பாலனோர் வெளியில் சென்றிருந்தமையினால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன. காயமடைந்த இளைஞன் அறையினுள் இருந்தவேளை திடீரென பெருஞ்சத்தத்துடன் வீடு இடிந்து வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சத்தத்தில் அதிர்ந்த இளைஞன் செய்வதறியாது திகைத்து வீட்டினுள் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் அருகில் ஒதுங்கிக் கொண்டார். இதனால் அவர் காயங்களுடன் தப்பிக்கொண்டார்.

சத்தம் கேட்டு ஓடிவந்த அயலவர்களின் உதவியுடன் இளைஞர் இடிபாடுகளுக்கிடையில் இருந்து மீட்கப்பட்டார். (ம-15)

## 40 ஈழ அகதிகள் நெடுந்தீவை வந்தடைந்தனர்

தமிழகத்தின் அகதிமுகாம்களில் இருந்து 40 ஈழத் தமிழ் அகதிகள் நெடுந்தீவுக்கு வந்துள்ளார்கள்.

தமிழகத்தின் மண்டபம் அகதி முகாமிலிருந்து, இந்திய மீனவர்களின் இழுவைப்படகு மூலம் இவர்கள் நெடுந்தீவு மேற்குக் கரையில் கரையிறங்கினர்.

## யாழ்.போதனாவைத்தியசாலைக்கு

# கொழும்பு கண்வங்கியிலிருந்து கண்களைப்பெற நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்.போதனா வைத்தியசாலையில், கண் மாற்றுச் சிகிச்சை மேற்கொள்வதற்காகவரும் நோயாளர்களுக்கு வேண்டிய கண்களை, கொழும்பு கண் வங்கியில் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போதைய சமாதான நிலையைப் பயன்படுத்தி இந்த வசதி ஏற்படுத் தப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வகையில் கடந்த வாரம் ஒரு பெண் நோயாளிக்கும், இந்த வாரம் (கடந்தசெவ்வாய்க்கிழமை) ஓர் ஆண் நோயாளிக்கும், கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட கண்கள் பொருத்தப்பட்டு கண் மாற்றுச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இது வரை காலமும் குடாநாட்டில் உள்ளவர்களால் தானம் செய்யப்பட்ட கண்களே பார்வைத் தேவை உள்ளவர்களுக்கு பொருத்தப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-15)

## ஆசிரியர் நிலைய கருத்தரங்கு

வலி-தெற்கு-நவ.29

வலிகாமம் கல்விவலய ஆசிரிய நிலையக் கருத்தரங்குகள் டிசெம்பர் மாதம் முதலாம் திகதியும் நான்காம் திகதியும் மானிப்பாய் ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளன.

வலிகாமம் கல்விவலயப் பாடசாலைகளில் ஒழுக்காற்றுத் துறைக்குப் பொறுப்பாக உள்ள ஆசிரியர்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு "மாணவர் ஒழுங்கும், ஒழுக்கமும்" என்ற விடயம் பற்றிய கருத்தரங்கு முதலாம் திகதி நடைபெற உள்ளது.

பாடசாலைகளில் நட்புதவியாளர்களாக அல்லது ஆசிரிய உளவளத் துணையாளராகச் செயற்படும் ஆசிரியர்களில் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு "நெருக் கீட்டுக்குப் பிற்பட்ட மனவடு" பற்றிய கருத்தரங்கு டிசெம்பர் மாதம் நான்காம் திகதி நடைபெறும். அன்றையதினம் நடைபெறும் கருத்தரங்கில் உலக வங்கியை பிரதிநிதித்துவம் செய்யும் உயர்மட்ட அதிகாரிகள் சிலர் கலந்து கொள்ள உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-152)

# அம்பாறைப் பகுதியில் அடை மழை; தாழ்ந்த பகுதிகளில் வெள்ள அபாயம்!

சாய்ந்தமருது,நவ.29

அம்பாறை மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாகத் தொடர்ந்து அடைமழை பெய்து கொண்டிருப்பதால் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளம் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பித்த இம் மழையினால் இப்பிரதேச மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கிறது.

தொடர் மழை காரணமாக மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை. இதனால் இப்பிரதேசங்களில் மீனுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மரக்கறிகளின் விலையும் உயர்ந்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மைகளும் நீரில் மூழ்கியுள்ளன. அவை நாசமாகிப் போகும் நிலை தோன்றியுள்ளது.

சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனைக்குடி, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களிலுள்ள தாழ்ந்த பகுதிகளில் மழை நீர் வழிந்தோட முடியாது பாதைகள் நீரில் மூழ்கியுள்ளன. பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்கள் அரசிடம் நிவாரணததை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

# திருமலை குண்டுவீச்சுச் சம்பவத்தில் விடுதலைப் புலிகளுக்கு சம்பந்தமில்லை

## கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபர் தகவல்

திருகோணமலை, சோனகத் தெருவில் கடந்த 25ஆம் திகதி இடம்பெற்ற குண்டுவீச்சு சம்பவத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

ஈச்சந்தீவில் இருக்கும் அகதிகளுககு நிவாரணப் பொருள்களை எடுத்துச் செல்வதில் காணப்படுகின்ற தடையை அகற்றி பாதுகாப்பு வழங்க ஏற்பாடு செய்யவேண்டும் என்ற கோரிக்கையை விடுத்து கலந்துரையாடியபோதே அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார். நிவாரணப் பொருள் வழங்கலில் பாதுகாப்பு குறித்து கலந்துரையாடல் நேற்று பிரதிப் பொலீஸ்மா அதிபரின் வாசஸ்தலத்தில் நடைபெற்றது. காலை 9.30 மணி முதல் 10.30மணிவரை இடம்பெற்ற கலந்துரையாடலில் பிரதிப் பொலீஸ்மா அதிபருடன் திருகோணமலை மாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பாளர் த.புஸ்பராசா, இணை அமைப்பாளர் ஆத்மலிங்கம் ரமணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

குண்டுவெடிப்பில் மூன்றாம் தரப்புககு சம்பந்தம் இருப்பதாக கூறப்படுவது குறித்த வினாவுக்கு விடையளிக்கும்போதே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தொடர்பு இல்லை என்பதை பிரதிப் பொலீஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்துள்ளார். இதுதொடர்பான நீதியான விசாரணை நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

பொலீஸாருடன் தேவைப்படின் இராணுவத்தினரையும் பாதுகாப்புக் கடமையில் அமர்த்தி உடனடியாக நிவாரணப் பொருள்களை அனுப்ப நடவடிக்கை எடுப்பதாக பிரதிப் பொலீஸ்மா அதிபர் உறுதியளித்துள்ளார்.

# யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இன்று கலாசாரவிழா ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.29

கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன், யாழ். மாவட்ட செயலகத்தின் வழிகாட்டலில் கலாசார உத்தியோகத்தர் கலையகம் நடத்தும் வருடாந்த மாவட்ட கலாசார விழா இன்றும், நாளையும் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

*விழாவின் முன்னோடியாக* இன்று நண்பகல் 12 மணிக்கு யாழ் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய முன்றிலில் இருந்து பண்பாட்டுப் பேரணி ஆரம்பமாகும் தொடர்ந்து பிற்பகல் ஒரு மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் கலைநிகழ்வுகள் ஆரம்பமாகும்.

மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதமவிருந்தினராகவும், கொமர்ஷல் வங்கியின் சுன்னாகம் கிளைமுகாமையாளர் ஏ.ஆர். குலேந்திரன், நெல்லியடி கிளை முகாமையாளர் எஸ்.கே.குணசிங்கம், மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் பிரதேச செயலர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

இரண்டாம் நாள் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகும். யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பிரதம விருந்தினராகவும், கொமர்ஷல் வங்கியின் யாழ். கிளைமுகாமையாளர் எஸ்.இரவீந்திரா மற்றும் பிரதேச செயலாளர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

இருநாள் நிகழ்வுகளிலும் கிராமியப் பாடல், நாட்டிய நாடகம், கரகாட்டம், வில்லிசை, பட்டிமண்டபம், இன்னிசை விருந்து, நாட்டுக்கூத்து, ஒயிலாட்டம், இசைநாடகம், நடனம், கவியரங்கம், முதலியன இடம்பெறும். (எ-7)

# ஈச்சந்தீவில் அகதிகளாகத் தங்கியுள்ள 100 தமிழ்க் குடும்பங்களுக்கு உணவில்லை!

## நிவாரணப் பொருள்களை பாதுகாப்புடன் அனுப்ப ஏற்பாடு

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கச்சக்கொடித்தீவு மற்றும் பைசால் நகர் பகுதிகளில் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்ற குண்டு வீச்சுக்களை அடுத்து ஆலங்கேணி மற்றும் பைசால் நகர் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து கச்சக்கொடித்தீவு விபுலா நந்த வித்தியாலயத்தில் கடந்த சில தினங்களாக தங்கியுள்ள நூறு தமிழ்க் குடும்பங்கள் பசி பட்டினியால் வாடுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அயல் கிராமங்களைச் சேர்ந்தோர் இந்த மக்களுக்கு முடிந்தவரை உணவுகளை வழங்கிவந்தனர். ஆயினும், தற்போது திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக அயல் கிராம மக்களும் தொடர்ந்து உதவ முடியாத நிலையேற்பட்டிருக்கிறது.

இடம்பெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த 400இற்கும் மேற்பட்டோர் ஈச்சந்தீவு பாடசாலையில் மிகுந்த நெருக்கடியின் மத்தியிலேயே தங்கியிருக்கின்றனர். இரவு வேளைகளில் பெண்கள் மற்றும் குழந்தைகள் அயல் வீடுகளுக்குச் சென்று தங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த அவல நிலை தொடர்பாக அறிவிக்கப்பட்டதையடுத்து திருகோணமலை அரச அதிபர் இக்குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரண உதவிப் பொருள்களை இராணுவப் பாதுகாப்புடன் திருகோணமலை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் மூலம் அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

கிண்ணியா பலநோக்கு கூட்டுறவுச் சங்க மூலம் இந்த அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்பி வைக்க முன்னர் அரச அதிபர் நடவடிக்கையினை மேற்கொண்ட போதும் அது கைகூடவில்லை.

# முஸ்லிம் காங்கிரஸ் குழு நேற்று இந்தியா சென்றது

அமைச்சர் ரவூப் ஹக்கீமின் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் குழு நேற்றுப் பிற்பகல் 3.45 மணியளவில் இந்தியா புறப்பட்டுச் சென்றது.

இக்குழுவில், மு.கா. எம்.பிக்களான அன்வர் இஸ்மாயில், எச்.எம்.எம்.ஹரீஸ், ரிஷாத் பதியுதீன், மு.கா. செயலாளர் ஹசன் அலி உட்பட மேலும் சிலர் அடங்குவர்.

ஒன்று பட்ட நாட்டுக்குள் சிறுபான்மையினர் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளும் முறை, இடைக்கால நிர்வாகமுறை ஆகியவை குறித்து இக்குழுவினர் இந்தியாவில் ஆராய்வர்.

# சமாதானம் –சகவாழ்வு வேண்டி டிசெ.3 ஆம் திகதி விளக்கேற்றல்

கொழும்பு,நவ.29

சமாதானச் செயற்பாட்டைப் பலப்படுத்தவும் சகவாழ்வை வேண்டியும் விளக்கேற்றும் நிகழ்ச்சி ஒன்று எதிர்வரும் டிசெம்பர் 3ஆம் திகதி மாலை 6 மணிக்கு கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நடைபெறும்.

'மக்கள் சமாதான அரங்கு' என்னும் சமாதானத்திற்கான பொதுக் கூட்டமைப்பு இந்த நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருக்கிறது.

அன்று மாலை 5 மணிக்கு சமாதான ஊர்வலம் ஒன்று கொழும்பு புதிய நகர மண்டபத்திலிருந்து ஆரம்பமாகி விகாரமாதேவி பூங்காவிலுள்ள புத்தர் சிலைக்கு எதிரே முடிவடையும்.

ஜனாதிபதியும் பிரதமரும் சமாதானச் செயற்பாட்டை வெற்றியடையச் செய்ய இணக்கத்துக்கு வந்திருப்பதும விடுதலைப் புலிகள் இயக்கம் இன்றைய அரசியல் சூழ்நிலையிலும்கூட சமாதான முயற்சி தொடர்பாக திடசங்கற்பத்துடன் செயற்படுவதும் இந்நாட்டின் சமாதானத்தை விரும்பும் அனைவருக்கும் மகிழ்ச்சியூட்டுகின்ற ஒரு விடயமாகும் என்று மக்கள் சமாதான அரங்கு தெரிவித்திருக்கிறது.

# புதிய ஐ.ஜீ.பி. நியமனம் குறித்த ஜனாதிபதியின் சிபாரிசை ஆராய குழு

## அரசமைப்புச்சபை கூடித் தீர்மானம்

கொழும்பு,நவ.29

காலியாகவுள்ள பொலீஸ்மா அதிபர் பதவிக்கு(ஐ.ஜீ.பி) பிரதிப் பொலீஸ்மா அதிபர் இந்திரா டி.சில்வாவை நியமிக்குமாறு ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க செய்திருக்கும் சிபாரிசு குறித்து ஆராய ஒரு குழுவை நியமிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுமுன்தினம் கூடிய அரசமைப்புச்சபை இத்தீர்மானத்தை மேற்கொண்டது.

ஜனாதிபதியின் சிபாரிசு குறித்து ஆராயும் குழு, தனது முடிவை அரசமைப்புச் சபைக்கு அறிவித்ததும் பொலீஸ்மா அதிபர் பதவிக்குத் தகுதியான ஒருவரை நியமிப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்க அரசமைப்புச்சபை எதிர்வரும் 18ஆம் திகதி மீண்டும் கூடும்.

பொலீஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா ஓய்வு பெற்றதையடுத்து ஜனாதிபதியினால் பதில் பொலீஸ்மா அதிபராக இந்திரா டி சில்வா நியமிக்கப்பட்டார். புதிய பொலீஸ்மா அதிபராக அவரை நியமிக்குமாறு ஜனாதிபதி இப்பொழுது இரண்டாவது தடவையாகச் சிபாரிசு செய்திருக்கிறார்.

ஜனாதிபதி முதல் தடவையாகச் செய்திருந்த இச்சிபாரிசை அரசமைப்புச்சபை நிராகரித்துவிட்டது தெரிந்ததே.

நான்கு பிரதி பொலீஸ்மா அதிபர்கள் பதவியில் இருப்பதால் அவர்களில் சேவை மூப்பு குறித்து ஆராய்ந்து அறிவிக்குமாறு பொலீஸ் ஆணைக்குழுவை அரசமைப்புச் சபை ஏற்கனவே கோரியிருக்கிறது.

# எய்ட்ஸுக்கு எதிரான போரில் உலகம் தோற்று வருகின்றது!

## ஐ.நா. செயலாளர் நாயகம் வேதனை

லண்டன்,நவ.29

'எய்ட்ஸ்' நோய்க்கு எதிரான போரில் உலகம் தோற்றுவருகிறது. - இவ்வாறு கவலை தெரிவித்தார் ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான்.

பி.பி.ஸி. செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் அதனைக் குறிப்பிட்டார்.

அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் அரசுகளை இதற்காக அவர் கடுமையாக விமர்சித்தார். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் மக்கள் எயட்ஸ் தடுப்பு நடவடிக்கைக்கு அதிக ஒத்துழைப்பும் அக்கறையும் வழங்குமாறு தத்தமது நாட்டு அரசுகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.

செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நாவால் எய்ட்ஸ் நோயைத் தடுப்பதில் பெருமளவு வெற்றியைப் பெற முடியவில்லை. உலக நாடுகளின் தலைவர்கள் போதிய ஒத்துழைப்பு வழங்காததே இதற்குக் காரணமாகும்.

பணக்கார நாடுகளில் எய்ட்ஸ் நோயின் தாக்கம் ஓரளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், மற்றைய நாடுகளில் உள்ள மக்களுக்கு மரண தண்டனையாகவே எய்ட்ஸ் நோய் உள்ளது. 'எய்ட்ஸ்' நோயைக் கட்டுப்படுத்தும் மருந்துகள் பரிசோதனைத் திட்டங்கள் ஆகியவற்றுக்கும் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் மற்றும் தாதிகள் ஆகியோருக்குமான செலவுகள் மற்றும் வளங்கள் போதாதுள்ளன. அபிவிருத்தியடைந்த நாடுகள் குறிப்பாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன எய்ட்ஸ் தடுப்புத் திட்டங்களுக்கு போதிய உதவி வழங்கத் தவறியமையே இதற்குக் காரணமாகும். இதற்காக நான் ஆத்திரப்படுகின்றேன். ஆதரவற்றவனாக உணருகின்றேன். 'எய்ட்ஸ்' நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்று பல நாடுகள் கணித்துள்ளன. ஆனால், தீவிரவாதத்தை ஒடுக்குவதிலும், பேரழிவு ஆயுதங்களை அழிப்பதிலும் காட்டும் அக்கறையை 'எய்ட்ஸ்' நோயைத் தடுப்பதில் அந்நாடுகள் காட்டவில்லை. இது வருத்தத்திற்குரியதாகும் என்றார் கோபிஅனான். (ஓ)



எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ஆபிரிக்கச் சிறுவர்கள்.

### தைவான் சட்டத்தால் சீனாவுக்கு கோபம்

சர்வஜன வாக்கெடுப்புக் குறித்து தைவான் அரசு நிறைவேற்றியுள்ள சட்டம் சீனாவுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

தைவானில் இறைமைக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது, தைவான் சுதந்திரம் பெறுவது குறித்த சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கு அதிபருக்கு தைவான் நிறைவேற்றியுள்ள சட்டம் அதிகாரமளிக்கிறது. தைவானைத் தனது அதிகாரத்தில் உள்ள மாநிலம் என்று சீனா வலியுறுத்தி வருகிறது. இந்த நிலையில் தைவான் நிறைவேற்றியுள்ள சட்டம் சீனாவுககு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

### இந்தியாவில் ஒரேநாளில் 12,000 திருமணங்கள்!


இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நேற்றுமுன்தினம் 12 ஆயிரம் திருமணங்கள் நடந்தன. இதனால், புதுடில்லி விழாக்கோலம் பூண்டிருந்தது. வீதிகளில் மக்கள் வெள்ளம் அலைமோதியது.

ஜோதிடர்களின் கணிப்பின்படி கடந்த இரண்டு மாத காலமாக திருமணத்திற்கு உகந்த சுபமுகூர்த்த நாள் அமையவில்லை. இதனால், திருமணங்கள் காலம் தள்ளிக் கொண்டே வந்தன.

நேற்றுமுன்தினம் திருமணத்திற்கான சுபமுகூர்த்த நாள் என்பதால் 12 ஆயிரம் திருமணங்கள் அங்கு நடந்தன.

ஒரேநாளில் 12 ஆயிரம் திருமணங்கள் நடந்ததால் வீதிகள் எங்கும் மணமக்களின் ஊர்வலம், பட்டாசுச் சத்தங்கள், ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் எனக் களை கட்டியது.

இந்திய வரலாற்றில் நேற்றுமுன்தினம் ஒரு குறிப்பிடத்தக்க நாள் என்று துணைப் பிரதமர் அத்வானி தெரிவித்துள்ளார்.



ஈராக்குக்கு இரகசியப் பயணம் மேற்கொண்ட அமெரிக்க அதிபர் புஷ் அங்குள்ள அமெரிக்கப் படையினருக்கு தானே உணவுபரிமாறி உற்சாகப்படுத்தினார்.

# கழுதை வண்டியில் ஆயுதம் கடத்தல்: ஈராக்கிய கெரில்லாக்கள் புதிய உத்தி!

பக்தாத்,நவ.29

அமெரிக்க கூட்டுப்படையினருக்கு எதிரான தாக்குதல்களை முன்னெடுக்கவென ஈராக்கிய கெரில்லாக்கள் கழுதை வண்டில்களில் ஆயுதங்களைக் கடத்துவது தெரியவந்துள்ளது.

அமெரிக்கப் படையினர் கடந்த வாரம் மேற்கொண்ட சோதனையில் கெரில்லாக்களின் இந்தப் புதிய உத்தி தெரியவந்தது.

இதனையடுத்து கழுதை வண்டி உரிமையாளர்களின் நிலை அமெரிக்கக் கூட்டுப்படையினரின் கெடுபிடியால் மிகவும் மோசமாகியிருக்கிறது.

தலைநகர் பக்தாத்தில் கடந்த வாரம் எண்ணெய் அமைச்சகத்தின் மீதும் அங்குள்ள இரண்டு ஹோட்டல்கள் மீதும் கெரில்லாக்கள் தாக்குதல்கள் நடத்தினர். இந்தத் தாக்குதல்களுக்கு கழுதை வண்டிகளையே ஆயுதங்களை இடம்மாற்ற அவர்கள் பயன்படுத்தினர் என்பதும் தெரியவந்துள்ளது.

சமீபத்தில் அமெரிக்கப் படையினர் இரண்டு கழுதை வண்டிகளைச் சோதனையிட்டபோது அவற்றில் ஒன்றில் ஏவுகணைகள் பெருமளவில் இருந்தன. மற்றையதில் வெடிபொருட்கள் நிரப்பப்பட்டு அது வெடிக்கும் நிலையில் இருந்தது.

இதனையடுத்து, அமெரிக்கப் படையினர் கழுதை வண்டிகளை சந்தேகக் கண்கொண்டே பார்க்கின்றனர். சோதனைக்காக கழுதை வண்டிக்கு அருகில் நெருங்குவதற்குக் கூட அவர்கள் தயக்கம் காட்டி வருகின்றனர். (ஓ)

# ஜோர்ஜிய ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஜனவரி 4ஆம் திகதி

ரிப்ளிசி,நவ.29

ஜோர்ஜியாவில் எதிர்வரும் ஜனவரி மாதம் 4ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்று இடைக்கால ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள பர்ட் நட்ஷே தெரிவித்துள்ளார்.

அதேநேரம், கடந்த மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் செல்லாது என்று அந்நாட்டு உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது.

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்த ஜோர்ஜியா நாட்டின் ஜனாதிபதியாக இருந்த எட்வர்ட் ஷெவர்க் நட்ஷே அந்நாட்டின் தேர்தலை நவம்பர் 2ஆம் திகதி நடத்தினார்.

அத்தேர்தலிலேயே மோசடி நடந்ததாகக் கூறி எழுந்த பலத்த எதிர்ப்புகளால் ஜனாதிபதி எட்வர்ட் ஷெவர்க் நட்ஷே பதவியிலிருந்து விலகினார்.

இதனையடுத்து, இடைக்கால ஜனாதிபதியாக முன்னாள் பெண் சபாநாயகர் பர்ட் நட்ஷே நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மிகைல் புதிய தேர்தலுக்கு முகம் கொடுக்கும் வகையில் செயற்பட ஆரம்பித்துள்ளார் என்று அங்குள்ள பிரெஞ்சு நாட்டு எல்.சி.ஐ. தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

தேர்தலில் இவர் அமோக வெற்றி பெறுவார் என்றும் புதிய ஆட்சியில் அதிரடி மாற்றங்கள் நடக்கலாம் என்றும் அந்தத் தொலைக் காட்சி கூறியுள்ளது.

### இந்தியா - பாக். மீண்டும் பேச்சு?

இந்தியா - பாகிஸ்தான் இடையே யுத்தநிறுத்தம் செய்யப்பட்டிருப்பதையடுத்து, மீண்டும் இரு நாடுகளுக்குமிடையில் பேச்சுத் தொடங்கும் சாத்தியம் ஏற்பட்டுள்ளது.

இந்த இரு நாடுகளும் யுத்தநிறுத்தம் செய்திருப்பதற்கு ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் வரவேற்புத் தெரிவித்துள்ளார். அத்துடன், இரு நாடுகளும் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மீண்டும் சமாதானப் பேச்சு இடம்பெறுமாயின் அதற்கு மத்தியஸ்தம் வகிக்க சீனா முன்வந்துள்ளது.

"ரமழான் தினத்தை முன்னிட்டு பாகிஸ்தான் அறிவித்த ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்திற்கு இந்தியா சாதகமான பதிலளித்திருப்பது பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் அறிகுறியே" என்று சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

# கொங்கோவில் படகுகள் விபத்து: 200 பயணிகள் உயிரிழந்தனர்!

கின்காஷா,நவ.29

கொங்கோ குடியரசில் நடந்த படகு விபத்துக்களில் குறைந்தது 200 பேர் பலியாகினர்; 600 இற்கும் மேற்பட்டோரைக் காணவில்லை.

118 சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. ஏனையோரைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. மீட்புப் பணியில் நூற்றுக்கும் மேற்பட்ட படையினர் ஈடுபட்டுள்ளனர்.

தலைநகர் கின்காஷாவில் இருந்து 400 கி.மீ. வடகிழக்கே உள்ள நொடம்பே ஆற்றில் இந்த விபத்து நடந்தது.

கொங்கோ சுகாதார அமைச்சர் வாஜி சிற்ரோலோ இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

"இரண்டு படகுகள் விபத்துக்குள்ளானமை குறித்து விசாரணைகள் மேற்கொண்டுள்ளோம். இந்தப் படகுகளில் மொத்தம் எத்தனை பேர் பயணித்தனர் என்பது திட்டவட்டமாகக் கூறமுடியாதுள்ளது. ஆனால், 200 பேர் பலியாகியுள்ளனர். 600 இற்கும் மேற்பட்டோர் காணாமற்போயுள்ளனர் என்பது உறுதியாகியுள்ளது" என்று அவர் தெரிவித்துள்ளார்.

விபத்து நடந்த ஆறு மிகவும் ஆழமான பகுதி என்பதால் காணாமற்போனவர்களை உயிருடன் மீட்கும் சாத்தியம் குறைவு என்று கொங்கோ அரசு அறிவித்துள்ளது.

நெடுந்தூரப் பயணங்களை மேற்கொள்ளும் படகுகளே இந்த ஆற்றில் பயணிப்பது குறிப்பிடத்தக்கது.

விபத்தில் சிக்கிய இரு படகுகளும் அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிச்சென்றன என்றும் - அவை இரண்டும் ஒன்றோடு ஒன்று மோதியமையே இந்த விபத்துக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

விபத்துக்குள்ளான படகு ஒன்றில் ரயில்வே ஊழியர்கள் பயணித்தனர். ஆனால், எத்தனை ரயில்வே ஊழியர்கள் பயணித்தனர் என்பது தெரியவரவில்லை. அவர்களில் பத்து ஊழியர்களின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன.



சதாம் ஹுஸைன் மற்றும் சர்வதேச தீவிரவாதி பின்லேடன் ஆகியோரின் பொம்மைகளுக்கு உலக நாடுகளில் இன்றும் நல்ல வரவேற்பு உள்ளது. ஆனால், இஸ்ரேலில் சதாம் மற்றும் பின்லேடனின் பொம்மைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதையும் மீறி இஸ்ரேலைச் சேர்ந்த நிறுவனம் சதாம் மற்றும் பின்லேடன் பொம்மைகளை இறக்குமதி செய்தது.

இந்த பின்லேடன் பொம்மைகள் நடனமாடுகின்றன. சதாம் பொம்மைகள் பாட்டுப்பாடுகின்றன. ஹைபா துறைமுகத்தில் இந்த பொம்மைகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

# கம்போடிய பிரதமரின் மருமகன் கைது!

நாம்பென்,நவ.29

இரண்டுபேரைச் சுட்டுக்கொன்ற குற்றச்சாட்டில் கம்போடியப் பிரதமரின் மருமகனை பொலிஸார் கைது செய்தனர்.

பிரதமர் ஹுன்சென்னின் மருமகனான நிம்சோபி (வயது 22) தனது காரில் வேகமாகச் சென்றவேளை அந்தக் காரை மற்றொரு கார் முந்திச் சென்றது. இதனால், ஆத்திரமடைந்த நிம்சோபி முந்திச் சென்ற காரில் இருந்தவர்களைக் கலைத்துச் சென்று சுட்டுக்கொன்றார்.

கடந்த 27ஆம் திகதி இச்சம்பவம் நடந்தது. நிம்சோபி குடிபோதையில் இருந்ததால் இவ்வாறு செயற்பட்டார் என்று அவரின் தந்தை கூறியுள்ளார்.

ஆனால், பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். நிம்சோபியின் தந்தை மியான்மாருக்கான கம்போடியத் தூதுவராக தற்போது பணியாற்றுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.




YAMAHA

யாழ். ஏக விநியோகஸ்தர்கள்

YAMAHA PLAZA



298, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 0777 198 000, 0777 563 803

VACANCY FOR

## EXPERIENCED COOK AND WAITER

MUST BE THOROUGHLY CONVERSANT IN PREPARING WESTERN, EASTERN AND CHINESE DISHES.

CALL OVER ON THE 1st DECEMBER 2003.

SALARY NEGOTIABLE

(25184)

## "GREEN INN RESTAURANT"

NO. 60, KANDY ROAD,
CHUNDIKULI,
JAFFNA.

(12-17-34)



## உணவு தயாரிப்பவரும், உணவு பரிமாறுபவரும்

## தேவை

உள்நாட்டு, வெளிநாட்டு சைனீஸ் உணவு வகைகள் தயாரிக்க அனுபவமுள்ளவர்கள் தேவை. 01.12.2003 நேரில் வந்து சந்திக்கவும்.

சம்பளம் நேரில் பேசப்படும்.

**கிறீன் இன் ரெஸ்ரோரன்ட்,**
No.60, கண்டி வீதி, சுண்டுக்குளி
யாழ்ப்பாணம்.

(25185)(12-17-21)


## காணவில்லை



உயரப்புலம், இளவாலையைச் சேர்ந்த
**துரைசிங்கம் தனுஷன் (நிக்ஷன்)**
என்பவரை 08.11.2003 சனிக்கிழமை முதல் காணவில்லை. இவரின் வயது 9. தலையிலும், முகத்திலும் காயத்தினால் ஏற்பட்ட வடு உள்ளது. இவரைப்பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**கதிரன் தவமணி**
உயரப்புலம், இளவாலை.

(25183)(34-21-12-17)

சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்திடுவீர் -பாரதி-

**வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச்சபை**

## வண்ண வண்ண மூன்று திறப்புவிழாக்கள்

## கண்தரும் இலவச கண்ணாடி வழங்கும் 16ஆவது திருவிழா

150 கண்ணாடிகள் — 300 கண்கள்

இடம் : வைத்தியசாலை வளாகம்
நேரகாலம் : 30-11-2003 ஞாயிறு காலை 10மணி

- **யு.என்.எச்.சி.ஆர் நல்லெண்ணத் தூதுவர் அஞ்சலீனா ஜொலி அவர்களின் அன்பளிப்பினால் (ரூபா10 லட்சம்)**
- **உருப்பெற்ற புனரமைக்கப்பட்ட அதிநவீன சிறுவர் விடுதி அங்குரார்ப்பணம்**

ஊரில்லா இதயங்களின் அபயக்குரலோன் நீல்றைற் (யு.என்.எச்.சி.ஆர்-கொழும்பு)

- **முற்றாகக் குளிரூட்டப்பட்டு மறுசீரமைக்கப்பட்ட பிரசவஅறை அங்குரார்ப்பணம்**

அரச அறிவுப் பகுத்தறிவாளன் திரு.செ.பத்மநாதன் (அரச அதிபர், யாழ்ப்பாணம்)

- **அபிவிருத்திச் சபை நிதியிலிருந்து மறுசீரமைக்கப்பட்ட களஞ்சிய அறைகள் அங்குரார்ப்பணம்**

சுகாதாரக் கலங்கரை விளக்கு Dr.K.T.சிவபாதம்
(பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் - யாழ்ப்பாணம்)

முதல் கண்ணாடிகளை வழங்கி நல்லாசிகள் கூறி
விழாவை கலக்கும் கனவான்கள்

வீரதீர சிந்தனைச் செம்மல்
மாண்புமிகு M.K.சிவாஜிலிங்கம்
கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்-யாழ்மாவட்டம்.

சரிநிகரில்லாச் சரித்திர வல்லரசன்
பேராசிரியர் S.K.சிற்றம்பலம்
பீடாதிபதி-யாழ் பல்கலைக்கழகம்.

யப்பான் தந்த நல்லினமுத்து
கெய்சுகி முறாட்டா
யு.என்.எச்.சி.ஆர்-யாழ்ப்பாணம்.

கல்விச் சமுத்திர தீபஜோதி
திரு. V.T.செல்வரட்ணம்
வலயக் கல்விப்பணிப்பாளர்.

விழாச் சக்கடத்தார்
Dr.க.மயிலேறும் பெருமாள்
தலைவர்-அபிவிருத்திச்சபை

மென்சொல்லின் செல்வர்
திரு.ஆ.சிவசுவாமி
பிரதேச செயலர்-பருத்தித்துறை.

ஆன்மீக செம்மல்
சுவாமி சித்ரூபானந்தா
சாரதா சேவாச்சிரமம்-பருத்தித்துறை.

(32-12-17)

*02-11-2003இல் கண்பரிசோதனையின்போது தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கும் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை நிதியிலிருந்து (தகுதிபெற்ற அனைவருக்கும்) இலவசமாக அவர்களுக்குரிய கண்ணாடிகள் வழங்கப்படும்.*

மாவட்ட வைத்திய அதிகாரி. உத்தியோகத்தர்கள். வை.அபி.சபையினர். வல்வெட்டித்துறை.

(25178)

## கட்டாக்காலிகளால் பயிர்கள் நாசம்

சண்டிலிப்பாய்,நவ.29

இளவாலை சித்திரமேழி வயல் வெளிப்பகுதியில் நெற்பயிர்களை கட்டாக்காலி மாடுகள் நாசம் செய்துவருவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு வேளையில் இப்பகுதிக்கு வரும் கட்டாக்காலி மாடுகள் பயிர்களை அழித்து வருவதாகவும் -

இதுபற்றி இப்பிரிவுக்கான விவசாயிகள் சம்மேளனம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் - விவசாயிகள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## கோழிகளுக்கான தடுப்பூசி மருந்து தட்டுப்பாடு

சண்டிலிப்பாய்,நவ.29

சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் கோழிகளுக்கு ஏற்றப்படும் நோய்த் தடுப்பூசி மருந்துக்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அம்மை, ரணிகற், கம்போறா ஆகிய நோய்கழுக்கான தடுப்பு மருந்துகள் உரிய திணைக்களத்திலிருந்து அனுப்பி வைக்கப்படாமையே இதற்குக காரணம் என்று கூறப்பட்டது.

இதனால், குறிப்பிடப்பட்ட மருந்துகளை தனியார் வைத்தியசாலைகளில் கோழி வளர்ப்போர் கொள்வனவு செய்யவேண்டி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (எ-135)

## எந்திரவியல் கற்கை விண்ணப்பம் விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.29

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் எந்திரவியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்படிவங்களை அடுத்தமாதம் 5ஆம் திகதி வரையும் யாழ்.பிராந்திய நிலையத்தில பெற்றுக் கொள்ளலாம் என்று பிராந்திய இணைப்பாளர் ச.ஆ.ஞானேந்திரன் அறிவித்துள்ளார்.

இதேவேளை-

அடிப்படை சிங்கள மொழிக்கற்கை மற்றும் இளைஞர் அபிவிருத்தி வேலைத்திட்ட டிப்ளோமா கற்கைநெறி ஆகியவற்றுக்கான விண்ணப்ப் படிவங்களும் பிராந்திய நிலையத்தினால் விநியோகிக்கபபட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-10)


## வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்

**வடமாநில, வன்னி வாழ் மக்களின் நலன்கருதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் விசேட சிறப்பு வைத்திய நிபுணர்களின் அனுசரணையுடன் ஒரு புதிய வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்,**

**இல.14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**
(எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக)
எனும் முகவரியில்

**இன்று (29.11.2003) சனிக்கிழமை**
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகிறது.

★ மருந்தக சேவையும்

★ 24 மணிநேர மருத்துவ ஆய்வகப் பணியும்

- நிதானமான, நியாயமான கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- கொழும்பு சிறப்பு ஆய்வுகளும் எந்நேரமும் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ஆலோசனைக்கான பதிவுகள் 24 மணிநேரமும் தொலைபேசி மூலம் ஏற்றுக்கொள்ளப்படும்.

**- நிர்வாகத்தினர்.**

தொலைபேசி இல.:222 7023.

(25173)(34)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



## திருமதி கதிரவேலு அருமை

தோற்றம் 03.02.1917 — மறைவு 30.10.2003

அன்போடு ஆதரித்து அரவணைத்த
அன்னையே!
பண்போடு வாழ்ந்து பரமனடி சேர்ந்தீரோ?
எந்நாளும் உம்நினைவே உள்ளத்தில் மலருதே!
இந்நாளில் ஆத்மா சாந்திபெற வேண்டுகிறோம்.

இன்று (29.11.2003) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றி அமரரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

கனேஸ்வரம்,
அளவெட்டி.

(25190)(34-12-17-21)

தகவல்:
க.சிவகுமாரன் (மகன்),
சிவஜேனுகா களஞ்சியம்.

## மரண அறிவித்தல்

### சின்னையா அரசரட்ணம்

(முன்னாள் உரிமையாளர், ஸ்ரீமுருகன் ஸ்ரோர், அளுத்கம)

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் 997/A, துண்டி றோட், கொழும்புத் துறையை வசிப்பிடமாகவும் தற்போது கொக்குவில் கிழக்கு, பழைய புகையிரத வீதி, கொக்குவிலில் வசித்து வந்தவருமாகிய சின்னையா அரசரட்ணம் அவர்கள் 27.11.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னையா - செல்லம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும் பூமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் சின்னத்துரை, பொன்னுச்சாமி, பஞ்சாட்சரம், காலஞ்சென்ற உமாபதி, பரஞ்சோதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சறோஜா, கோபாலசிங்கம், ஜெயரட்ணம், இந்திரா, சந்திரா, சாந்தி ஆகியோரின் அருமைத் தந்தையாரும் குணசிங்கம் (ஜேர்மனி), பராசக்தி, நாளினி, விவேகானந்தன், சிவநாதன் (இத்தாலி), லோகேஸ்வரன் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.11.2003) சனிக்கிழமை முற்பகல 11.00 மணிக்கு பழைய புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கிலுள்ள இல்லத்தில நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானதத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுககொள்ளவும்.

*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

(25186)(34)

தகவல்:
கோபாலசிங்கம் (மகன்).
ஜெயரத்தினம் (மகன்).

உதயன்

# தவறான சமிக்ஞை

வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த - தமது வருடாந்த - மாவீரர் தின உரையை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நிகழ்த்தி முடித்திருக்கின்றார்.

சிங்கள அரசியல் தலைமைக்கு தமிழர் தரப்பிலிருந்து சொல்லப்படவேண்டிய செய்தி நறுக்குத் தெறித்தாற்போல உரைக்கப்பட்டிருக்கின்றது.

"சிங்களப் பேரினவாதத்தின் சிலந்தி வலைக்குள் சிக்கித் தமிழரின் வாழ்வும் வளமும் சிதைந்து போவதை நாம் இனியும் அனுமதிக்கமுடியாது. வன்முறையைத் துறந்து, மென்முறைப் பாதையைத் தழுவி, சமரசத்திற்கும் சமாதான முன்னெடுப்புகளுக்கும் எம்மால் முடிந்தளவு நாம் முயற்சித்து வருகின்றோம். இதனை உலக நாடுகள் அனைத்தும் நன்கறியும். ஆனால், சிங்கள இனவாத ஆளும் வர்க்கம் தொடர்ந்தும் எமது மக்களின் உரிமைகளை மறுத்து, சமரசத் தீர்வுகளை எதிர்த்து, ஒடுக்குமுறையைத் தொடருமானால், எமது மக்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமைகளின்கீழ் நாம் பிரிந்துசென்று தனியரசைக் கட்டியெழுப்புவதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை. இப்படியான இறுதி மார்க்கத்துக்குத் தமிழர்களைத் தள்ளிவிடும் புறநிலையை உருவாக்கிவிட வேண்டாம் என நாம் சிங்கள அரசியல் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம்" - என்ற செய்தியை வெளிப்படுத்தித் தமது மாவீரர்தின உரையை முத்தாய்ப்பு வைத்திருக்கின்றார் தலைவர் பிரபாகரன்.

இது, சிங்களத் தலைவர்களின் எண்ணத்தில் உறைத்து, அதை அவர்கள் புரிந்துகொண்டு, தமது கடந்தகாலப் போக்கை மாற்றி நேர்சீர் செய்து, நியாயமாகச் செயற்படுவதற்கு முன்வருவார்களேயானால் இத்தீவில் அமைதித் தீர்வும் சமாதான சகவாழ்வும் சாத்தியமாகும்.

இல்லையேல், இனப்பிரச்சினை 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக' தீர்க்கப்படுவது, தலைவர் பிரபாகரன் கூறியபடி தவிர்க்கமுடியாததாகிவிடும்.

தலைவர் பிரபாகரனின் உரை நிகழ்த்தப்பட்ட சமயம் - அதேவேளையில் வெளியான மற்றொரு தகவலும் முக்கியமானதாகின்றது.

இம்முறை தலைவர் பிரபாகரனின் மாவீரர் தினச் செய்தியில் இடைக்கால நிர்வாகம் தொடர்பாகப் புலிகள் முன்வைத்த திட்ட வரைவுக்கான பின்னணி, அதை சமர்ப்பித்ததை அடுத்து தெற்கில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடி போன்றவை பற்றிய விளக்கங்களும் தகவல்களும் முக்கியமான - கணிசமான - இடத்தைப் பிடித்திருந்தன.

இடைக்கால நிர்வாக வரைவுத் திட்டத்துக்கு எதிராக சிங்கள இனவாத சக்திகளிடமிருந்து ஆட்சேபனையும், கண்டனமும், எதிர்ப்புப் பிரசாரங்களும் எவ்வாறு கிளர்ந்தெழுந்துள்ளன என்பதைத் தலைவர் பிரபாகரன் தமது செய்தியில் கோடிட்டுக் காட்டுகின்றார்.

எதிர்க்கட்சிகள் சார்பாக லக்ஷ்மன் கதிர்காமர் விடுத்த நீண்ட அறிக்கையில் புலிகளின் திட்டவரைவை அவர் படுமோசமாக விமர்சித்திருப்பதையும் -

தமது மக்களின் அவசர, மனிதாபிமான, வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு நீதியான, நியாயமான, உடனடியான பரிகாரம் காணும் நோக்கில் - முற்போக்கான, புதுமையான, ஆக்கபூர்வமான அம்சங்களோடு - தாங்கள் முன்வைத்த உருப்படியான திட்டவரைவில், அவர் தனியரசு உருவாக்கத்துக்கான அம்சங்கள் பொதிந்திருப்பதால் இலங்கையின் இறைமைக்கு அதனால் பேராபத்து ஏற்பட்டுள்ளது என எச்சரித்திருந்தமையையும் -

தலைவர் பிரபாகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.


மாவீரர் தினச் செய்தியில் தலைவர் பிரபாகரன் பெயர் சுட்டிக்காட்டி குறிப்பிடும் தமிழரான லக்ஷ்மன் கதிர்காமர் குறித்து ஏற்கனவே புலிகளுக்கு அதிகளவு 'கசப்பும் காய்ச்சலும்' உண்டு.

அவர் புலிகளுக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் பிரசாரம் செய்தவர், செய்பவர் என்பதும் வெளிநாடுகள் பலவற்றில் புலிகள் இயக்கம் தடைசெய்யப்படுவதற்குக் காரணமாக இருந்தவர் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி.

அத்தகைய ஒருவரை பொதுநல அமைப்பு நாடுகளின் செயலாளர் நாயகம் பதவிக்கு நிறுத்துவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது அரசியல் எதிரியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இணைந்து முன்வந்திருக்கின்றார்கள் என்பதே இப்போதைய செய்தியாகும்.

ஐ.நா. பொதுச்செயலாளர் பதவிக்கு அடுத்து, சர்வதேச பொது அமைப்புகள் மட்டத்தில் உயர்ந்ததாகக் கருதப்படும் இப்பதவிக்கு, தீவிர புலி எதிர்ப்புப் பிரசாரகர் ஒருவரை நியமிக்கச் செய்வதன் மூலம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், ஜனாதிபதி குமாரதுங்கவும் என்ன இலக்கை அடையத் திட்டமிடுகின்றார்கள்? - இது தமிழர் தரப்பைக் குழப்பும் தற்போதைய கேள்வியாகும்.

சிங்களத் தலைவர்களின் தவறான போக்கினால் சமாதான முயற்சிகள் கேள்விக்குள்ளாகியிருப்பதை தலைவர் பிரபாகரன் தமது மாவீரர் தினச் செய்தியில் சுட்டிக்காட்டும் அதேசமயத்தில், பிரதமர் - ஜனாதிபதி இணங்கி எடுத்துள்ள இந்த முடிவு பற்றிய தகவல் வெளியாகியிருக்கின்றது. புலிகளைப் பொறுத்தவரை - தமிழர் தரப்பைப் பொறுத்தவரை - சமாதான முன்முயற்சிகள் தொடர்பாகத் தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள தவறான சமிக்ஞையாகவே இதை அவர்கள் அடையாளப்படுத்துவார்கள் என்பதே உண்மை.



அமெரிக்காவில் மாவீரர் தினத்தையொட்டி அமைக்கப்பட்ட அரங்கம்

# தமிழீழத் தேசியக் கொடி ஏற்றலுடன் அமெரிக்காவில் மாவீரர் தின நிகழ்வுகள்

## உலகத் தமிழர் அமைப்பு ஏற்பாட்டில் நடக்கின்றன

அமெரிக்காவில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றி மாவீரர் தின நிகழ்வுகளை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு இதற்கான பணிகளை மேற்கொண்டுள்ளது.

அமெரிக்காவில் மாவீரர் தின நிகழ்வின் ஆரம்பமாக கடந்த 22ஆம் திகதி சிக்காகோ நகரில் மாவீரர் தினம் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. அதனையடுத்து, இன்று சனிக்கிழமை நியூயோர்க் நகரில் உள்ளூர் நேரப்படி மாலை 6மணிக்கு மாவீரர் தின நிகழ்வு நடைபெறவுள்ளது.

தமிழீழத் தேசியக் கொடி ஏற்றல், மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தல், கவிதாஞ்சலி, எழுச்சி நடனங்கள், ஓரங்க நாடகம், அஞ்சலி உரைகள் ஆகியவற்றுடன் சிறப்பு நிகழ்ச்சியாகக் கனேடியத் தமிழ்க் கலைஞர்களின் தாளலயம் என்ற நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

இன்றைய நிகழ்வைத் தொடர்ந்து, எதிர்வரும் டிசெம்பர் 6ஆம் திகதி நியூஜெர்சி, புளோரிடா, சீட்டில் ஆகிய மாநிலங்களிலும், ஒஹியோ மாநிலத்தில் டிசெம்பர் 7ஆம் திகதியும் சான்பிரான்சிஸ்கோ மாநிலத்தில் டிசெம்பர் 13ஆம் திகதியும் லொஸ் ஏஞ்சல்ஸ் மாநிலத்தில் டிசெம்பர் 14ஆம் திகதியும் மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுகள் தொடர்பாக உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு வெளியிட்ட செய்திக் குறிப்பில் -

"விடுதலை வேண்டிக் களமாடி வீழ்ந்த எமது வீரப் புதல்வர்களை நினைவில் உயிர்ப்பித்துப் பூசிக்கும் நன்னாளில் மாவீரர் அரங்கை நிறைத்து தமிழ் இனத்தின் தேசிய வாழ்வு நிலைப்பதற்காக தமது சொந்த வாழ்வை ஈகம்செய்த சுதந்திர வீரர்களுக்குச் சிரம்தாழ்த்தி வணக்கம் செலுத்த வாருங்கள்" என்று அழைப்பு விடுத்துள்ளது.

அமெரிக்காவில் இடம்பெறும் மாவீரர் நாள் நிகழ்வுகள் தொடர்பாக மேலதிக விவரங்களைப் பெற விரும்புவோர் 718 - 657-9463 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு கேட்டுள்ளது.

# யாழ். ஆஸ்பத்திரிகளுக்கான மருந்து வகைகள் கிடைத்தன

சண்டிலிப்பாய்,நவ.29

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கும் மற்றும் அரசினர் மத்திய மருந்தகங்களுக்கும், யாழ். சுகாதாரத் திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவு இவ்வருட நான்காம் கந்தாயத்திற்கான மருந்து வகைகளை நேரடியாக வாகனமூலம் கொண்டுசென்று விநியோகம் செய்துவருகின்றது.

இதன் பிரகாரம் இவ்வாரம் பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்தகம், தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகம், இளவாலை அரசினர் மத்திய மருந்தகம் மற்றும் சங்கானை அரசினர் வைத்தியசாலை ஆகியனவற்றுக்கு மருந்து வகைகள் விநியோகிக்கப்பட்டன.

இதனை அடுத்து மேற்படி வைத்தியசாலைகளில் நிலவி வந்த மருந்துத்தட்டுப்பாடு நீங்கியுள்ளது.

இதேவேளை - மேற்படி வைத்தியசாலைகளின் ஊழியர்களுக்கு இவ்வருடத்திற்கான இலவச சீருடைகளையும் யாழ் சுகாதார திணைக்களம் வழங்கியுள்ளது. (எ-135)

# பண்டத்தரிப்பில் சட்டவிரோத மின்பாவனை

சண்டிலிப்பாய்,நவ.29

பண்டத்தரிப்பு, சில்லாலை ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துள்ளதாகக் கூறப்பட்டது.

இதனால், அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், சிலபகுதிகளில் மின்வலு குறைந்தும் காணப்படுகின்றது என்றும் சட்டவிரோத மின்பாவனையைத் தடுப்பதற்கு மின்சாரசபை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் - மின்பாவனையாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.(எ-135)

## உதயவாக்கு

நல்ல அறிவு வளர சிறந்த ஆசான் இருக்க வேண்டும்.

## நாளை

கார்த்திகை 14
ஞாயிற்றுக்கிழமை
(30.11.2003)
திதி : ஷப்தமி
பிற்பகல் 4.52 வரை.
நட்சத்திரம் : அவிட்டம்
பிற்பகல் 3.03 வரை.
சுபநேரம்: 9.14-10.44
ராகுகாலம்: 4.44-6.14
(பழைய நேரப்படி)





யார் இந்த மீனா?

அவள் நட்புணர்வுடையவள்.
அவள் விசுவாசமானவள்.
அவள் விவேகமானவள்.
அவள் தைரியசாலி.
அவள் கருணையுள்ளவள்.
அவள் அன்பு காட்டுபவள்.
அவள் நம்பிக்கையுடையவள்.



மேலதிக விவரங்கள் நாளைய பத்திரிகையில்.

அனுசரணை:
unicef

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் 30,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# சிவத்தமிழ் வித்தகரின் ஆன்மீக நயப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.29

இந்து கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் ஆன்மீகப் பணிநயப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு ஆசிரியர் எம்.பி.அருளானந்தன் தலைமையில் நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.மோகனதாஸும் கலந்துகொள்வர்.

அருளாசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், சர்வதேச இந்து மத குருபீடாதிபதி சிவஸ்ரீச.மகேஸ்வரக் குருக்கள், அருட்கவி சீ.விநாசித்தம்பி புலவர், சிவஸ்ரீ சதா.மகாலிங்கசிவக் குருக்கள், சைவபரிபாலனசபைத் தலைவர் சைவப்புலவர் வ.கந்தசாமி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

வாழ்த்துரைகளை யாழ்பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, இந்து கலாசார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் து.வைத்திலிங்கம், யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உட்படப் பலர் நிகழ்த்தவுள்ளனர்.

நிகழ்வு ஆரம்பமாவதற்கு முன்பாக நல்லைக் கந்தன் ஆலய முன்றிலிலிருந்து விழா நாயகர் விழா மண்டபத்துக்கு மங்கள வாத்தியங்கள் சகிதம் அழைத்து வரப்படுவார். (எ-10)

சுன்னாகம் பகுதியில் உள்ள

# உணவகங்களில் சுகாதாரக்கேடு: சீர்படுத்துவதற்கு கால அவகாசம்

வலி.தெற்கு,நவ.29

சுன்னாகம் பகுதியில் உள்ள உணவகங்களில் நிலவும் சுகாதாரக் குறைபாடுகளை சீர்செய்ய ஜனவரி மாதம் வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இக்கால அவகாசத்துக்குள் தேநீர்ச்சாலைகள், உணவகங்கள் போன்றவை சுகாதாரச் சீர்கேடுகளை நிவர்த்தி செய்யுமாறு சுன்னாகம் நகரப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார்.

சுன்னாகம் பகுதியில் செயற்பட்டு வரும் பல தேநீர்ச்சாலைகள், உணவுச்சாலைகளில் சுத்தம் சுகாதாரம் பேணப்படவில்லை எனவும் - சுகாதாரம் தொடர்பாக நிலவும் குறைபாடுகளை விரைவாக நிவர்த்திசெய்து கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதத்திற்குள் சுகாதாரக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குத் தாம் கால அவகாசம் வழங்குவதாகவும் -

அதன்பின் இடம்பெறும் பரிசோதனைகளின்போது சுகாதார குறைபாடுகள் காணப்படுமாயின் குறிப்பிட்ட உணவகம் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் - சுகாதார வைத்திய அதிகாரியூடாக சுன்னாகம் நகர பொதுச்சுகாதார பரிசோதகர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஓ-152)

# வேலைவாய்ப்புப் பணியகத் தலைவர் வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடை!

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் சுசந்த பெர்னாண்டோ வெளிநாடு செல்வதற்கு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் தடைவிதித்திருக்கிறது.

பணியகத்துக்குச் சொந்தமான இரண்டரைக்கோடி ரூபாவை மோசடி வழிகளில் தன்வசப்படுத்திக் கொண்டார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக மேலதிக் விசாரணை நடத்த வேண்டியிருப்பதால் அவர் வெளிநாடு செல்வதைத் தடுக்குமாறு இலஞ்ச ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இக்கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிவான் ஏ.ஆர்.ஏ. ஹெய்யன் துடுவ வேலைவாய்ப்புப் பணியகத் தலைவர் சுசந்த பெர்னாண்டோ வெளிநாடு செல்வதைத் தடுக்குமாறு குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவிட்டார்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். மாவட்ட சமாதான நீதிவான்களாக,
சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட
டாக்டர்
**சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை கந்தசாமி** (J.P.),
**பொன்னையா கணேசலிங்கம்** (J.P.)
ஆகியோரின் சமூகப்பணி
மேன்மேலும் தொடரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*- ஓம்சரவணபவ நிறுவனத்தினர்.*

பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.
(25167)(35-13-21-15)



## வாழ்த்துகின்றோம்



**Sensei. Dinesh, Shihan. Roberts**

Shotokan Karate -do International Federation இன் பிரதம ஆசிரியரும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற கராத்தே ஆசிரியரும் இலங்கை கராத்தே தந்தையுமான **Shihan. Bonnie Roberts,** 8th Dan அவர்களினால்
S.K.A. பிரதம ஆசிரியர்
**Sensei. D.Anto Dinesh**
Black Belt Sandan Diploma in Karate
தரமுயர்த்தப்பட்டமையையிட்டு மகிழ்வடைகின்றோம்.
S.K.I.F கழகமானது இலங்கை கராத்தே சங்கத்தின் National Body (Under the Ministry of Sports) அங்கீகாரத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

S.K.A ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
(25173)(34-21-16-13)


உள்துறை அமைச்சைப் பறித்த ஜனாதிபதி

# விமானப் போக்குவரத்து அமைச்சை அமரதுங்கவுக்கு வழங்க சிபார்சு

கொழும்பு,நவ.29

முன்னாள் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு வேறொரு அமைச்சுப் பொறுப்பை வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஆலோசனை கூறியிருக்கிறார். இத்தகவலை ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இதற்கென போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சை இரண்டாகப் பிரித்து விமானப் போக்குவரத்து அமைச்சை முன்னாள் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிற்கு வழங்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை கூறியுள்ளார்.

அதேபோன்று முன்னாள் ஊடக அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கு வேறொரு அமைச்சுப் பொறுப்பை வழங்குமாறும், ஜனாதிபதி பிரதமரைக் கேட்டுள்ளார்.

பாதுகாப்பு, உள்துறை மற்றும் ஊடக அமைச்சுக்களின் பொறுப்புக்களை ஜனாதிபதி ஏற்றிருப்பதாலேயே பிரதமருக்கு இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை-

விடுதலைப் புலிகள் இயக்கத்தை விமர்சனம் செய்ய வேண்டாமென அரச ஊடகங்களுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார் என்று வெளிவந்திருக்கும் செய்தியை ஜனாதிபதி செயலகம் முற்றாக நிராகரித்திருக்கின்றது. (ஓ)

# குருநகரில் இன்று மருத்துவமுகாம்

குருநகர்,நவ.29

குருநகரில் இன்று இலவச மருத்துவ முகாம் நடைபெற உள்ளது. குருநகர் சனசமூக நிலையத்தில் இன்று காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4மணி வரை இச்சேவை நடைபெறும். குருநகர் மக்களின் நன்மை கருதி யாழ்.கடற்றொழில் திணைக்களமும், குருநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து இச்சேவையை நடத்துகின்றன. (ஓ-51)


## ஸ்ரார் கல்வி நிலையம்

புதிய கல்வியாண்டுக்கான
2004
தரம் 5 முதல் 11 வரையான
வகுப்புக்கள் ஆரம்பம்:
30-11-2003 ஞாயிறு.
*காலை 8.30 மணி*
*மாலை 3.00 மணி*



## Diploma in Hardware Engineering

உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% செய்முறைப் பயிற்சிநெறி, ரஷ்ய தொழில்நுட்பம், எமது மண்ணில் எவரும் கற்கலாம். கணனி பற்றிய முன்னறிவு தேவையில்லை. தமிழிலேயே விரிவுரைகள்.

- ஒரு பிரிவில் 10 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.
- ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு புதிய கணனி வழங்கப்படும்.
- பயிற்சி முடிவில் அக்கணனியை Assembling செய்து Software instalition செய்யவேண்டும்.

முற்றிலும் புதியதாக மறுசீரமைக்கப்பட்ட P II 400MHz 6.2 GB கணனிகள் நம்பமுடியாத மலிவு விலையில் விற்பனையாகின்றன.

| | | |
|---|---|---|
| Assembling | Fault Finding | Software Installation |
| Upgrading | Repairing | Configuring |
| Servicing | Networking | Trouble Shooting |

Lectures By : Mr.R.Rohan,
*Computer Hardware Engineer*
*St.Petersburg State Electrotechnical University of Russia*

Diploma in MS Office
Dip. in Computer programming
Diploma in DTP
Free study Pack

Certificate Courses
* MS Word * MS Excel
* MS Access * C++
* Visual Basic 6.0
* Page Maker * Corel Draw
* Photo Shop

ஆரம்பம் 01.12.2003

NORTH LANKA
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
பிரதான வீதி, (M.P.C.S.) அருகில், சங்கானை.
(25154) (15-13-21)



PRINCE
துருபிடிக்காத
உலோக கிச்சன் சிங்க்
பிரின்ஸ்
நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கல்
பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள ஏனைய கிச்சன் சிங்குகளைவிட விசேஷமானது.



15 வருட உத்தரவாதம் கொண்டது.

ஏக விநியோகஸ்தர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹாட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
காட்சியறை: 518, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 324261-5, 337283-5, 436779 பெக்ஸ்: 446554
295, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 573666
விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Access Graphics

# புலிகளை வெறுத்துவந்த ஜனாதிபதி இன்று அவர்கள் பக்கம் சாயும் மர்மம்!

**விடுதலைப் புலிகளை நம்பமுடியாது; மிகவும் கொடியவர்கள் எனக் கடந்த மாதம் வரை ஜனாதிபதி கூறி வந்தார். ஆனால், தற்போது விடுதலைப் புலிகளுக்கு நற்சான்றிதழ் வழங்க முண்டியடிக்கிறார். இதில் ஜனாதிபதியின் எந்த நிலைப்பாடு விசுவாசமானது, இதுவரை சுமத்தப்பட்ட குற்றங்கள் பொய்யானவையா என்பன குறித்து ஆராய்கிறார் பத்திரிகையாளர் காமினி வியன்கொட.**

"யுத்தநிறுத்தம் பேணப்பட்ட காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் அதனை ஒழுங்காகக் கடைப்பிடித்தனர்."

இது நவம்பர் 14ஆம் திகதி 'பினான்ஷியல் ரைம்ஸ் ஒவ் லண்டன்' (Financial Times of Londan) என்ற பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளியிட்ட கருத்தாகும்.

"தென்பகுதிச் சிங்கள இனத்தவரின் முக்கிய அரசியல் தலைவர்கள் இருவரிடையே இடம்பெற்றுவரும் மோதலால் விடுதலைப் புலிகள் தரப்புக்கு இலாபம் கிட்டுகிறதல்லவா?" என்ற பத்திரிகையாளரின் கேள்விக்குக் கீழ்க்கண்டவாறு பதிலளித்தார் ஜனாதிபதி.

"விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவில்லையென நான் கூறவரவில்லை. அவர்களது நடவடிக்கைகளில் தற்போது குறிப்பிடத்தக்க அளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால், விடுதலைப் புலிகள் தற்போது பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வது பற்றி நான் குறிப்பிட்டாக வேண்டும். அவர்கள் தற்போதும் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகவும் ஏ-9 பாதையைக் கைபற்றுவர் எனவும் சிலர் கருத்து வெளியிட்டு வருவதை நான் அறிவேன். ஆனால், இக்கருத்துத் தவறானது என்பதை விடுதலைப் புலிகள் தமது செயற்பாடுகள் மூலம் நிரூபித்து வருகின்றனர். அவர்கள் மிக்கபொறுப்புணர்வுடன் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். எனக்கு இதனை எனது பாதுகாப்புப் பிரிவினர் உறுதிப்படுத்தியுள்ளனர்" எனவும சந்திரிகா தெரிவித்திருந்தார்.

இவ்விதம் விடுதலைப் புலிகளுக்கு நற்சான்றிதழ் வழங்கியிருப்பவர் வேறு யாருமல்லர்; இதுவரை 'சமாதானத் தேவதை' எனப் பொ.ஐ. முன்னணியினரால் பெருமையாகக் குறிப்பிடப்பட்ட அம்முன்னணியின் தலைவியான அதிஉத்தம ஜனாதிபதியே அவராவர். போர்நிறுத்தம் கடைபபிடிக்கப்பட்டு வரும்வேளையில் விடுதலைப் புலிகள் அதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி தமது பலத்தை அதிகரித்து வருவதாகவும், தமது நடவடிக்கைகள் மூலம் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தல் விடுத்து வருவதாகவும், இதன் காரணமாக

## வியெஸ்ரி

நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் நலிவடைவதாகவும் இப்பேட்டி வழங்கப்படுவதற்கு இரு வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி கருத்து வெளியிட்டிருந்தமை எமக்கு நன்கு நினைவில் உள்ளது. தற்போது அவர் வெளியிடும் கருத்துப்படி போர்நிறுத்த உடன்பாட்டை உரிய வகையில் ஒழுங்காகக் கடைப்பிடிக்குமாறு பாதுகாப்புப் படை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். இதற்குச் சில நாள்களின் முன்னர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் நடவடிக்கைகளுக்கு எதிர்காலத்தில் எவ்வித இடையூறும் ஏற்படாத விதத்தில் செயற்படுமாறு அவர் தமது முப்படைகளின் தளபதிகளுக்கும் அறிவுறுத்தியிருந்தமை எமது ஞாபகத்தில் உள்ளது. இதுவரையில் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த இறுக்கமான நிலையாலும், விடுதலைப் புலிகள் மீண்டும் யுத்தமொன்றை ஆரம்பிக்கத் தயாராயில்லாத தற்போதைய சூழ்நிலையாலும், அர்த்தமுள்ள, செயற்றிறன் கொண்ட, தற்காலிக நடவடிக்கை வழிமுறையான போர்நிறுத்தத்தை தொடர்ந்து பேணிக்காப்பது ஜனாதிபதிக்கு சிரமமாக அமையாது. ஆனால், அது அத்துணை இலேசானதொரு விடயமுமல்ல.

### சமாதான நடவடிக்கை

போர்நிறுத்தம் என்ற நடவடிக்கையைவிட சமாதான நடவடிக்கை



உன்னதமான, தெளிவான, நீண்டகாலப் பயன்பாட்டு நோக்கில், மதிநுட்பத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டியதொரு செயற்பாடாகும். அது உரிய முறையில், சம்பந்தப்படும் தரப்புக்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்படமுடியாது போனால், போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்க இயலாது போய்விடும் என்பதில் ஐயம் ஏதுமில்லை. போர்நிறுத்தம் என்ற நடைமுறைச் செயற்பாடுகள் சமாதான முயற்சியென்ற அர்ப்பணிப்பில் மட்டுமே தங்கியுள்ளமையே இதற்கான காரணமாகும்.

தற்போது இச்சமாதான நடவடிக்கைகள் சிக்கல்களுக்கு உள்ளாகியுள்ளன. எமது சமாதான நடவடிக்கைகளில் மத்தியஸ்தம் வகிக்கும் தம் பணியிலிருந்து தாம் ஒதுங்கிக்கொள்வதாக நோர்வே அரசு தெரிவித்துள்ளது. நாட்டின் தென்பகுதி அரசியல் நிலை ஸ்திரம் அடையும்வரை தாம் தமது நாட்டுக்குத் திரும்பிச்சென்று அங்கிருந்தவாறே இந்நாட்டு அரசியல் நகர்வுகள் குறித்து அவதானிப்பதென்பதே இறுதியாக அவர்கள் மேற்கொண்ட தீர்மானமாகும். ஜே.வி.பி. மற்றும் சிஹல உறுமய போன்ற இனவாதக் கூட்டத்தினர் இச்சமாதான முயற்சிகளில் மத்தியஸ்தம் வகிப்பதினின்றும் நோர்வேத் தரப்பை வெளியேற்றுமாறு ஜனாதிபதியை இது வரை காலமும் வற்புறுத்தி வந்துள்ளனர். ஜனாதிபதி பொய் கூறுபவராக அல்லது ஏமாற்றுக்காரியாக இருந்தால் மட்டுமே 'இச்சிக்கலை உருவாக்கியது நானல்ல' எனக் கூறமுடியும். எந்த மொழியில் மொழிமாற்றம் செய்யப்பட்ட போதிலும், எவராலும் இலேசில் விளங்கிக்கொள்ளக்கூடிய விதத்தில் நோர்வேத்தரப்பின் பிரதி அமைச்சர் விடர் ஹெல்கிசன் தெரிவித்திருந்த கருத்துப்போன்று சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டுமானால், நாட்டின் பாதுகாப்பு யார் கையில் உள்ளது என்பது குறித்த தெளிவு வேண்டும். நாட்டின் பாதுகாப்புப் பொறுப்பை ஜனாதிபதி தன் வசம் கொண்டுள்ள இன்றைய நிலையில் பிரதமரோ அல்லது அவரது தலைமையிலான அரசோ சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லமுடியாதென்பதே அதனது அர்த்தமாகும். அதாவது, இது மாட்டின் நாணயக் கயிற்றை ஒருவர் தன்கையில் வைத்திருக்கும் நிலையில் மாட்டு வண்டியை வேறொருவரால் செலுத்திச் செல்லமுடியாது என்ற யதார்த்தம் போன்றதாகும்.

### ஜனாதிபதியின் கருத்து

சமாதானம் தொடர்பாகத் தான் பக்கசார்பின்றிச் செயற்படுவதாக முன்னர் பல தடவைகள் கூறிவந்தமை போன்றே ஜனாதிபதி தற்போதும் கூறி வருகிறார். ஒரு சிலர் ஜனாதிபதியின் இக்கருத்து வெளியீட்டைத் தற்போதும் பெறுமதியானதொன்றெனக் கருதுகின்றனர். இது சந்திரனில் முயலொன்று படுத்திருப்பதாகக் கூறும் கதையை விளக்கமற்ற கிராமவாசிகள் கேட்டு நம்புவதற்குச் சமமானதாகும். தற்போது வெளியிடப்படும் கருத்துக்களில் வேறுபாடேதும் இல்லையாயினும் அது உண்மையில் குடும்பப் பாரம்பரியத்தின் வழக்கமான ஏமாற்றுவேலை என்றே கருத முடியும்.

விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகம் தொடர்பான தமது யோசனைகளைச் சமர்ப்பித்த வேளையில் அவை தனியான இராச்சியமொன்றை உருவாக்கும் நோக்கிலான யோசனைகளே எனக் குற்றஞ்சுமத்தி ஸ்ரீல.சு.கட்சி பாம்புபோல் சீறியெழுந்தது. இனவாதக் கூச்சல் போடும் கூட்டத்தினரின் கருத்தும் அவ்விதத்தில் அமைந்ததொன்றே. ஆனால், இன்று ஜனாதிபதி விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த மாற்று யோசனைகள் குறித்து அவர்களுடன் பேசத் தயார் எனத் தெரிவித்து வருகின்றார். அவரது தற்போதைய கருத்துவெளிப்பாட்டின்படி இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக 2001ஆம் ஆண்டில் தம்மால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டம், அண்மையில் ஐ.தே.முன்னணி அரசினால் முனவைக்கப்பட்ட யோசனைகள் மற்றும் விடுதலைப் புலிகள் கடைசியாகச் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாகம் பற்றிய யோசனைகள் என இம்மூன்று யோசனைகளையும் அடிப்படையாகக்கொண்டு பேச்சை ஆரம்பிக்கமுடியும். எனவே, தற்போது பகல் எது? இரவு எது? எனப் பிரித்து அறிந்துகொள்ள முடியாததோர் இக்கட்டான சூழ்நிலையில் நாடு சிக்கிக் கொண்டுள்ளதாகவே கருதமுடிகிறது. என்றோ ஒருநாள் இந்நாட்டின் அரசியல் வரலாற்றை எழுதும் வேளையில் வரலாற்று ஆசிரியர்கள் சிரமத்துக்கு உள்ளாவர் என்பது மட்டும் உண்மை. இருந்தபோதிலும், சமாதான நடவடிக்கைகளுக்கு தாம் எதிரியல்ல என ஜனாதிபதி காரியாலயத்தில் இருந்து செய்தி வெளியிடப்படாததொரு நாளோ, பொழுதோ அல்லது ஒரு மணித்தியாலமோ கிடையாதென்பதே யதார்த்தமாகும்.

### இரட்டை வேடம்

நாட்டில் தற்போது எந்தவொரு பிரச்சினையும் கிடையாதெனக் கூறும ஜனாதிபதி மற்றொருபுறம் செய்தி ஊடகமொன்றுக்குக் கீழ்க்கண்டவாறு கருத்து வெளியிட்டிருந்தார்.

"தற்போது என் முன்னுள்ள இரண்டு வழிகளில் ஒன்றை நான் தெரிவுசெய்தாக வேண்டியுள்ளது. ஒன்றில் இச்செயற்பாடுகள் யாவற்றையும் கைவிட்டு நான் வீட்டுக்குச் சென்று ஓய்வெடுக்கவேண்டும். அவ்வாறில்லாவிடில் பிரதமருடன் கைகோத்து ஒன்றிணைந்து அரசியலில் செயற்படவேண்டும்."

எவ்வாறான சிறுபிள்ளைத் தனமான கருத்து இது? ஆனால், எல்லாவற்றையும் கைவிட்டு வீட்டில்போய் ஓய்வெடுக்கலாம் என்ற எண்ணம் அவருக்கு உருவானது அண்மையில் அல்லவா? நோர்வே நாட்டுப் பிரதி அமைச்சர் விடர் ஹெல்கிசன் வெளியிட்ட கருத்துப் போன்று அண்மைக் காலம் வரை தெளிவாக இருந்த சகல விடயங்களும் கடந்த சில நாள்களாக மட்டுமே தீர்மானம் மேற்கொள்ளமுடியாத அளவுக்கு குழப்பத்தை ஏற்படுத்த ஆரம்பித்தன. ஏற்றுக்கொள்ளப்பட்ட ராஜதந்திர நடைமுறைகள் காரணமாக வெளிநாடுகள் வெளிப்படையாகக் கூறாத விடயம் ஒன்றுண்டு. இந்நாட்டின் தற்போதைய நிலையும், எதிர்காலமும் இவ்விதம் சிக்கல்களுக்குள்ளாவதற்கான காரணம் தனிநபர் செல்வாக்கு பிரபல்யமடைந்துள்ளமையே என்பது இவ் வெளிநாடுகளின் கருத்தாகும்.

### ஓய்வெடுப்பது நல்லது

இவ்விதம் எல்லாவற்றையும் கைவிட்டுவிட்டு வீட்டில் போய் ஓய்வெடுப்பதை ஆரம்பமுதலே ஜனாதிபதி விரும்பாமையே இச்சிக்கலுக்கான அடிப்படைக் காரணமாகும். அவர் அவ்விதம் எல்லாவற்றையும் கைவிட்டு வீட்டில்போய் ஓய்வெடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தாலோ அல்லது அவ்விதம் செய்ய உண்மையில் விரும்பியிருந்தாலோ அவர் இவ்விதக்கருத்தை வெளிப்படுத்தியிருக்க மாட்டார். அவ்விதம் அவர் வீட்டுக்கு போய் ஓய்வெடுக்க விரும்பாதிருப்பது நாட்டின் பொதுமக்களால் பதவியிலிருந்து அகற்றப்படமுடியாத வகையில் அரசமைப்பின் மூலம் பொது மக்களால் தமக்கு வழங்கப்பட்ட பூரண பொறுப்பைத் தான் கொண்டிருப்பதாக அவர் விசுவாசமாக நம்புவதாலேயாகுமென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. உண்மையில் தற்போதைய அரசமைப்பின்படி 2005 ஆம் ஆண்டு டிசெம்பரில் அவ்விதம் எல்லாவற்றையும் கைவிட்டு வீட்டில்போய் ஓய்வெடுப்பதற்கான சூழ்நிலை ஏற்படுவதை முற்கூட்டியே தவிர்ப்பதற்காக ஜனாதிபதி மேற்கொள்ளும் முயற்சியே இவ்விதம் அவர் ஊடகங்களுக்கு தெரிவிக்கும் கருத்து வெளிப்பாடுகளாகும். இருந்தபோதும் இந்நடவடிக்கைகள் "சமாதான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல், அரசமைப்பு விதிகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளல், நாட்டின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்தல் மற்றும் தேசிய பாதுகாப்பை உறுதி செய்துகொள்ளல்" என்ற விதண்டாவாதக் கருத்துக்கள் இன்று பற்பல பெயரிட்டு அழைக்கப்படுகின்றன. ஆனால், மூன்று அமைச்சுப் பொறுப்புக்களைக் கையேற்ற நாள்முதல் இன்றுவரையிலும் சமாதான நடவடிக்கைகளில் நாட்டின் இறைமையையோ, தேசிய பாதுகாப்பையோ பேணிக்காப்பது பற்றி தான் முன்னர் தெரிவித்த தவறான கருத்துக்களைத் திருத்திக்கொள்வதற்கு எதுவித முயற்சிதானும் ஜனாதிபதியால் எடுக்கப்படவில்லை என்பதை நாம் அறிவோம். புரிந்துணர்வு ஒப்



பந்தத்தை மீளாய்வு செய்வது குறித்து எதுவித தகவலும் வெளிவரவில்லை. மணிராசகுளத்தில் விடுதலைப் புலிகள் அமைத்துள்ள முகாம்களை அகற்றுவதற்கான முயற்சியும் எடுக்கப்படவில்லை. திருகோணமலையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அளிப்பவை எனக் குறிப்பிடப்பட்ட புலிகளின் முகாம்களை அங்கிருந்து அகற்றவும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. திருகோணமலையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அளிப்பதாகக் குறிப்பிடப்பட்ட மேலும் பல முகாம்கள் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆயுதங்களை எடுத்து வந்த விடுதலைப் புலிகளின் ஆறு படகுகளை விடுவித்ததாக முன்னாள் பாதுகாப்பு அமைச்சருக்கெதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், ஒரேயொரு நடவடிக்கையை மட்டுமே ஜனாதிபதி மேற்கொண்டார். சகல அரசுடைமையாக்கப்பட்ட பிரபல, முன்னணி ஊடக நிறுவனங்களில் தமக்கு நெருக்கமானவர்களை நியமித்துள்ளார். இந்நடவடிக்கை, ஊடகச் சுதந்திரத்தைப் பேணுவதாகக் காட்டிக் கொள்ளும் முயற்சியா? எனச் சந்தேகிக்க வேண்டியுள்ளது. ★

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்ததால் தெய்வத்துள் வைக்கப்பட்ட பெருந்தகை

**சேர் பொன். இராமநாதனின் 78 ஆவது நினைவுதினம் இன்றாகும்.**

சைவத்தமிழ்மக்கள் தனித்துவமான கலை, கலாசாரம், பண்பாட்டுடன் வாழவேண்டும். அவர்களின சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற உயர்ந்த இலட்சிய நோக்குடன் ஆதமீக வாழ்க்கை வாழ்ந்த பெரியார் சேர் பொன். இராமநாதன் ஆவார். அவர், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த காரணத்தால் மக்களால் தெய்வத்துள் வைக்கப்பட்டு போற்றப்படுகின்றார்.

ஆன்மீகமும் அறிவியலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு வாழவேண்டுமென்ற சிந்தனையுடன் அவர் செயலாற்றியதன் பிரதிபலிப்பே பரமேஸ்வராக் கல்லூரியாக வித்திடப்பட்டு இன்று பல்கலைக்கழக விருட்சமாக பரிணமிக்கின்றதெனலாம்.

1815 ஆம் ஆண்டு பிறந்த சேர் பொன். இராமநாதன் சட்டப்பயிற்சியும், நீதிபரிபாலன பயிற்சியும் பெற்றவர். 1892 ஆம் ஆண்டு இலங்கை அரச சட்டநிரூபண சபையில் தமிழர் பிரதிநிதியாக சேவையாற்றினார். மகளிர் கல்விக்கென 1913 ஆம் ஆண்டில் மருதனார்மடத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரியை ஸ்தாபித்தார்.

'கற்றலின் பயன் இறைவன் நற்தாள் தொழுதல்' என்பதற்கான காரணத்தால் மருதனார்மடத்தில் சிவாலயத்தையும் யாழ். பரமேஸ்வராக் கல்லூரியில் பரமேஸ்வரன் ஆலயத்தையும் நிர்மாணித்தார். கொழும்பில் அவர் அமைத்த சிவன் கோவில் தமிழர் தம் வரலாற்றுக்கு பெருமையளிப்பதாகும். இவை இன்றும் சிவாகம நெறி வழுவாது நித்திய நைமித்தியங்களைக் கொண்டிருப்பது அவரது ஆத்மீகசேவையின் பிரதிபலிப்பெனலாம்.

நல்லைத் திருமகன் நாவலர் பெருமானின் தொடர்பு அமரருக்கு ஆத்மீக சிந்தனைகளை எழுச்சிபெற வைத்தது. தமிழகத்தைச் சேர்ந்த சுவாமி அருட்பரானந்தாவின் ஆசியுடன் தமிழில் சமய நூல்களை வெளியிட்டார் சேர் பொன். இராமநாதன்.

ஆத்மீகம் என்பது தனியொரு



மதத்துக்கோ, இனத்துக்கோ, சமூகத்துக்கோ சொந்தமானதல்ல என்பதால் பௌத்தர்கள், இஸ்லாமியர்களுக்கும் அவர் செய்த சேவைகள் போற்றத்தக்கவை.

தர்மத்தின் மூலம் சமயம் காப்போம் என்ற அடிப்படையில் தேசியத் தலைவராக விளங்கிய சேர் பொன். இராமநாதனது அடிச்சுவடுகளில் நாமும் தொடர்வோமாக.


**சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்.**

## தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை-2003
## மாதிரி வினாத்தாள் இல-07

**வினாத்தாள்-I** **நேரம் : 45 நிமிடங்கள்**

● கீழ் உள்ள வினாக்களில் வேறுபட்ட தொடர்பை உடைய படத்தை தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.


01. 
(1) (2) (3) (4)

02. 
(1) (2) (3) (4)

● கீழுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள சொற்களுக்கு மிகவும் பொருத்தமான உரு எது எனத் தெரிந்து கீறிடுக.

03. அழகு, மதிப்பு, அலங்காரம்

(1) (2) (3)

04. ஒலி, ஒளி, தகவல்

(1) (2) (3)

● கீழ் உள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்ட மூன்று கூற்றுக்களுள் ஒன்று பிழையானது. அதனைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

05. (1) சூரியன் உதித்ததும் தாமரை மலர்கள் மலர்ந்தன.
(2) நுளம்பின் பற்கள் மிகவும் கூரானவை.
(3) ரோசாப் பூக்களின் மணம் மூக்கைத் துளைத்தது.
( )

06. (1) இரவு வானத்தில் நட்சத்திரங்கள் தெரிந்தன.
(2) குதிரை மிகவும் வேகமாக ஓடும்.
(3) தென்னை மரக்கிளையில் காகம் கூடுகட்டியிருந்தது.
( )



● சரியான விடையின் கீழ்க் கோடிடுக.


07. ஒரு சிறுமி இறப்பர் வளையத்தைக் கொண்டு ஆணி அடிக்கப்பட்ட பலகை ஒன்றில் கீழே காட்டியவாறு முக்கோணி ஒன்றை அமைத்தாள். அவள் பின்னர் P என்ற உச்சியை Z க்கு மாற்றினாள்.
R இலுள்ள கோணத்திற்கு என்ன நடந்தது?


(1) சற்றுப் பெரிதானது.
(2) இருமடங்கு பெரிதானது.
(3) அது மாற்றமடையாமல் இருந்தது.
(4) சற்றுச் சிறிதானது.

08. மேலுள்ள செயற்பாட்டின் போது R இல் அமையும் கோணம்.
(1) செங்கோணம் (2) செங்கோணத்திலும் குறைய
(3) செங்கோணத்திலும் கூட (4) கூறமுடியாது

09. பின்வரும் எப்பெயரின் எழுத்துக்கள் யாவும் நேர் கோடுகளாலானவை?
(1) ARJUNA (2) RANI
(3) SHIROMI (4) NILANTHI

10. இது சதுரமுகி ஒன்றின் விரித்த வடிவமாகும்.

பின்வரும் சதுரமுகிகளில் எது திண்மமாக்கிய சதுரமுகியின் ஒழுங்கமைப்பு அன்று?

(1) (2) (3) (4)

11. எந்தக் கடதாசித்துண்டு மடிப்பு விரிக்கப்படும் போது வடிவம் ""ஐ மாத்திரம் காட்டும்.

(1) (2) (3) (4)

● கீழே தடித்த எழுத்திலுள்ள கூற்றுக்களை நாம் உண்மையென ஏற்றுக்கொண்டால் அவற்றை அடுத்துவரும் மூன்று கூற்றுக்களுள் ஒன்றும் உண்மையாயிருக்கும். அதன் கீழ்க் கோடிடுக.

12. மீன்களில் சில குட்டியீனுவன. சுறாமீன் குட்டியீனும் ஆகவே,
(1) மீன்களில் சில முட்டையிடுவன.
(2) சுறா மட்டுமே குட்டியீனும் மீன்.
(3) பல மீன்கள் முட்டையிடுகின்றன.


13. என்னிடம் கதைப்புத்தகங்களுமுண்டு. பெரும்பாலும் நான் கதைகளை வாசிப்பேன், ஆகவே,
(1) என்னிடமிருப்பவையெல்லாம் கதைப்புத்தகங்களே.
(2) நான் எப்பொழுதும் கதைகளையே வாசிப்பேன்.
(3) என்னிடம் வேறு புத்தகங்களுமுண்டு.

14. இலங்கையிலே மிகப்பெரிய நதி மகாவலிகங்கை. களனி கங்கையும் இலங்கையின் பல நதிகளில் ஒன்று. ஆகவே,
(1) களனிகங்கை மகாவலிகங்கையிலும் பெரியநதி.
(2) மகாவலி, களனி கங்கையிலும் பெரியது.
(3) மகாவலி, களனி கங்கையிற் சிறியது.

15. அபர்ணா பெரும்பாலும் தைத்துக்கொண்டேயிருப்பாள். ஆகவே,
(1) அபர்ணா சிலவேளை தைக்காமலிருப்பாள்.
(2) முழுநேரமும் அபர்ணா தைத்துக்கொண்டேயிருப்பாள்.
(3) சிலவேளை அபர்ணா தைத்துக்கொண்டிருப்பாள்.

● எண்கோலத்தை அவதானித்து வெற்றுக் கூட்டுக்குள் வரவேண்டிய எண்ணை எழுதுக?

16. 


17. 


● முதலில் தரப்பட்ட படத்துடன் மிகநெருங்கிய தொடர்புடைய படத்தைத் தெரிந்து கீறிடுக.

18. 
(1) (2) (3) (4)

19. 
(1) (2) (3) (4)

● சரியான விடையைக் கண்டுபிடித்து அதன் கீழ்க்கோடிடுக.

20. ஏதாவது இரண்டு நகரங்களுக்கிடையிலான தூரத்தை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் அலகு.
(1) மில்லிமீற்றர் (2) சென்ரிமீற்றர்
(3) மீற்றர் (4) கிலோமீற்றர்

21. குடிப்பதற்கு மிகவும் உகந்தது.
(1) மழைநீர் (2) ஆற்றுநீர்
(3) கிணற்றுநீர் (4) கொதித்தாறியநீர்

● தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பொருத்தமாக பதத்தைக் கொண்ட சொற்கூட்டங்களைத் தெரிந்து அதன் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.

22. மயில் கானகத்தில் வாழும் பட்சியாகும்.
(1) ஆரணியம், குருவி (2) காடு, உயிரினம்
(3) வனம், பறவை (4) அடவி, உணவு


23. அந்தக்கிராமத்தில் கழனிகளும, பொய்கைகளும அதிகமாகும்.
(1) காடுகள், மலர்கள் (2) வயல்கள், தடாகங்கள்
(3) குளங்கள், ஆறுகள் (4) தோட்டங்கள், ஆறுகள்

● முதலிரண்டு சொற்களுக்கும் இடையேயுள்ள தொடர்பை அவதானித்து மூன்றாவது சொல்லுடன் தொடர்புடைய சொல் எது எனத் தெரிந்து கீறிடுக.

24. [பாலைவனம்] - [பாவம்] [மத்தளம்] - [ ]
(1) தளம் (2) மதம் (3) மனம் (4) தாளம்

25. [ஆதாரம்] - [ஆரம்] [அதரம்] - [ ]
(1) ஆதாம் (2) ஆராதனை (3) அரம் (4) தாரம்

● பின்வரும் உருவை அவதானித்து விடை எழுதுக.




26. இங்கு ஓர் உருவத்துக்குள் மட்டும் உட்பட்டிருக்கும் நட்சத்திரங்கள் எத்தனை? ..............................

27. இரு உருவங்களுக்குள் மட்டும் உட்பட்டிருக்கும் நட்சத்திரங்கள் எத்தனை?

28. மூன்று உருக்களுக்கும் பொதுவாக இடம்பெற்றுள்ள நட்சத்திரங்கள் எத்தனை? ..............................

● 20 பேரைக் கொண்ட ஒரு தொகுதிப் பிள்ளைகளினது வயதும் நிறையும் வரைபில் புள்ளிகளினால் காட்டப்பட்டுள்ளன. அதனை விளங்கி வினாக்களுக்குரிய விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.




29. வரைபுக்கேற்ப 35kg இற்...
களின் எண்ணிக்கை யாது...
(1) 5 (2) 6

30. 13 வயதுக்கு குறைந்த வய...
யாது?
(1) 7 (2) 8

31. 25kg முதல் 40kg வ...
எத்தனை பேர் உள்ளன...
(1) 10 (2) 13

32. 12 வயதுக்கு மேற்பட்ட 30...
களின் எண்ணிக்கை யாது...
(1) 5 (2) 4

● சரியான விடை எழுது...

33. ஒரு வாங்கில் இருவர் அம...
வரின் தாய். மற்றவர் தாயின்...
கும் உள்ள உறவு யாது?

34. 5 ஆடுகள் 5 சாக்குப்புல்லை...
1 ஆடு ஒரு சாக்குப் புல்லை...

35. ஒரு பையில் 3 மஞ்சள்...
பந்துகளும் உள்ளன. ஒரு...
கொள்வதற்குப் பையிலிரு...
யாக எத்தனை பந்துகள்...

● பாடசாலைச் சிற்றுண்டிச்...
அங்கு எனது நண்பியர்க...
இந்திரா எனும் நால்வரை...
எதிரே மற்றதாக வைக்க...
வட்டமான மேசையைச்...
ருந்து தேநீர் அருந்தினர்.
இந்திரா அஞ்சலிக்கு எதிரே...
திலகாவின் வலது கைப்...
அஞ்சலியின் இடது கைப்ப...
அஞ்சலிக்கும் திலகாவுக்கும்...

36. எனது இடது கைப்பக்கத்தி...

37. திலகாவுக்கு எதிரே இருப்ப...

38. திலகாவும் நந்தினியும் ஒ...
அமர்ந்தால் நந்தினியின்...

● பின்வரும் வினாக்கள்...
தரப்பட்டு விளைவு அதனை...
"T" எனவும், அவ்வாறு...
கோட்டில் எழுதுக.

39. சிகிச்சை பெறுகிறார். நோ...

40. மரங்கள் வெட்டப்படுகின்ற...

### வின...

● கீழுள்ள பந்தியை...
வினாக்களுக்கு விடை...
**வீதி வழியே மான் போ...**
**வயதுச்சிறுமியை காற்றாய்...**
**ஒன்று மோதியது. அவ...**
**பேச்சின்றிக் கிடந்தாள்...**
**திருந்த சிறுமிக்கு முதல...**
**சைக்கிள் ஓட்டுநரை தா...**
**சிறுமியின் தாய் தன் ஒ...**
**கோலமாக ஓடி வந்தாள்...**
**பொழுது அவ்வழியால்...**
**அவளுக்கு கைகொடுத்...**
**தாயையும் ஏற்றிக்கொண்...**

01. மோட்டார் சைக்கிளில் மே...
டுள்ளது? ..............................

02. பந்தியிலுள்ள உவமைத்...

03. செஞ்சிலுவைச் சங்கம் எ...

04. காற்றாய்ப் பறத்தல் என்ற...

05. "கைகொடுத்தல்" என்றால்...

06. பந்தியில் உள்ள இணை...

07. கணவனை இழந்த அந்த...
கலாம்? ..............................

● ஒத்த கருத்துள்ள...

08. வீதி ..............................

09. பாதசாரி ..............................

● எதிர்க் கருத்துள்ள...

12. கோலம் ..............................

● பன்மைச் சொல் எ...

14. ஒன்று ..............................

16. மோதியது..............................

18. பந்தியிலுள்ள பெண்பா...
..............................

இற்கு ஏற்பட்ட நிறையுள்ள பிள்ளை
யாது?
(7 (4) 8
த வயதுடைய பிள்ளைகளின் எண்ணிக்கை
(12 (4) 13
வரையான நிறையுடைய பிள்ளைகள்
ள்ளனர்?
(15 (4) 16
ட 30kg நிறையிலும் குறைந்த பிள்ளை
யாது?
(3 (4) 2

எழுதுக.
ர் அமர்ந்துள்ளனர். அதில் ஒருவர் மற்ற
தாயின் மனல்ல. மற்றவருக்கும் அவருக்
யது? ..........................
புல்லை நாள்களுக்குச் சாப்பிடுமாயின்
ல்லை எத்தனை நாள்களுக்குச் சாப்பிடும்?
..........................

ஞ்சள் நிறப் பந்துகளும் 5 சிவப்பு நிறப்
ஒரு மஞ்சள் நிறப் பந்தினைப் பெற்றுக்
லிருந்து ஆகக் குறைந்த எண்ணிக்கை
கள் வெளியே எடுக்கப்பட வேண்டும்?
..........................

ண்டிச்சாலையில் நான் நுழைந்த போது
யர்களுள் அஞ்சலி, திலகா, நந்தினி,
வரைக் கண்டேன். அவர்கள் ஒன்றிற்கு
வக்கப்பட்ட 6 கதிரைகளுடன் கூடிய
யச் சுற்றிப் பின்வருமாறு அமர்ந்தி
னர்.
எதிரில் அமர்ந்திருந்தாள்.
ப்பக்கத்தில் சந்திரா அமர்ந்திருந்தாள்.
கப்பக்கத்தில் நந்தினி இருந்தாள்.
கும் இடையே நான் சென்று அமர்ந்தேன்.
த்தில் இருப்பவர் யார்? ..........................
ருப்பவர் யார்? ..........................
ஒருவரது இடத்தில் மற்றவராக மாறி
ன் வலது கைப்பக்கத்தில் இருப்பவர்

ள் ஒவ்வொன்றிலும் காரணம் முதலில்
தனைத் தொடர்ந்து வருகின்றதாயின்
ாறு இல்லையெனின் "X" எனவும்

நோயாளி ஆனார் ( )
ின்றன. வறட்சி அதிகரிக்கிறது. ( )

**த்தாள் - 2** 1மணி 15 நிமிடங்கள்

வாசித்து 1முதல் 27 வரையுள்ள
எழுதுக.

**பாலத்துள்ளி ஓடி வந்த பன்னிரண்டு
ாய்ப்பறந்து வந்த மோட்டார். சைக்கிள்
அவள் இரத்த வெள்ளத்தில் மூச்சுப்
. பாதசாரிகள் சிலர் மூர்ச்சை அடைந்
தலுதவி செய்தனர். சிலர் மோட்டார்
ாறுமாறாக ஏசினர். தந்தையை இழந்த
ரேயொரு மகளைக் கண்டத் தலைவிரி
ள். செய்வதறியாது திகைத்தாள். அப்
வந்த செஞ்சிலுவைச் சங்க வாகனம்
தது. அதிலிருந்தவர்கள் சிறுமியையும்
ண்டு மருந்துவமனைக்கு விரைந்தனர்.**

வேகத்தினை எதற்கு ஒப்பிட்டுக் கூறப்பட்
..........................
தொடர் எது? ..........................
த்தகைய நிறுவனம்? ..........................
ால் என்ன? ..........................
ல் என்ன? ..........................
மொழி ஒன்று எழுதுக? ..........................
ந்த சிறுமியின் தாயை எவ்வாறு அழைக்
..........................

சொல் எழுதுக.
.... 10. மருத்துவம் ..........................
.... 11. ஓட்டுநர் ..........................

சொல் எழுதுக.
.... 13. ஏற்றிக்கொண்டு..........................

ழுதுக.
.... 15. தாய் ..........................
.... 17. வாகனம் ..........................
ல் வினைச் சொல் ஒன்று எழுதுக.
..........................

19. பாடலில் உள்ள ஒன்றன்பால் வினைச் சொல் ஒன்று எழுதுக.
..........................

● **ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

20. பன்னிரண்டு ..........................
21. இரத்தம் ..........................
22. முதலுதவி ..........................
23. மருத்துவ மனை ..........................

● **கீழ்வரும் ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொற்களைப் பந்தியில் இருந்து எழுதுக.**

24. Deer .................. 25. Wind ..................
26. Girl .................. 27. Vehicle..................

● **பின்வரும் பாடல் வரிகள் அழகு, அன்பு, கருணை, வீரம், தேசப்பற்று என்பனவற்றினை வெளிப்படுத்துகின்றன. அவை வெளிப்படுத்தும் உணர்வினை அப்பாடல்களுக்கு எதிரே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

28. காலைத்தூக்கி கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா ..........................
29. புள்ளிப் புள்ளி மானே
துள்ளித் துள்ளி ஓடிவா ..........................
30. உடலில் உறுதி உடையவரே
உலகில் உறுதி உடையவராம் ..........................
31. நண்டின் காலை ஒடிக்காதே
நாயைக் கல்லால் அடிக்காதே ..........................
32. இலங்கை எங்கள் தாய் நிலம்
இணையில்லாத தாய்நிலம் ..........................


● **கீழே தரப்பட்டுள்ள பரிசோதனை அமைப்பை நன்கு அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

33. இங்கு பயன்படுத்தப்பட்ட வில்லை வகை எது? ..........................

34. ஒளிப்புள்ளி விழும் இடத்தில் உள்ள பஞ்சுக்கு யாது நடைபெறும்? ..........................

35. இப்பரிசோதனை மூலம் நாம் அடையும் பயன் பின்வருவனவற்றுள் எது எனத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.
(1) சூரிய ஒளிமூலம் மின்குமிழை எரித்தல்.
(2) சூரியனிலிருந்து பெறும் வெப்பத்தால் உணவு சமைக்கலாம்.
(3) சூரிய வெப்பத்தால் மின்சாரத்தினைப் பெறலாம்.

● **பின்வரும் உருக்கள் உடற்கல்விப் பாடத்தின் போது மாணவர்களால் செய்து காட்டப்பட்ட நிகழ்வுகள் ஆகும். அவை குறித்துநிற்கும் செயற்பாடுகளை தரப்பட்ட விடைகளில் இருந்து தெரிந்து எழுதுக.**
***ஒற்றைச்சில்லவண்டி, கரடிநடை, சீன எழுப்பம், சமநிலையில் நிற்றல், நண்டுநடை, வீச்சலாட்டம்***

36. 37. 38. 39.

.................. .................. .................. ..................

● **கீழ்வரும் வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

40. 45 ரூபாவுக்கு இரண்டு கொப்பிகள் வாங்க முடியும் எனில் 225 ரூபாவுக்கு எத்தனை கொப்பிகள் வாங்கமுடியும்?
..........................
41. சம அளவான 8 தோடம்பழங்களின் நிறை 880 கிராம் ஆகும். அதில் 5 தோடம்பழங்களின் நிறை யாது?
..........................கிராம்
42. தந்தையின் வயது தற்போது மகனின் வயதைப் போன்று 4 மடங்காகும். 6வருடங்களுக்கு முன்னர் தந்தையின் வயது 50 ஆக இருந்தது. மகனின் தற்போதைய வயது யாது?
..........................வருடங்கள்
43. ஒரு வியாபாரி தன்னிடமிருந்த தேனை 150ml கொண்ட 75 போத்தல்களிலும், 75ml கொண்ட 80 போத்தல்களிலும் அடைத்தார். அவரிடம் இருந்த தேனின் அளவு யாது?
..........................லீற்றர் ..........................மில்லிலீற்றர்
44. மாலாவிடம் உள்ள பணத்தைவிட 175ரூபா கூடுதலாக கமலாவிடம் பணம் உள்ளது. இரண்டு பேரிடமும் உள்ள மொத்தப் பணம் 475ரூபா ஆகும். கமலாவிடம் உள்ள பணம் எவ்வளவு?
..........................ரூபா
45. 125கிராம் தேயிலையின் விலை4ரூபா50சதம் ஆகும். 750 கிராம் தேயிலையின் விலை யாது?
..........................ரூபா ..........................சதம்
46. ஒரு பெட்டியில் 3 டசின் சன்லைட் கட்டிகளை அடுக்கலாம். 216 சன்லைட் கட்டிகளை அடுக்குவதற்கு எத்தனை பெட்டிகள் தேவை?
..........................
47. ஒரு புத்தகத்தின் விலை 14 ரூபா ஆகும். ஒரு பேனையின் விலை 6 ரூபா ஆகும். 6 புத்தகங்கள் வாங்கக் கூடிய பணத்திற்கு எத்தனை பேனைகள் வாங்கலாம்?
..........................
48. ஓர் உண்டியலில் 50 சத நாணயங்கள் 25 உம், 1ரூபா நாணயங்கள் 30உம், 2ரூபா நாணயங்கள் 18 உம் இருந்தன. உண்டியலில் இருந்த மொத்தப் பணம் எவ்வளவு?
..........................
49. 350 தோடம்பழங்களில் 2/7 பங்கு அழுகிவிட்டன. மிகுதியாக உள்ள நல்ல பழங்கள் எத்தனை?
..........................

● **பின்வரும் தாவரங்களைக் கொண்டு வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**
வாழை, நெல், பாகல், ஈரப்பலா, பனை

50. அதிக நீர் வழங்க வேண்டிய தாவரம் எது? ..........................
51. வேரின் மூலம் இனம் பெருகும் தாவரம் எது? ..........................
52. நிலக்கீழ்த் தண்டுள்ள தாவரம் எது? ..........................
53. பற்றி ஏறும் தாவரம் எது? ..........................
54. நீர் வழங்கி வளர்க்கத் தேவையற்ற தாவரம் எது? ..........................


● **பின்வரும் பாடல்கள் எதனைப்பற்றிக் கூறுகின்றன என்றும் "அ" பகுதியிலும் அவற்றை இயற்றியவர்கள் யார் என்றும் "ஆ" பகுதியிலும் எழுதுக.**

55. மீன்பாடும் நகரம்-காற்று
மிதந்து வரும் நகரம் (அ) ..........................
தேன் ஓடும் நகரம் -வளர்
தென்னை மர நகரம் (ஆ) ..........................

56. பாடுபட்டு உழுபவர்
பலனும் கண்டு தருபவர் (அ) ..........................
நாடு வளர வாழ்பவர் நன்கு
வாழ்க வாழ்கவே! (ஆ) ..........................

57. கல்லும் மலையும் குதித்து வந்தேன்-பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி யெங்கும்- நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்
(அ) ..........................
(ஆ) ..........................

● **பின்வரும் படங்களின் பெயர்களை ஆங்கிலத்திலும் தமிழிலும், சிங்களத்திலும் எழுதுக.**

| படம் | ஆங்கிலம் | தமிழ் | சிங்களம் |
|---|---|---|---|
| 58.  | .................. | .................. | .................. |
| 59.  | .................. | .................. | .................. |
| 60.  | .................. | .................. | .................. |
| 61.  | .................. | .................. | .................. |
| 62.  | .................. | .................. | .................. |

● **பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

63. Morning ..........................
64. Class room ..........................
65. Watcher ..........................

● **பலத்த காற்று வீசி மழை பெய்வதால்... என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலைகளுடன் ஆறுவாக்கியங்கள் எழுதுக.**

66. ..........................
67. ..........................
68. ..........................
69. ..........................
70. ..........................
71. ..........................

**தயாரிப்பு : ஆசிரியர் திரு.வேலுப்பிள்ளை அன்பழகன்.**

# நூல்கள் விற்பனைக்கு

சகலரும் அறிந்திருக்க வேண்டியது

**இலங்கை மீன்வளம் - பயன்படுத்தலும் அபிவிருத்தியும்**

சகலரும் செய்ய வேண்டியது

**கால்நடை அபிவிருத்தி - இலங்கை தமிழ் பிரதேசம்**

ஆசிரியர் - **கலாநிதி அ.சோமசுந்தரம்பிள்ளை**

பி.ஏ.,எப்.சி.ஏ. பட்டயக்கணக்காளர்

விலை: பிரதி ரூ.100/-

கழிவு 10 பிரதிகளுக்கு மேல் வாங்குபவர்களுக்கு 20%

கிடைக்குமிடம்:

*மேர்ச்சன்ற் பினான்ஸ் லிமிட்டெட்,*

555, நாவலர் றோட்,

யாழ்ப்பாணம்.

திங்கள் - வெள்ளி காலை 9 - 12 மணிவரை.

(34-15-16) (24935)



## வானொலி நாடகம் எழுதுவது எப்படி?

**என்ற முதல் வானொலி நாடகத் தமிழ் நூல் வெளிவந்துவிட்டது**



கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை

எழுதியது

170 பக்கங்கள் (25153)(21-13-15) ரூபா 150




# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்

## நல்லையா தளையசிங்கம்

(ராசமணி களஞ்சிய உரிமையாளர்)

தோற்றம்: 23.05.1949 மறைவு: 30.10.2003

எமையெல்லாம் அன்பாக வழிநடத்தி
மறைந்த எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்தாலும்
உங்கள் பூமுகம் எம் நினைவில் நிற்கும்.

அன்னாரின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பலவழிகளில் உதவி செய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இன்று (29.11.2003) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும், ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலடிவீதி
ராசமணி களஞ்சியம்
கோண்டாவில் கிழக்கு.


மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


வனிலா சுவையூட்டப்பட்டது

# Action

Nutritional Food Drink

போஷாக்கு நிறைந்த பானம்







450 கிராம் ரூ.380/=

ஒவ்வொரு 100g *Action* ஆனது பின்வரும் போஷணைகளை வழங்குகின்றது

| | | |
|---|---|---|
| சக்தி | 383.82 | Kcal |
| புரதம் | 20.9 | g |
| கொழுப்பு | 6.6 | g |
| காபோவைதரேற்று | 63 | g |
| மினரல் ஆஷ்(Ash) | 4 | g |
| ஈரப்பற்று | 4 | g |
| **கனியுப்புக்கள்** | | |
| கல்சியம் | 1200 | mg |
| பொசுபரசு | 624 | mg |
| மகனீசியம் | 74.85 | mg |
| சோடியம் | 348 | mg |
| பொற்றாசியம் | 1025 | mg |
| குளோரைட்டு | 633 | mg |
| நாகம் | 15 | mg |
| இரும்பு | 15 | mg |
| செப்பு | 1.5 | mg |
| மங்கனீசு | 2 | mg |
| அயடைன் | 100 | mcg |
| **விற்றமின்கள்** | | |
| விற்றமின் A | 2500 | iu |
| விற்றமின் D | 100 | iu |
| விற்றமின் E | 10 | iu |
| விற்றமின் K1 | 60 | mcg |
| விற்றமின் C | 100 | mg |
| விற்றமின் B1 | 2.2 | mg |
| விற்றமின் B2 | 2.2 | mg |
| விற்றமின் B6 | 2 | mg |
| விற்றமின் B12 | 2.5 | mcg |
| நயசினமைட் | 22 | mg |
| பன்டோதனிக்கமிலம் | 10 | mg |
| போலிக்கமிலம் | 200 | mcg |
| பயோடின் | 100 | mcg |
| பீற்றா கரோட்டின் | 1 | mg |

*Action* இன் போஷணை அனுகூலங்கள்

*Action* ஆனது 11 கனியுப்புக்கள், 13 விட்டமின்கள், புரதம், காபோவைதிரேற்று, கொழுப்பு அடங்கலாக 27 அத்தியாவசிய போஷணை பதார்த்தங்களை முழுக்குடும்பத்திற்கும் (1 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகள்) வழங்குகின்றது. *Action* பீற்றா கரோட்டினையும் கொண்டுள்ளது.

தயாரிக்கும் முறை

சூடாகவோ குளிர்பானமாகவோ நீங்கள் விரும்பியவாறு பருகலாம்

1) நிரம்பிய இரண்டு கரண்டிகள் *Action* இனை 240ml டம்ளரில் போடவும்.
2) அதற்கு சிறிதளவு இளம் சூடான நீர் சேர்த்து கலக்கவும்.
3) மேலதிக நீர் சூடாகவோ, குளிராகவோ தேவையான அளவு சேர்த்து சுவையான பானத்தை தயாரித்துக் கொள்ளவும்.

Manufactured by :
Astron Limited,
688, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel: 2636741 Fax: 2636173 E-mail: astron@astron.lk

(31-408)

# இடைக்கால நிர்வாகம் ஏற்படின் குற்றச்செயல்கள் குறைந்துவிடும்

19ஆவது செவ்வி



அரசு - புலிகள் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் தமிழர் பகுதியில் போர் நின்றதைத் தவிர வேறு ஏதாவது முன்னேற்றங்கள் இருக்கின்றனவா என்பது பற்றிய அலசல் இந்தப் பகுதியில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதுவரை செவ்வி வழங்கியவர்களின் கருத்துக்களின்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டதன் படியான மக்களின் இயல்பு வாழ்க்கை தமிழர் தாயகப் பகுதியில் ஏற்படவில்லை என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தல் சொல்லப்பட்ட பல விடயங்கள் இதுவரை நடைமுறைபடுத்தப்படவில்லை என்பது செவ்விகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில், தமிழீழ நீதி நிர்வாகப் பெறுப்பாளர் பரா வழங்கிய செவ்வி இன்று வெளிவருகின்றது.

## நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா கூறுகிறார்...

■ கேள்வி: புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் நீதி, நிர்வாகத் துறையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா?

● பதில்: எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நீதி, நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை மிகவும் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றோம். புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தபின் அக்கட்டமைப்பை விரிவுபடுத்தி முழுமையாக்க ஏற்பாடுகள் செய்துவருகின்றோம்.

வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் சட்டம், ஒழுங்கைப் பொறுத்தவரையில் மக்களின் இயல்புநிலை சீராக, ஒழுங்காக இருந்தது. குற்றச்செயல்கள் முன்பே குறைந்திருந்தன. இப்போது வலுவாகக் குறைந்து காணப்படுகின்றது.

எமது மக்கள் ஒழுக்கம், கலாசாரம், தேசிய உறுதிப்பாடு ஆகியவற்றைக் கடைப்பிடிப்பதால் குற்றச்செயல்கள் குறைந்து காணப்படுகின்றன.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் போன்ற பகுதிகளில் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முன்பு பெரிய அளவில் குற்றச்செயல்கள் இடம்பெறவில்லை. ஆனால், இப்போது பெரிய அளவில் குற்றச்செயல்கள் அந்தப் பகுதிகளில் இடம்பெறுகின்றன.

■ கேள்வி: வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு அதற்கு நீதி, நிர்வாக அதிகாரங்கள் வழங்கப்பட்டால் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் முழுமையாக தமிழீழ நீதி, நிர்வாக சேவை இடம்பெறுமா?

● பதில்: தமிழீழ நீதி, நிர்வாக சேவை வடக்கு - கிழக்கின் சகல பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

குடாநாட்டு இடப்பெயர்வுக்கு முன்னர் மூன்று வருடகாலமாக யாழ்ப்பாணத்தில் எமது நீதி, நிர்வாக சேவை திறம்பட செயற்பட்டது. அப்போது குற்றச்செயல்கள் குறைவாகவே இருந்தன. பாரிய குற்றங்கள் என பத்துக் குற்றங்களே அந்தக் காலப்பகுதியில் இடம்பெற்றிருந்தன. ஆனால், இப்போது மாதாந்தம் 20 முதல் 25 வரையிலான பாரிய குற்றச்செயல்கள் அங்கு இடம்பெறுகின்றன.

பாலியல் வல்லுறவுகள், கொலைகள், பாரிய கொள்ளைகள் என குற்றச்செயல்கள் அதிகரித்துக் கொண்டு போகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக இல்லை.

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபை மூலம் நீதி, நிர்வாகம், சட்டம் ஒழுங்கு எம் வசம் வரும்போது அக்குற்றச்செயல்களை முழுமையாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்போம்.

■ கேள்வி: வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் மூலம் தமிழீழ நீதி, நிர்வாகச் சேவையை சகல பகுதிகளுக்கும் விஸ்தரிக்கும் போது, ஸ்ரீலங்கா நீதி, நிர்வாகச் சேவையுடன் முரண்பாடான நிலை ஏற்பட வாய்ப்பு உண்டா?

● பதில்: இல்லை. நீதி, நிர்வாகம் என்றால், தமிழ்மக்களுக்கு ஒரு நீதி, நிர்வாகம் தான் உண்டு. தேசியத் தலைவரின் வழிநடத்தலில் அவரின் கட்டமைப்புக்குள்தான் அந்த நிர்வாகம் இருக்கும்.

யாழ்ப்பாணத்தில் முன்னர் தமிழீழ நீதி, நிர்வாகம் நடைமுறையில் இருந்த சமயம் ஸ்ரீலங்காவின் சட்டவாளர்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கினார்கள். அந்தநேரத்தில் அங்கு பணிபுரிந்த 50இற்கு மேற்பட்ட ஸ்ரீலங்காவின் சட்டவாளர்களின் ஒத்துழைப்பு எமக்குக் கிடைத்தது. எதிர்காலத்திலும் அவர்களின் ஒத்துழைப்பு எமக்குக் கிட்டும். அதில் எந்தவித சந்தேகத்துக்கும் இடமில்லை. எமது நீதிமன்றத்தில் சட்டவாளர்களாகப் பணியாற்றிய சிலர், இன்று அங்கு நீதியாளர்களாகக் கடமையாற்றுகின்றனர். எமது நீதி, நிர்வாக சேவை நல்ல ஆள்பலத்துடன் இயங்குகின்றது. எமது சட்டக்கல்லூரியில் இருந்து வெளியேறிய 125 சட்டவாளர்கள் தற்சமயம் பணிபுரிகிறார்கள்.

கூடுதலான சட்டவாளர்கள் பணிபுரிவதால் எமது நீதி, நிர்வாக சேவையை வடக்கு - கிழக்குக்கு விஸ்தரிப்பதில் எந்தவித சிக்கலும் இருக்கப்போவதில்லை.

■ கேள்வி: என்றுமில்லாத அளவுக்கு யாழ். குடாநாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து உள்ளது. இந்த நிலையைப் போக்க எந்தவிதமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கருதுகிறீர்கள்?

● பதில்: தமிழீழ காவல்துறையும் தமிழீழ நீதி, நிர்வாக சேவையும் குடாநாட்டுக்கு விஸ்தரிக்கப்படவேண்டும். அப்போது குடாநாட்டில் குற்றச்செயல்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும்; முழுமையாக, முற்றாக நிறுத்தப்படும்.

முன்னர் யாழ்ப்பாணத்தில் நாம் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டே இதைச் சொல்கிறேன். அக்காலகட்டத்தில் பாரிய கொலைகளோ, பாலியல் வல்லுறவுகளோ, கொள்ளைகளோ இடம்பெறவில்லை.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வடக்கு-கிழக்கில் முழுமையாகக் குற்றச் செயல்களைக் குறைத்து மக்களுக்கு இயல்பு வாழ்க்கையை எம்மால் ஏற்படுத்த முடியும்.

■ கேள்வி: தமிழீழ நீதி, நிர்வாக சேவையில் மரணதண்டனை முறை தொடர்கிறதா? நிறுத்தப்பட்டுள்ளதா?

● பதில்: தமிழீழ நீதி, நிர்வாக சேவை ஆரம்பிக்கப்பட்டு பத்தாண்டுகள் கழிந்துள்ள இந்நிலையில், எமது நீதிமன்றங்கள் மூலமாக 29ஆயிரம் பிணக்குகள் கையாளப்பட்டு தீர்வுகள் காணப்பட்டுள்ளன. இக்காலத்தில் பாரிய குற்றத்தின் பேரில் நால்வருக்கே மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்பாடு நடைமுறைக்கு வந்தபின் எவருக்கும் மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்படவில்லை. சிறைத்தண்டனைத் தீர்ப்புந்தான் வழங்கப்படுகின்றது.

தமிழ்மக்களின் பிரச்சினைக்கு தீர்வு கண்டு, நிரந்தரமான சூழ்நிலை ஏற்படும் போது, மரணதண்டனைத் தீர்ப்பு நிறுத்தப்படும் என்று எமது தேசியத் தலைவர் தெரிவித்துள்ளார்.

நெருக்கடியான சூழலில் குற்றச் செயல்களை முழுமையாகத் தடுக்க மரணதண்டனைத் தீர்ப்பு வழங்குவது தவிர்க்கமுடியாத ஒரு விடயம்.

மரணதண்டனைத் தீர்ப்பு நான்கு குற்றங்களுக்கே வழங்கப்படுகின்றன. பாலியல் வல்லுறவு, கொலை, பாரிய கொள்ளை, போதைவஸ்து ஆகியவை தொடர்பான குற்றங்களுக்கே மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்படும் என்று எமது நீதி, நிர்வாக சேவை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. போதைவஸ்து தொடர்பான குற்றச்சாட்டுகள் இங்கு இல்லை. ஏனைய குற்றச்சாட்டுகளின் பேரில் நால்வருக்கு மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிருபிக்கப்பட்டு, அவர்களால் சமூகத்துக்கு பாதிப்பு ஏற்படும் எனக் கண்டறியப்பட்டே இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

■ கேள்வி: அண்மையில் வன்னியில் ஏ-9 வீதியில் தென்னிலங்கையைச் சேர்ந்த இருவரிடம் இருந்து ரி56 ரக துப்பாக்கி கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் எந்த நிலையில் உள்ளன?

● பதில்: சட்டத்தின் முன் சகலரும் ஒன்று தான். இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மீதான விசாரணை நீதிமன்றத்தில் தற்சமயம் உள்ளது. பிரஸ்தாப நபர்களை தமிழீழ காவல்துறையின் புலன் விசாரணைக்குழுவினர் தற்சமயம் விசாரணை செய்துவருகின்றனர்.

இவர்கள் மீதான விசாரணை பூர்த்தியடைந்து குற்றம் நிருபிக்கப்பட்டால் எமது சட்டப்படி அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படும். குற்றம் நிருபிக்கப்படாதவிடத்து அவர்கள் விடுதலை செய்யப்படுவர்.

■ கேள்வி: தமிழீழ நீதி, நிர்வாக நியாயாதிக்கப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசத்தில் வாழும் மக்கள், தமது பிணக்குகளைத் தீர்க்க தமிழீழ நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றதா?

● பதில்: தமிழீழ நீதி, நிர்வாக சேவை தமிழ்மக்களின் சேவையாக இயங்குவதால், வடக்கு - கிழக்கில் எந்தப் பகுதியில் உள்ள எவரும் எமது நீதிமன்றங்களின் உதவியை நாடலாம். வழக்காளியும் எதிராளியும் விரும்பி எமது நீதிமன்றத்துக்கு வந்தால் உரிய தீர்வை எம்மால் வழங்கமுடியும்.

அத்தோடு, எமது நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை முடிவுறாத நிலையில் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் சென்றவர்களை விசாரணைக்காக எமது நீதிமன்றத்துக்கு அழைக்கின்றோம். எமது எல்லைக்குள் விபத்து நடந்து சம்பந்தப்பட்டவர் வேறு பிரதேச ஆஸ்பத்திரியில் இறக்கும் பட்சத்தில் அது தொடர்பான வழக்கு எமது நீதிமன்றத்தில்தான் நடக்கும்.

■ கேள்வி: தமிழீழ நீதிமன்றில் ஒரு வழக்கில், ஒரு பிள்ளையின் தந்தை யார் என்பதைக் கண்டறிய விசாரணை இடம்பெற்றது. அந்த வழக்கு யாழ். நீதிமன்றத்துக்கு மேல் விசாரணைக்கு மாற்றப்பட்டதாகக் கூறப்பட்டது. அது பற்றி...?

● பதில்: இதுதொடர்பான வழக்கு எமது நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு குற்றம் நிருபிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர் எம்மால் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். அந்தப்பிள்ளையின் தந்தை அவர்தான் என்பதை கண்டறிய மரபணுப் பரிசோதனைக்காக அந்த வழக்கு ஸ்ரீலங்காவுக்குச் சென்றது.

அங்கு இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு மரபணுப் பரிசோதனை செய்யப்பட்டு சம்பந்தப்பட்டவரே பிள்ளையின் தந்தை என நிருபிக்கப்பட்டது. பின்னர் அந்த அறிக்கை எமது நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டது.

அந்த அறிக்கையை எமது நீதிமன்றம் ஆராய்ந்தது. அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவிருக்கின்றது.

■ கேள்வி: வன்னி தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இயங்கும் தமிழீழ நீதிமன்ற செயற்பாடுகள் எவ்வாறு இருக்கின்றன?

● பதில்: திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில், எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் எமது நீதிமன்றங்கள் சிறப்பாக செயற்படுகின்றன.

அப்பிரதேச மக்கள் சட்டம், ஒழுங்கை திறம்பட கடைப்பிடிக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா சட்டவாளர்கள் அந்த நீதிமன்றத்துக்கு வருகிறார்கள். தமிழ் உணர்வுடன் நீதியான நிர்வாகக் கட்டமைப்பான எமது நீதிமன்றங்களுக்கு அவர்கள் வருகின்றனர்.

■ கேள்வி: தமிழீழ நீதி, நிர்வாக கட்டமைப்பை வெளிநாட்டு சட்டவல்லுநர்கள் வந்து பார்க்கிறார்கள். அவர்கள் என்னவிதமான கருத்தைத் தெரிவித்தார்கள்?

● பதில்: வெளிநாட்டு சட்ட வல்லுநர்கள் இங்குவந்து எமது கட்டமைப்பை ஆராய்ந்துள்ளனர்; முழுச்செயற்பாடுகளையும் பார்க்கிறார்கள்; எமது சிறைச்சாலைகளையும் பார்வையிடுகிறார்கள்.

இன்று(26-11-2003) கண்காணிப்புக் குழுவின் சட்ட ஆலோசகர் வந்து எமது கட்டமைப்புக் குறித்து ஆராய்ந்தார்; நீதிமன்றத்தைப் பார்வையிட்டார்.

இப்படியான சிறந்த கட்டமைப்பு இருப்பதை தாம் அறியவில்லை என்று அவர் எம்மிடம் தெரிவித்தார்.

■ கேள்வி: தெற்கில் இருந்து சட்டவாதிகள் தங்கள் நீதிமன்ற செயற்பாட்டை பார்த்தார்களா?

● பதில்: ஆம். தெற்கில் இருந்து வந்த சட்டவாளர்கள், நீதிபதிகள் இங்கு வந்து எமது கட்டமைப்பைப் பார்வையிட்டு, சட்ட நுணுக்கங்களின் விவரங்களைக் கேட்டறிந்துள்ளனர்.

அண்மையில் எமது நீதியாளர்கள் மற்றும் சட்டவாளர்களுக்கு கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது. அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம், யுனிசெவ் ஆகியன இணைந்து இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்தன. சர்வதேச சட்டவாளர்கள் இதில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

மனித உரிமைகள், பெண்களுக்கான உரிமைகள், சிறுவர்களுக்கான உரிமைகள் ஆகியவற்றை சீராக்குவதில் எமது நீதிமன்றம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதை அவர்களுக்கு விளக்கிக் கூறினோம்.

பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகளைப் பேணும் விடயத்தில் எமது நீதிமன்றங்கள் கூடுதல் பங்களிப்பை வழங்குவதாக அவர்களுக்கு விளக்கிக் கூறினோம். அவர்கள் எமது நதிமன்ற செயற்பாட்டை அறிய இக்கருத்தரங்கு பெரிதும் உதவியதாகக் கருதுகின்றோம்.

■ கேள்வி: தமிழீழ நீதிமன்ற செயற்பாட்டை மேலும் விரிவாக்க என்ன வகையான நடவடிக்கைகளை எடுத்துவருகிறீர்கள்?

● பதில்: ஊழல்கள் இல்லாத பிணக்குகளை குறுகிய காலத்தில் தீர்க்கக்கூடிய - பாரபட்சம் இன்றி நீதியை வழங்கக்கூடிய கட்டமைப்பை உருவாக்கிக்கொண்டிருக்கின்றோம்.

தமிழ் பிரதேசம் எங்கும் சுதந்திரமான - பாரபட்சம் அற்ற - மனித உரிமைகளை மேம்படுத்தக்கூடிய - பாமர மக்களின் இயல்பு நிலையை மேம்படுத்தக்கூடிய நீதி, நிர்வாக கட்டமைப்பு ஒன்றை தேசியத் தலைவரின் வழிகாட்டலில் உருவாக்க வேண்டும். அதற்காக முழுமையாக நாங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம். ★



"....எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நீதி, நிர்வாகம் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. சட்டம், ஒழுங்கைப் பொறுத்தவரையில் மக்கள் இயல்பு நிலை சீராக உள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் எமது நியாயாதிக்கத்துக்கு உட்படாத பகுதிகளில் - குறிப்பாக யாழ்ப்பாணத்தில் - குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன.

இடைக்கால நிர்வாகசபை மூலம் நீதி, நிர்வாகம், சட்டம் ஒழுங்கு எம்வசம் வரும்போது அங்கும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்போம். அப்போது முழுமையாக, முற்றாக குற்றச்செயல்கள் நிறுத்தப்படும்.

எமது நீதி, நிர்வாகக் கட்டமைப்பை ஆராய்ந்த வெளிநாட்டு சட்ட வல்லுநர்கள், இப்படியான சிறந்த கட்டமைப்பு இங்கு இருப்பதை தாம் அறியவில்லை என்று கருத்து வெளியிட்டுள்ளனர்.

தமிழ் பிரதேசம் எங்கும் சுதந்திரமான - பாரபட்சம் அற்ற - மனித உரிமைகளை மேம்படுத்தக்கூடிய - பாமர மக்களின் இயல்பு நிலையை மேம்படுத்தக் கூடிய - பிணக்குகளை குறுகிய காலத்தில் தீர்க்கக்கூடிய நீதி, நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றைத் தேசியத் தலைவரின் வழிகாட்டலில் உருவாக்கவேண்டும். அதற்காக முழுமையாக நாங்கள் தற்சமயம் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம்..."

**செவ்வி கண்டவர் : குகா**

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர் 1Kg 130/-. சுத்தஞ் செய்தது 1Kg 200/- மற்றும் சேவல், கல்பேட் என்பன விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம் தொடர்பு: மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் (சனியும் ஞாயிறும்) (25174)

புறொயிலர், கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. இலவசமாகச் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தேறிய நிறை 220/- மட்டும். தொடர்பு: S.குமரன், 227, பிறவுண் வீதி, (நரிக் குண்டுக்கு அருகில்) யாழ்ப்பாணம். T.P.: 222 7366, 077 6180675. (25169)

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் Electronic நிறுவை. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (25190)

## கோழிக்குஞ்சு விநியோகம

தரமான Prima, Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 08-12-2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), (முத்திரைச் சந்தையடி, நல்லூர். (25179)

## இசைக் குறிப்புகள்

ஒகன், வயலின், வீணை போன்ற இசைக்கருவிகளுக்கான பக்திப் பாடல்கள், சினிமாப்பாடல்களுக்கான இசைக் குறிப்புகள் (பாகம் 1 - 17) வெளிவந்துள்ளது. தொடர்பு: S.S.ரஜீந்திரன் 75, கோவில் வீதி நல்லூர் (பதிவுத் தபாலிலும் பெறலாம்). (24908)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் இல.226, (பாரத் ஸ்ருடியோவுக்கு அருகில்) மேல் மாடியுடன் கூடிய கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு: இல.39, இந்துக் கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். T.P 021 222 5048. (25176)

## விற்பனைக்கு

மோட்டோ றோலா தொலைபேசி, சோலா என்பன உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 021-2226673. (25182)

தகடு பொருத்தப்பட்ட சுருக்குக் கதவுகள் உடனே விற்பனைக்குண்டு. 16' நீளம் 9½' உயரமுள்ள இரு கதவுகள் 30,000 ரூபா. 8' நீளம் 9½' உயரமுள்ள ஒரு கதவு 15,000 ரூபா. 6' நீளம் 7½' உயரமுள்ள ஒரு கதவு 10,000 ரூபா என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு 41, நாயன்மார் வீதி, நல்லூர். T.P. 021 222 6826. (25168)

## வீடு விற்பனைக்கு

கோவில் வீதி ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் ஒரு பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு தொடர்பு: மா.குலசேகரம், டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். (25149)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1975இல் பிறந்த, 2இல் நட்புச் செவ்வாய், மொத்தக் கிரகபாவம 22, திருவாதிரை நட்சத்திரம், உயரம் 5'3", பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சியைச் சேர்ந்த பட்டதாரி தரத்திலுள்ள மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்புடன் கடித மூலம் தொடர்புகொள்ளவும். வி.இல. 2098, மே/பா, உதயன். (24885)

## தவறிவிட்டது

68/2, இலந்தைக்குளம் வீதி, அரியாலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் இதயராஜ் என்பவரின் தேசிய அடையாள அட்டை (813142490V) விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், வங்கி அடைவுச் சீட்டு, கையடக்கத் தொலைபேசி என்பன மழைக கவசத்துடன் வட்டுக்கோட்டை சந்திக்கும் புளியடிச் சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0777-111142, 021 222 6375 இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.(25176)

# சாவகச்சேரி பிரதேச சபை

**01.01.2004 முதல் 31.12.2004 வரை**

**சந்தை/இறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு விடுவதற்கான**

## கேள்வி அறிவித்தல்

1. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 12.12.2003
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 15.12.2003
3. கேள்வி திறக்கப்படும் திகதி : 16.12.2003 காலை 10.00

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல. | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற்வரி தவிர) | கேள்விப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 1. | கொடிகாமம் சந்தைக் குத்தகை (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு உட்பட) | 1,000,000.00 | 5,000.00 | 500.00 |
| 2. | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 45,000 | 500.00 | 200.00 |
| 3. | கொடிகாமம் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 10,000.00 | 500.00 | 100.00 |
| 4 | கொடிகாமம் சந்தை கருவாட்டுக் கடை இல.01 | 4,000.00 | 150.00 | 100.00 |
| | கொடிகாமம் சந்தை கருவாட்டுக் கடை இல.02 | 4,000.00 | 150.00 | 100.00 |
| 5. | வரணிச்சந்தை குத்தகை | 100,000.00 | 250.00 | 200.00 |
| 6. | வரணிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 250.00 | 100.00 |
| 7. | கைதடிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 25,000.00 | 250.00 | 200.00 |
| 8. | கைதடிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 20,000.00 | 500.00 | 200.00 |
| 9. | கைதடிச் சந்தை குத்தகை | 30,000.00 | 500.00 | 100.00 |

குறிப்பு:
- ★ இறைச்சிக் கடைகளுக்கான சபையால் விதிக்கப்படும் மாத வாடகைகளைச் செலுத்த வேண்டும்.
- ★ கேள்விப்பத்திரக்கட்டணம், கேள்வித்தொகை, மாதவாடகை என்பவற்றுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட VAT (20%) மேலதிகமாகச் செலுத்தப்படவேண்டும்.
- ★ கேள்விப்பத்திரங்கள் கோருபவர்கள் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையைக் கொண்டுவரவேண்டும்.
- ★ கேள்வித் தொகைக்கு மேலதிகமாக 20% VAT வரி செலுத்தப்படவேண்டும்.
- ★ மேலதிக விவரங்களை தலைமை அலுவலகங்களிலும், உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- ★ போதிய காரணங்களால் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.

*சாவகச்சேரி பிரதேச சபை,*
*கொடிகாமம்.*
*25.11.2003* (C/31558) (11-16)

ந.பாலச்சந்திரன்,
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.






உங்களின் சகல தொலைபேசி அழைப்புக்களுக்கும் எந்நேரமும் டயலொக் உடன்

டயலொக்கின் புதிய சேவை நிலையங்கள் இல. 141 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். இல. 47, மத்திய வீதி, திருகோணமலை.

கட்டணங்களை செலுத்துதல், புதிய இணைப்புகளை ஏற்படுத்துதல் (முன்னர் செலுத்தப்பட்ட - கார்ட் மற்றும் பின்னர் செலுத்தும் (பற்றுச்சீட்டு), புதிய தொலைபேசி கருவிகளை வாங்குதல், சார்ஜ் அட்டைகளை (Charged Cards) வாங்குதல், CLI, SMS உட்பட ஏனைய கட்டணத்துக்கான சேவைகளை இங்கே பெற்றுக்கொள்ளமுடியும்.

டயலொக் GSM
எதிர்காலம் இன்றே.



வடமராட்சியில் மாவீரர்தின பிரதான நிகழ்வு எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
இந்நிகழ்வில் கடற்புலிகளின் துணைத்தளபதி செழியன், வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா ஆகியோர் அகவணக்கம் செலுத்துவதையும் அங்கு ஏற்றப்பட்ட ஈகச்சுடரையும் கொட்டும் மழையிலும் அஞ்சலி செலுத்தியோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: கரவெட்டி செய்தியாளர்)*

# வரவு-செலவு திட்டத்தில் வடக்கு-கிழக்குக்கு அரசு ஒதுக்கிய நிதி அற்பத்தொகை



**ஐக்கிய தேசிய முன்னணி அரசின் மூன்றாவது (2004) வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் மதிப்பீட்டின் போது 2003 நவம்பர் [illegible] ஆம் திகதி கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆற்றிய உரையின் தொகுப்பு இது.**

கௌரவ சபாநாயகர் அவர்களே! ஐக்கிய தேசிய முன்னணி அரசின் மூன்றாவது வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் மதிப்பீட்டிற்கான இவ்விவாதத்தில் பேசுவதற்கு எனக்கு நேரம் ஒதுக்கியதற்காக நான் தங்களுக்கு நன்றி கூறுகின்றேன். குறுகிய நேரமே எனக்குத் தரப்பட்டுள்ளதனால் நேரடியாக நான் விடயத்திற்கு வருகின்றேன். நீங்கள் பெரும்பாலும் எதிர்பார்த்திருக்கக் கூடியவாறு நான் இந்த வரவு - செலவுத் திட்டத்தைப் பொதுவில், ஒரு வட - கிழக்குக் கருத்துக் கோணத்திலிருந்தும் குறிப்பாக ஒரு தமிழ்க்கண்ணோட்டத்திலிருந்தும் அணுகவுள்ளேன்.

### உண்மைநிலை

நான் வட - கிழக்கு எதிர்நோக்குகின்ற உண்மைநிலை பற்றிய ஒரு சுருக்கமான மேல்நோக்கை அளிப்பதன் மூலம் எனது உரையை ஆரம்பிக்க விரும்புகின்றேன்.

பத்து லட்சத்துக்கும் கூடிய மக்கள் நாட்டினுள்ளேயும் வெளியேயும் இடம்பெயர்ந்திருக்கின்றார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். பௌதிக ரீதியாக அழிக்கப்பட்டுள்ள வீடுகளும் ஏனைய சொத்துக்களும், அரச இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயங்களும் முகாம்களும், நிலக்கண்ணி வெடிகள், சொத்துரிமைப் பிரச்சினைகள் என்பவற்றோடு உட்கட்டமைப்புகளும் அடிப்படைச் சேவைகளும் இல்லாமை, பயனுள்ள வகையில் மீள்குடியமர்வு இடம்பெறுவதற்குக் குறிப்பிடத்தக்க முட்டுக்கட்டைகளாயுள்ளன. 3[illegible]0,000இற்கும் கூடிய வீடுகள் முழுமையாகவோ, பகுதியாகவோ சேதமடைந்துள்ளனவென்று மதிப்பிடப்பட்டுள்ளதுடன், சேதமடைந்த வீடுகளில் ஏறக்குறைய 60 வீதமானவை முற்றாகக் குடியிருக்க முடியாதனவாகவும் உள்ளன.

இம்மோதல் வட - கிழக்கில் இலகுவில் பாதிப்படையக்கூடிய பல்வேறு குழுவினரையும் உருவாக்கியுள்ளது. இவர்களில் பெண்களும் பிள்ளைகளுமே மிக முக்கியமானவர்களாயுள்ளனர். அகதிகளாகவும், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாகவும் இருப்பவர்களில் 80 வீதமானவர்கள் பெண்களும் பிள்ளைகளுமாக இருப்பதுடன், பொதுமக்களில் ஆகக்கூடியதாக இழக்கப்பட்டவர்களும் அவர்களே யென்று மதிப்பீடுகள் வெளிப்படுத்து கின்றன.

### சுகாதாரத்துறை

தற்போதுள்ள சுகாதார நிறுவனங்களில் ஏறக்குறைய எல்லா நிறுவனங்களும் வெவ்வேறு அளவுகளில் மோதலினால் பாதிக்கப்பட்டுள்ளன - 55 நிறுவனங்கள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ள அதேவேளையில், வேறு 49 நிறுவனங்கள் செயற்படமுடியாத அளவுக்கு மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வட - கிழக்கில் அவசரப் பிரசவ பராமரிப்பை வழங்குகின்ற வைத்தியசாலைகளில் 45 வீதமானவை ஒன்றில் அழிக்கப்பட்டுள்ளன. இன்றேல், செயற்படமுடியாதனவாயுள்ளன. நடைமுறையிலுள்ள பதவியணியில் அதிலும் பிரதானமாகத் தேர்ச்சித் திறனுடைய வகுதிகளில் 41 வீதம் தொடர்ந்தும் வெற்றிடமாயுள்ளது. இதன் விளைவாகச் சுகாதாரப் பராமரிப்புக் கிடைக்கக் கூடிய தாயுள்ளமையிலும் அதனை எட்டக் கூடியதாயுள்ளமையிலும் அதன் தரத்திலும் பெரும் குறைபாடு நிலவுகின்றது. அடுத்தடுத்து வந்த அரசுகள் முறை தவறாது திட்டமிட்டு விதித்த தீவிர கட்டுப்பாடுகளினதும் தடைகளினதும் விளைவாக மருத்துவ வழங்கல்களிலும் சாதனங்களிலும் மனிதவளங்களிலும் மேலும் அநேக அவசியத் தேவைகளிலும் ஏற்பட்ட பாரதூரமான பற்றாக்குறைகளின் நிமித்தம் இவ்விடயங்கள் மேலும் மோசமடைந்துள்ளன.

### கல்வித்துறை

வட - கிழக்கில் கல்வி அமைப்பின் எல்லா அம்சங்களும் ஒன்றில் அழிக்கப்பட்டுள்ளன இன்றேல், கடுமையாகச் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இப்பிராந்தியத்தில் தற்போது செயற்படுகின்ற பாடசாலைகளில் 321 பாடசாலைகள் தற்காலிகக் கொட்டில்களில் இயங்குகின்றன. ஏறக்குறைய 200 பாடசாலைகளை முழுமையாக மீள நிர்மாணிக்க வேண்டியுள்ளது. வட - கிழக்கில் பாடசாலைகளிலிருந்து இடைநடுவில் விலகுகின்ற பிள்ளைகளின் வீதம் 15.8. நாட்டின் எஞ்சிய பகுதியுடன் ஒப்பிடுகையில் இத்தொகை நான்கு மடங்கானதாகும். ஏறக்குறைய 65,000 பிள்ளைகள் பாடசாலை செல்வதில்லையென மதிப்பிடப்படுகின்றது. நிர்வாக அலுவலர்களில் 69% பற்றாக்குறையும், அதிபர்களில் 18% பற்றாக்குறையும், தமிழ்மொழிமூல ஆசிரியர்களில் 18% பற்றாக்குறையும், ஆங்கில ஆசிரியர்களில் 51% பற்றாக்குறையும், மாணவர் தளபாடங்களில் 36% பற்றாக்குறையும், ஆசிரியர் தளபாடங்களில் 52% பற்றாக்குறையும், ஒரு வகுப்பறைக்கு அடிப்படையாக விளங்கும் கரும்பலகைகளில் 51% பற்றாக்குறையும் காணப்படுகின்றன.

### உட்கட்டமைப்பு

வட - கிழக்கின் உட்கட்டமைப்பின் எல்லா ஆக்கக் கூறுகளும் மோதலினால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. போக்குவரத்து உட்கட்டமைப்புத்தான் பெரும்பாலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எல்லா வீதிகளும். இரும்புப் பாதைகளும், பாலங்களும், படகுப் பாதைகளும், தோணித்துறைகளும், துறைமுகங்களும் ஒன்றில் அழிக்கப்பட்டுள்ளன இன்றேல், திருத்தப்படவேண்டியுள்ளன. தொலைத்தொடர்புத் துறையும் மோசமாகப் பின்தங்கியுள்ளது. நாட்டின் எஞ்சிய பகுதியில் நூற்றுக்கு ஏறக்குறைய 10 ஆகவுள்ள மொத்தத் தொலைபேசிச் செறிவுடன் ஒப்பிடுகையில், அது வடக்கில் நூற்றுக்குச் சுமார் 2.9 ஆகவும், கிழக்கில் ஏறக்குறைய 4 ஆகவும் உள்ளது. மின்வலுத்துறையைப் பொறுத்தவரையில் வட - கிழக்குக்கான மொத்த மின்வலுக்கேள்வி கிட்டத்தட்ட 240 மெஹாவாட்டாக இருக்கின்ற போதிலும், சுமார் 110 மெஹாவாட் மட்டும்தான் பூர்த்திசெய்யப்படுகின்றது. முல்லைத்தீவிலும் கிளிநொச்சியிலும் மின்வலு அமைப்புக்கள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன.

### வேளாண்மைக் கைத்தொழில்

வேளாண்மைக் கைத்தொழில் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இத்துறை நீர்ப்பாசனம், கமத்தொழிலும் கால்நடை வளர்ப்பும், கமக்காடு வளர்ப்பு, கமத்தொழில் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. மீன்பிடிக் கைத்தொழிலுடன் சேர்ந்து வேளாண்மை வட - கிழக்குப் பொருளாதாரத்தின் 80% திற்கும் கூடியதற்குப் பொறுப்பாயுள்ளது. எனினும் உயர் பாதுகாப்பு வலயங்கள், இடப்பெயர்வுகள், நிலக்கண்ணி வெடிகள், நோய்களைக் கட்டுப்படுத்தும் பொருள்கள் மீதான கடுங்கட்டுப்பாடுகள், சேதமடைந்த உட்கட்டமைப்பு இராணுவ நடவடிக்கையினால் அழிவு என்பவற்றின் நிமித்தம் இக் கைத்தொழிலின் தரமும் உற்பத்தித் திறனும் கவலைக்கிடமான மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்துள்ளன.

### மீன்பிடிக் கைத்தொழில்

மீன்பிடிக் கைத்தொழிலுக்கும் கடுமையான அடி விழுந்துள்ளது. வட - கிழக்கு வருடாந்தம் 100,000 மெட்ரிக் தொன்னைவிடக் கூடிய மீனை உற்பத்திசெய்யும் வாய்ப்பு வளமுடையது. இருப்பினும் (மீன்பிடிப் படகுகள், மீன்பிடி உபகரணங்கள், ஐஸ்தொழிற்சாலைகள் ஆகிய) சொத்துக்களில் பெரும் பகுதி சேதமாக்கப்பட்டதனால் அல்லது இழக்கப்பட்டதனாலும் உயர்பாதுகாப்பு வலயங்கள், கடற்படை நடவடிக்கைகள், மீனபிடித்தல் மீது இராணுவத்தால் விதிக்கப்பட்ட தொடர்ச்சியான கட்டுப்பாடுகள் என்பவற்றினாலும் தற்போதைய மீன் உற்பத்தி ஆண்டுக்கு ஏறக்குறைய 56,000 தொன்னாக மட்டும் மதிப்பிடப்படுகின்றது. அதன் உண்மையான வாய்ப்புவளத்தை எட்டுவதற்கு இது எள்ளளவும் கிட்டியதாயில்லை.

எனவே, இதுதான் உண்மைநிலையென்று கூடக் கூறமுடியாது. மாறாக உண்மைநிலையின் ஒரு கணநேரத் தோற்றம்தான் இது. அவ்வாறாயின் அச்சந்தரத்தக்க இந்நிலைக்கு அரசின் பதிலென்ன?

### அரசாங்கத்தின் பதில் - 2004 வரவு-செலவுத் திட்டம்

சபாநாயகர் அவர்களே! ஐக்கிய தேசிய முன்னணி அரசின் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் மதிப்பீட்டின்போது நான் கூறியதை இச்சபையின் உறுப்பினர்களுக்கு முதலில் நான் நினைவூட்ட விரும்புகின்றேன். 2002 மார்ச் 27ஆம் திகதி நான் பேசினேன். எனது உரையின் போது வட - கிழக்கு 20 ஆண்டுகால மோதலுக்கு முகங்கொடுத்த ஒரு பிராந்தியமென்பதனால் இயல்பாக விசேட தேவைகளைக் கொண்டதும் ஒரு விசேடமான முற்றுமுழுதாக ஒத்திசைவிக்கப்பட்ட முழுநிறைவான அணுகுமுறை தேவைப்படுகின்றதுமான ஒரு பிராந்தியமென்ற ரீதியில் வட - கிழக்கு எதிர்நோக்குகின்ற தனித்துவமான நிலைமையை அரசு ஒப்புக்கொள்ளத் தவறிவிட்டதென்ற வகையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஏமாற்றத்தை நான் வெளிப்படுத்தினேன். நான் மேலும் கூறியதாவது:-

# நாடாளுமன்றத்தில் கஜேந்திரகுமார் எம்.பி.

“...... இவ்வரவு - செலவுத் திட்டம வட - கிழக்கை நாட்டின் எஞ்சிய பகுதிக்குச் சமமானதாக்குகின்றது. இது சாத்தியமானதா? இது நியாயமானதா? 20 ஆண்டுகளுக்குக் கூடிய ஒரு யுத்தவலயத்தை நாட்டின் ஏனைய பகுதிகளுடன் எவ்வாறு சமமானதாக்கமுடியும்?”

நான் மேலும் சுட்டிக்காட்டியதாவது:-

“.......அரசு வட - கிழக்கை ஒரு விசேட அபிவிருத்தி அழுத்தம் தேவைப்படுகின்றதான, யுத்தத்தால் சேதமடைந்த ஒரு வலயமென வரையறை செய்திருக்க வேண்டும்..... யுத்தத்தினால் அப்பிராந்தியம் எதிர்நோக்கிய வழக்கத்துக்கு மாறான பிரச்சினைகளின் நிமித்தம் வட - கிழக்கைக் குறிப்பாக இலக்குவைத்த கொள்கையைக் கூறுகின்ற ஓர் அத்தியாயத்தை இவ்வரவு - செலவுத் திட்டத்தில் காண நாம் விரும்பியிருப்போம், நீங்கள் விரும்பினால் அதனை “வரவு - செலவுத் திட்டத்தினுள் ஒரு வரவு - செலவுத் திட்டம்” என்று கொள்ளலாம்.

ஆனால், ஐக்கிய தேசிய முன்னணி நாம் கூறியதை அப்போது கேட்க மறுத்தது. பின்னர் 2002 நவம்பரில் இவ்வரசின் 2 ஆவது வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது மீண்டும் ஒரு தடவை அவர்கள் அதே தவறுகளைச் செய்யத் துணிந்தனர். இப்போது ஓராண்டின் பின்னர் மூன்றாவது ஐக்கிய தேசிய முன்னணி வரவு - செலவுத் திட்டம் எமக்குத்தரப்பட்டுள்ளது. மூன்றாவது தடவையாகவும் அதே தவறுகளை நாம் காண்கின்றோம். அரசின் தரப்பில் இக்குறைபாடு மிக அவலமானது. இது வேண்டுமென்றே செய்யப்படவில்லையென்று மட்டும் நான் நம்ப விரும்புகின்றேன்.

முழு வரவு - செலவுத்திட்டத்திலும் ஒரேயொரு பந்தி மட்டும் தான் குறிப்பாக வட - கிழக்குக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. அது வட - கிழக்குப் புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்துக்கு மூன்றாண்டுகளில் செலவிடுவதற்கென 8 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வட - கிழக்குக்கென ஓர் அற்பத் தொகையான 8 பில்லியன் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளமை பரிதாபத்திற்குரியதென நான் கருதுகிறேன். வட - கிழக்கு 8 மாவட்டங்களைக் கொண்டுள்ளது. கணக்கிட்டுப் பார்த்தால் மாவட்டமொன்றுக்கு ஆண்டொன்றுக்கு 333 மில்லியன் ரூபா மட்டும்தான். வட - கிழக்குக்கு வெளியேயுள்ள மாவட்டங்களுக்கு வழமையான பராமரிப்பு வேலைக்கென வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை வெறும் பராமரிப்புக்கு மேலதிகமாகப் புனரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியமர்த்தல் மற்றும் அபிவிருத்தியென்ற அளப்பரிய பொறுப்பை மேற்கொள்ளவேண்டிய வட - கிழக்குக்கு ஒதுககப்பட்ட தொகையைவிடக் கூடியதாகும். புனர்வாழ்வு, மீள் குடியேற்றம் மற்றும் அகதிகளுக்கான அரசின் சொந்த அமைச்சு அதன் “யாழ்ப்பாணத் திட்டத்தில்” மூன்றாண்டு காலப்பகுதிக்குக் குறைந்த பட்சம் 30 பில்லியன் தேவைப்படுகின்றதெனச் சுட்டிக்காட்டியிருந்தபோதிலும் 8 பில்லியன் மட்டும்தான் ஒதுக்கப்பட்டுள்ளதென்பது கவனிக்கத்தக்கது. அத்துடன் ‘யாழ்ப்பாணத் திட்டம்’ கூட முன்னேற்றத்துக்கான பாதையை அடையாளங் காண்கின்ற ஒரு விரிவான ஆவணமாகத் தன்னும் இல்லை.

(மிகுதி நாளை)

# கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியர்
திரு. செ.குணரத்தினம் அவர்களின் பாசமிகு தாயார்

## திருமதி செல்லன் சிவபாக்கியம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

(25193) (32-14-11-12)

---

# புதிய வாழ்வு யோகாசன ஆராய்ச்சி நிலையம்

இன்று ஆரம்பம்

(மானிப்பாய் வீதி, தாவடி-கொக்குவில்)

## வழங்கும்

ஆரோக்கிய வாழ்வுக்கு வழிகாட்டும் யோகாசன வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. ஆசனம், பிராணாயாமம், கிரியா, முத்ரா, தியானம், ஆகிய பயிற்சிகள் அனைத்தும் அளிக்கப்படும்.

### இந்தப் பயிற்சிகள் மூலம் நீங்கள் அடைவது

★ ஆஸ்துமா,ஒற்றைத் தலைவலி, இரத்த அழுத்தம், இடுப்புவலி, மூட்டுவலி, முதுகுவலி, மாதவிலக்கு வலி, கைவலிப்பு, தூக்கமின்மை, ஒவ்வாமை, நீரிழிவு போன்றவற்றிலிருந்து விடுபட்டு வாழ்நாள் நீடித்து, வளம் பெருகி, உடல், மனம், ஆன்மா அளவில் சுகம்பெறும் வழிகாணுதல்

★ உடல், மனம், ஆத்மா ஒருங்கிணைந்த வளர்ச்சி கண்டு தன்னை உணர்ந்து இன்புறுதல்.

★ நினைவாற்றல் அதிகரித்தல், நீடித்த இளமையுடன் இருத்தல்.

★ பிரச்சினைகளை எளிதாக தீர்த்தல்.

★ செயற்படும் திறன், வாழ்க்கைத் தரம் பன்மடங்கு மேம்படுதல்.

★ சமுதாயத்திலும் குடும்பத்திலும் நல்லுறவு மேம்படுதல்.

★ கல்வியில், பணியில் முழுக்கவனம் செலுத்துதல்.

★ சரியான நேரத்தில் சரியான முடிவெடுத்தல்.

★ கடந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் ஊசலாடும் மனம், நிகழ்காலத்தில் நிலைத்தல்.

★ உச்சக்கட்ட விழிப்பு நிலையால் தெளிவான சிந்தனைகள், நூதன யுக்தி, அணுகுமுறை, படைப்பாற்றல்,உள்ளுணர்வு பெற்று சிறந்த முறையில் செயற்படுதல்.

**மாணவர்களின் ஞாபக சக்தியை மேம்படுத்தி பரீட்சையில் வெற்றிபெற விஷேட பயிற்சிகளும் வழங்கப்படும்.**

**ஆரோக்கியம் உள்ளவனுக்கு நம்பிக்கை இருக்கும் நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லா வளமும் இருக்கும்.**

தொடர்புகளுக்கு:

செ.பரமநாதன் (தர்மராசா)
சாயி தொலைத்தொடர்பகம்
மானிப்பாய் வீதி, தாவடி
T.P.3294
6874

ஆசிரியர்:
ம.நேசராஜ் (கண்ணன்)
NATIYAKALAIMANY
(அண்ணாமலைப்பல்கலைக்கழகம் இந்தியா)
Diploma in Yoga therapy
D.Yoga, D.H.I. Home,
M.I.B.R.
M.S.1st Year.
T.P.:077-6150570

பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்
நாள்:29-11-2003
நேரம்:மாலை4.00 மணி
இடம்:சிறுவர் பூங்கா
முன்பள்ளி பாடசாலை,
ஆனைவடி,
ஆனைக்கோட்டை,
மானிப்பாய்.

நீங்களும் புதிய வாழ்வு பயிற்சி பெற்று உங்கள் வாழ்க்கையை ஓர் அற்புதக் கனவாக மாற்றலாமே.

வாருங்கள்;வந்து பயனடையுங்கள்!

(25187)(36-14-11-12)

---

# இன்று மின்வெட்டு

சிலபகுதிகளில் இன்று சனிக்கிழமை பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ளவுள்ளதால் காலை 9.30 மணி முதல் மாலை 5 மணிவரை மின்தடை ஏற்படுமென மின்சாரசபையின் பிரதேச பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை மற்றும் தென்மராட்சி பிரதேசம் ஆகிய பகுதிகளிலேயே மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

இப்பகுதிகளில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் திருத்த வேலைகள் முடிவடைந்தால் மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டது.

# பரிசளிப்புவிழாக்கள்

யாழ்ப்பாணம்,நவ.29

தம்பாட்டியில் உள்ள பிரான்ஸ் கல்வி மேம்பாட்டு நிறுவனத்தின் பரிசளிப்புவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு தம்பாட்டி பொது மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரான்ஸ் கல்வி மேம்பாட்டு மன்றத் தலைவர் க.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சி.செம்மணனும், பிரதம விருந்தினர்களாக தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செ.ராணிமைந்தன், ஊர்காவற்துறைப் உதவி அரச அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வித் துறை விரிவுரையாளர் மா.இளம்பிறைநாதன் மற்றும் தீவக் அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.அருந்தவம் ஆகியோரும் கலந்துகொள்வர். இந்நிகழ்வின் இறுதியில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ஓ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,நவ.29

வல்வெட்டி விநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், கலைவிழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அதிபர் சி. சிவச்செல்வம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தம்பதியினரும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலய கல்விக்கழகப் பொறுப்பாளர் இ. தாயகன், இலங்கை வானொலியின் அறிவிப்பாளர் ஜோக்கிம் பெர்னான்டோ ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-10)

---

# இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

## [29.11.2003]

## றொஷான் (ROSHAN) செல்வராஜா

HAPPY BIRTHDAY



இத்தாலியிலுள்ள **ROME** நகரில் வசிக்கும் செல்வராஜா சுபாஷினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் **றொஷான்** தனது இரண்டாவது பிறந்த நாளை அல்வாயிலுள்ள தனது தாத்தாவின் இல்லத்தில் இன்று (29.11.2003) சனிக்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ்கவென அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பம்மா, பேரன்மார், பேர்த்திமார், மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உறவினர்களும் வாழ்த்துகிறார்கள்.

"தங்கமால்"
அல்வாய்.

(25188) (32-14-11-12)

தகவல்:
ஐ.செல்வராஜா

---

# இடம்மாற்றம்

இல. 162 முதலாம் குறுக்குத் தெருவில் இயங்கி வந்த **மேஷாக் றெக்கோடிங் அன் போட்டோ ஸ்தாபனம்** தற்பொழுது கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டிச் சந்திக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது என்பதை ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(25200) (32-11-12-14) - ஸ்தாபனத்தினர்.

---

இதோ! வீட்டிலிருந்து கொண்டே
பணம் சம்பாதிக்கும் சுயதொழில் ஒன்று!

## கணனியிலிருந்து பொலிமர் இறபர் சீல் செய்யும் பயிற்சி

✦ கவர்ச்சியானது. ✦ நீண்டகாலம் பாவிக்கக்கூடியது. ✦ தெளிவான, நீங்கள் விரும்புகின்ற வடிவங்களில் செய்து பெற்றுக்கொள்ளக்கூடிய கொம்பியூட்டர் பொலிமர் இறபர் சீல் பயிற்சி முதன் முதலாக யாழ். நகரில்நாளை **(30.11.2003)** ஞாயிறு காலை 9.00 மணிக்கும் மாலை 4 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும்.

மேலதிக விவரங்களை அறிந்து பதிவுகளை மேற்கொள்ள தொடர்புகொள்ளுங்கள்:

"யசோ"
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

---

# தென் இந்திய, ஆந்திர, கர்நாடக, பாண்டிச்சேரி, கேரள திருத்தல யாத்திரை

இது எமது 14ஆவது திருத்தல யாத்திரை 60இற்கும் மேற்பட்ட புண்ணிய புராதன ஆலயங்களைத் தரிசிக்கலாம். ஆந்திராவில்: திருப்பதி,புட்டபர்த்தி, சாயிபாபா, ஸ்ரீராகவேந்திரா ஆலயம் உட்பட 10 ஆலயங்களும் கர்நாடகாவில்: கொள்ளூர் மூகாம்பிகை, மஞ்சுநாத சுவாமி கோயில், உடுப்பி கிருஷ்ணா உட்பட 11 ஆலயங்களும் கேரளாவில்: சோட்டாணிக்கரை பகவதி அம்மன், குருவாயூர், ஆரியங்காவு உட்பட 11 ஆலயங்களும், பாண்டிச்சேரியில்: திருநள்ளாறு சனிபகவான் ஆலயம் (நவக்கிரக கோவில்களில் ஒன்று), தென்னிந்தியாவில்: ஆறுபடைவீடுகள், நவக்கிரக கோவில்கள்9, சிதம்பரம், மதுரை, திருச்சி, இராமேஸ்வரம், தஞ்சாவூர், மேல்மருவத்தூர் உட்பட 33 இற்கு மேற்பட்ட ஆலயங்களும் மேலும் திருமணம் தடைப்பட்டு இருப்பவர்களும், குழந்தைச் செல்வம் கிடைக்காமல் இருப்பவர்களும் இருந்தால் அதற்கான பரிகார நிவர்த்தி செய்யும் ஆலயங்களுக்கு விஷேடமாக அழைத்துச் செல்லப்படுவீர்கள் இவை தவிர: மைசூர் அரண்மனை, பிருந்தாவனம் கார்டின், சென்னை மகாபலிபுரம், மெரீனா பீச், அண்ணா நினைவாலயம், M.G.R. நினைவாலயம், கன்னியாகுமரி, விவேகானந்தர் மண்டபம், காந்தி மண்டபம், பூம்புகார், குற்றாலம் ஆகியன. மேல் விவரங்களுக்கு:

T.ஸ்ரீரெங்கநாதன்
T.P.:0777 680102

(C-31528)(32-11-14)

---

# பாசமிகு தந்தையின் 23 ஆம் ஆண்டு நினைவாக

தோற்றம்
05
06
1928



மறைவு
29
11
1980

## அமரர் கந்தையா செல்லத்துரை

(முன்னாள் தலைவர், அரசாங்கப் பொதுச்சேவை தொழிலாளர் சங்கம் - யாழ்கிளை)

| | | | |
|---|---|---|---|
| பருவத்துப் | புயல்போல | எங்கள் | வாழ்வில் |
| பரிவோடு | பாசத்தைப் | பொழிந்த | தலைவா! |
| வருடங்கள் | யுகமாக... | பிறவி | தோறும் |
| வளர்கின்ற | எம்பந்தம் | தொடர | விழைவோம் |
| திருவுருவம் | மறைந்தாலும் | உங்கள் | நினைவுத் |
| திரையகலா | நெஞ்சங்கள் | நெக்கி | உன்ன |
| இருபத்து | மூன்றாண்டு | கடந்து | விட்டோம் |
| எங்களது | அஞ்சலிகள் | ஏற்று | அருள்வீர் |

(25189) (32-11-14)

*788A, பருத்தித்துறை வீதி,*
*முத்திரைச்சந்தி, நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

நினைவழியா நெஞ்சங்கள்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

---

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் துரைராஜா (ஆசாரியார்)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் துரைராஜா ஆசாரியார் அவர்கள் நேற்று (28.11.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

*7, காரைக்காட்டு லேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

(25196)(11-14-32)

தகவல்:
து.விஜயராணி (மகள்)

# JAFFNA COLLEGE

PRESENTS
**Bethlehem's Light**
A CAROL SERVICE
*ON*
*Sunday 30 th November, 2003*
*At*
*4.00 p.m.*
THE CATHEDRAL
VADDUKODDAI

*WE HAVE GREAT PLEASURE IN INVITING YOU AND YOUR FRIENDS.*

PRINCIPAL, STAFF
&
STUDENTS.

20 th Nov., 2003.



இன்று காலை 9.00 மணிக்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறுகின்ற பாலர் கல்விக் கழகத்தின் 16 பாலர் பாடசாலைகள் இணைந்து நடத்தும் 38 ஆவது வருடாந்த கலை நிகழ்வு

**சிறப்புற்றுத் திகழ வாழ்த்துகிறோம்**

பாலர் கலை நிகழ்வு பக்குவமாய் பரிமளித்து வேலர் முருகனருளால் மேன்மையுற்றுத் திகழ்ந்து நல்ல விதமாய் நடந்து நானிலத்தோர் போற்றிட மனமார வாழ்த்துகின்றோம் மகிழ்வுடனே உவந்து!

(பாலர் கல்விக் கழகச் செயற்பாடு நன்கு வளர்ச்சியுற வாழ்த்துகிறோம்)

வளம்பெற வாழ்த்துவோர்:

ராஜா கிறீம் ஹவுஸ்
195/5, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி
(சி-31559)(36-11-16)



**கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன்**

கொமர்ஷல் வங்கி

கலாசார உத்தியோகத்தர் கலையகம் நடத்தும் வருடாந்த

**யாழ். மாவட்டக் கலாசார விழா - 2003**

இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
காலம் : 29-11-2003 சனிக்கிழமை பி.ப. 1.00 மணி
30-11-2003 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணி

**ஊர்வலம்**
காவடி, கரகம், கோலாட்டம், மயிலாட்டம், கம்படி, சிலம்படி, பொய்க்கால் குதிரையாட்டம் தமிழ் மன்னர்கள் வேடம் தாங்கிய கலாசார ஊர்வலம் வண்ணார் பண்ணை சிவன்கோயிலில் இருந்து ஆரம்பமாகி விழா மண்டபம் வரை நடைபெறும்.

**விழா**
வடமோடி தென்மோடி நாட்டுக்கூத்துக்கள், வசந்தன் கூத்து, ஒயிலாட்டம், கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், பட்டிமண்டபம், கவியரங்கம், இன்னிசைக் கச்சேரி எனப்பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அனைவரும் திரண்டு வருக!
கலையின்பம் பெறுக!

கலாசார உத்தியோகத்தர் கலையகம்,
யாழ். மாவட்டம்.


## இதய அஞ்சலி

சுன்னாகம், மயிலணி கந்தசுவாமி கோயில் பிரதமகுருவும், சைவமகா சபையின் ஆலோசகராகவும் விளங்கிய அமரர் சிவஸ்ரீ சு.வரதராஜேஸ்வரக் குருக்கள் அவர்களின் ஆன்மா இறை நிழலில் அமைதிகொள்ள வேண்டி இதய அஞ்சலி செய்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மயிலணி சைவ மகாசபை, சுன்னாகம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

அன்னை மடியில்
08 - 04 - 1933



இறைவன் அடியில்
31 - 10 - 2003

### அமரர் வயித்திலிங்கம் அப்பாத்துரை

*அன்புக் கணவராக, ஆசை மருமகனாக, பிரியமுள்ள மச்சானாக பாசமுள்ள அப்பாவாக, நேசமான மாமாவாக, ஆசைப்பேரனாக வாழ்ந்து உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் பாசத்தையும் நேசத்தையும் அள்ளி வழங்கி வந்த குலவிளக்கே!*

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல துவாளிப் பிள்ளையாரை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (30.11.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் அவரது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் நண்பகல் மதிய போசனத்திலும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

போக்காலை வீதி,
இலையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்.

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.29

டாக்டர் குணரத்தினம் விக்னேஸ்வரன சமயத்துக்கு ஆற்றிய பணியினைக் கௌரவித்து ஏழாலை முத்தமிழ் மன்றம் அவருக்கு தேமதுரக் குரலோன எனனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

ஏழாலை முத்தமிழ் மன்ற சன சமூக நிலைய அரங்கில் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வில் இந்த கௌரவிப்பு இடம் பெறும். டாக்டர் குணரத்தினம் விக்னேஸ்வரனும் செல்வன் சு. கபிலனும் இணைந்து வழங்கியுள்ள 'பண்ணிசைப்பாமாலை' என்ற ஒலிப் பேழையும் இந்த நிகழ்வில் வெளியிட்டு வைக்கப்படும். (ம)

## கசிப்புக் குற்றச் சாட்டில் 6 பேருக்கு நீதிமன்று ரூ.88 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம்,நவ.29

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டமை மற்றும் கோடா வைத்திருந்தமை ஆகிய குற்றச் சாட்டுக்களின் பேரில் ஆறுபேருக்கு யாழ். நீதிமன்றினால் 88 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வில்லியர் வீதி, சோனைத் தெரு, ஜெயசௌந்தரி பாஸ்கரன் என்பவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் 3 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் செலுத்துமாறும்-

அன்னங்கை ஒழுங்கை உரும்பிராயைச் சேர்ந்த பஞ்சலிங்கம் யோகேஸ்வரன், ஆச்சிரம லேன் இணுவிலைச் சேர்ந்த சுந்தரலிங்கம் விக்கினேஸ்வரன், ஸ்ரேசன் முகாம் இணுவிலைச் சேர்ந்த பொன்னுத்துரை லிங்கம்-

இணுவிலைச் சேர்ந்த நடராசா வில்வராசா, உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த தம்பிராசா நிக்ஷன் ஆகியோருக்கு தலா 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் தலா 3 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் செலுத்துமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார். (ம-5-ரி)


**புதிய கல்வியாண்டு-2004**

தரம் I முதல் O/L வரை அனைத்து வகுப்புகளும் ஆரம்பம் : 29-11-2003. சனி காலை 8.30

☆ எமது வழமையான SUPER GRADE ஆசிரியர் குழு.
☆ புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**நாவலர்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.



**நாகம்ஸ்** சுன்னாகம்



பார்த்திபன் கனவு

(C/31060)(12)



**நிரஞ்சனாஸ்** சங்கானை

சிவாஜி, அர்ஜுன் மற்றும் பலர் நடித்த
**மன்னவரு சின்னவரு**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இந்த
GET CARTER



**லஷ்சுமி சினிமா** இணுவில்

விஜய், பூமிகா, வீவேக், மோனால் இன்னும் பலர் நடிப்பில்
**பத்ரி**
10.30, 2.30, 6.30. (பி.நே.)



**லிபேட்டி** அச்சுவேலி



விஜய், ஜோதிகா நடித்த
**குஷி**
தினசரி.: 3.00, 7.00. (பி.நே)



**ராஜா** யாழ்ப்பாணம்

அஜித், மீராஜஸ்மின், கபாலி மற்றும் பலர் நடித்த
**ஆஞ்சநேயா**
காட்சிகள்:10.30,2.30,6.30,9.30(பி.நே.)



**புதிய கணனி வகுப்புகள் ஆரம்பம்**

சிறப்பாக அனைத்துப் பாடசாலை மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.

சிறுவர்களுக்கான "Kids Program" அதாவது 3 வயது முதல் 10 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு ஆங்கில, கணிதம் (Mathematics& English) ஆகிய பாடங்களை கணனி முறை மூலமும், Internet & E-mail வகுப்புக்களும் துரிதப்படுத்தி கற்பிக்கும் நோக்குடன் வகுப்புகள். December 03 இல் ஆரம்பமாகின்றன. அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

சிறப்பாக O/L எடுத்த மாணவர்களுக்கான வகுப்புகளும் மற்றும் "GIT" (A/L Syllabus) க்கான வகுப்புகளும் ஆரம்பிக்கின்றன.

December 15,2003 and January 05,2004 கணனி வகுப்புக்களுக்கான இலவச கருத்தரங்கு 30.11.2003 அன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

CIIT
St. Patrick's College,
Jaffna.
T.P.: 021-2226316


# மரண அறிவித்தல்கள்

## திருமதி நல்லம்மா நடேசன்

**(புளியடி வயிரவர் கோவிலடி, உடுவில் தெற்கு)**

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நல்லம்மா நடேசன் அவர்கள் நேற்று (28.11.2003) வெள்ளிக்கிழமை உடுவிலில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் நடேசன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுபாபதி - வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகளும் வீமன்காமத்தைச் சேர்ந்த ஆறுமுகம் - பொன்னு ஆகியோரின் அன்பு மருமகளும் நாகராசா (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற தங்கராசா, சிங்கராசா (ஓய்வுபெற்ற வனவள உத்தியோகத்தர்), இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலச்சந்திரன் (பிரான்ஸ்), இராசச்சந்திரன் (ஜேர்மனி), சுகுண வசந்தன் (U.K.), சுகுணசபேசன் (பிரான்ஸ்), சுகுணரதி - தெய்வேந்திரம் (இந்து சமய விவகார அமைச்சு, கொழும்பு), சுகன்சன் (U.K.) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தங்கரத்தினம், சுகந்தி (ஜேர்மனி), யோஜினி (U.K), தங்கா (பிரான்ஸ்), தெய்வேந்திரம் (சமூகசேவை உதவி ஆணையாளர், வவுனியா), பிருந்தா (U.K.) ஆகியோரின் அன்பு மாமியாரும் கௌசிகா, கௌசிகன், சோபிகா, துவாரகா, கோபிகன், துஷாந், துஷியங்கா, அபிஷாந், ஹரிணி ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'லட்சுமி வாசா'*
*உடுவில் தெற்கு,*
*சுன்னாகம்.*

தகவல்,
**பிள்ளைகள், மருமக்கள்.**

## திருமதி இளையதம்பி பார்வதி

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த இளையதம்பி பார்வதி நேற்று (28.11.2003) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் பாஸ்கரன், சந்திரன், வாசன் ஆகியோரின் தாயார் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2003) சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 12.00 மணியளவில் கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புனித செபஸ்ரியார் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

தகவல்:
இ.வாசன்
(மகன் - சுகாதார பாதுகாவலர், யாழ் மாநகர சபை)

## வெற்றிவேலு சண்முகதாசன்

**(இளைப்பாறிய உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்)**

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு சண்முகதாசன் அவர்கள் 26-11-2003 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் புஸ்பவதியம்மாவின் அன்புக் கணவரும் சரவணபவானந்தராஜா (சிங்கப்பூர்), சிறிஜெயலக்சுமி, சிறிவரலக்சுமி, சிறிரங்கராஜன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் மல்லிகாதேவி (அவுஸ்திரேலியா), சிவநாதன் (முன்னாள் தொலைத்தொடர்பு பரிசோதகர், ஸ்ரீலங்கா ரெலிகொம், வவுனியா), பாஸ்கரன் (கட்டடத்திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர், வவுனியா), வலரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காயத்திரி, கோபிநாத் (அவுஸ்திரேலியா), ஹரிசுதன், யுகதர்சினி, கோகுல்ராஜ், கோபிகா (வவுனியா), டிலான் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் வெங்கடேஸ்வரதாசன், தேவதாசன், சந்திரா, தவம், குஞ்சு, காலஞ்சென்ற கிருஷ்ணபூபதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மரியநாயகம் (இலங்கை வங்கி, முல்லைத்தீவு), சூசைநாதன் (லண்டன்), அருள்நாதர் (வவுனியா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(30-11-2003) ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 11 மணியளவில் தகனக்கிரியைக்காக தட்சணா ஆலங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல. 16,4ஆம் ஒழுங்கை,*
*கதிரேசன் வீதி,*
*வவுனியா.*

தகவல்:
சிவநாதன் (மருமகன்)
தொ.பேசி இல. 024 2222459

## சரவணை சுப்பிரமணியம்

**(கார் மணியம்-1578)**

புதுத்தோட்டம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (28.11.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னு, செல்வம், கந்தசாமி மற்றும் அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சின்னையா, நாகம்மா, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் இந்திராதேவி (கனடா), ஞானேஸ்வரி, மாலாதேவி, ஸ்ரீபாஸ்கரன் (கனடா), தனபதி (கனடா), ஸ்ரீதரன் (கனடா), உமாதேவி (கனடா), ஸ்ரீகேதரன் (கனடா), ஸ்ரீஜெயந்தன் (கனடா), தர்மினி (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையும் கனகலிங்கம், பழனிதாசன் (தபால் நிலையம், தெல்லிப்பழை), பத்மாவதி, பத்மநாதன் (ஜேர்மனி), பராசக்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2003) சனிக்கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பொற்பதி வீதி,*
*பொற்பதி பிள்ளையார் மேற்கு ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*

தகவல்:
பழனிதாசன் (மருமகன்)

## சாவகச்சேரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினரை நெறிப்படுத்தினார்.

சகதியில் படையினர் மூழ்கி உயிரிழந்த சம்பவத்தின்போது உடன் பயிற்சியில் ஈடுபட்டவர்கள் என்று கூறப்படும் பத்துக்கும் மேற்பட்ட படையினர் நீதிமன்றில் சமுகமளித்தனர்.

நாகர்கோவில் பகுதியில் பயிற்சியில் ஈடுபட்ட சமயம் சகதியில் மூழ்கி உயிரிழந்த படையினரின் பெயர்கள் வருமாறு:-

வி.பி.பண்டா (சார்ஜனட), எம்.டி. சமிந்தா, ஏ.எம்.எஸ்.எக்கநாயக்கா, எஸ்.எஸ்.பி.சிவந்தா, எம்.பி.ஆர். திசநாயக்கா, ஜே.எம்.ஜெயரத்னா, ரி.ஜே. ஜே.அமரசேனா, எம்.பி. விமலசூரியா, ரி.எம்.பிசாரத்னா, ஜே.சி. அழகக்கோன்.

## சமாதான முயற்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் ஆயுதம் ஏந்தக்கூடாது. சமாதான முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று வலியுறுத்தி இருக்கின்றேன். அவற்றைப் பரிசீலிப்பதாக அவர் கூறினார். சென்னை பல்கலைக்கழகத்தில், உலக நாடுகளில் அமைதி என்ற தலைப்பில் நடந்த விழாவில் கலந்து கொண்டு, கிறிஸ் பெட்டன் பேசினார். அவர் பேசுகையில், இலங்கையில் அமைதி நீடிக்க நடக்கும் பேச்சுக்களில் முஸ்லிம்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். போர் தவிர்க்கப்படுவது இலங்கையின் எதிர்காலத்துக்கு நல்லது, சிறுவர்களை இராணுவத்தில் சேர்க்கக்கூடாது என்றும் பிரபாகரனிடம் வற்புறுத்தப்பட்டு இருக்கிறது என்றார்.

## சமாதானத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மென்முறையைத் தழுவி சமரசத்துக்கும், சமாதான முன்னெடுப்புக்கும் எம்மால் முடிந்தவரை முயற்சி செய்து வருகின்றோம்" - என பிரபாகரன் மீண்டும் கூறியுள்ளமையைக் கவனத்திற் கொண்டு கருமமாற்றுவதே இந்த நெருக்கடி மிக்க வேளையில் விவேகமானது.

சமாதானப் பேச்சுக்களில் தான் அக்கறையுடனும் நேர்மையுடனும் உள்ளார் என்பதை பிரபாகரன் தமது உரையில் வலியுறுத்திக் கூறியுள்ளார். இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுக்களை மிக வரைவில் ஆரம்பிக்கும் சூழலை உருவாக்குவதே உடனடித் தேவையாகும்.

"நாம் வன்முறைப் பாதையை விரும்பவில்லை, சமாதான வழியில் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுவதையே விரும்புகிறோம்" - என பிரபாகரன் தமது உரையில் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

- இவ்வாறு செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

**அமைச்சர் ராஜித**

அமைச்சர் ராஜித சேனாரத்ன கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

பிரச்சினைக்கு சமாதான ரீதியாகத் தீர்வு காண - முதன் முறையாக - விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் முன்வந்திருக்கிறார். இது வரவேற்கப்பட வேண்டிய விடயம். இருந்தபோதிலும், ஜனாதிபதி அதைக் குழப்பியடிக்க முற்பட்டால் அதை ஏற்க முடியாது.

இலங்கை வரலாற்றில் ஒருபோதும் கிடைக்காத இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி இறுதித்தீர்வு காண முற்படவேண்டும்.

இன்றைய அரசியல் நெருக்கடி நிலைக்குக் காரணமான ஜனாதிபதி. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உரிய தீர்வுகாண முன்வர வேண்டும். - இப்படி அவர் கூறினார்.

**ஜோசப் பரராஜசிங்கம்**

தமிழக் கூட்டமைப்பு எம்.பியான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவிக்கையில்:-

புலிகளின் தலைவர் பிரபாகரனின உரை நியாயமானது; நடுநிலையானது ஒரு கட்சி ஆட்சி செய்யும் போது சமாதானத்தை ஆதரிப்பதும், அந்தக்கட்சி எதிர்கட்சியானதும் சமாதானத்தை எதிர்ப்பதும் இலங்கை வரலாற்றில் தொன்று தொட்டு இருந்து வரும் விடயமாகும். இதை யதார்த்தபூர்வமாகப் பிரபாகரன் தனதுரையில் குறிப்பிட்டுள்ளார். எனவே, சமாதான ரீதியில் பிரச்சினையைத் தீர்க்க விரும்பும் விடுதலைப் புலிகளின் தலைவரின் கோரிக்கையின் படி தீர்வுகாண உடனயாக முயற்சிக்க வேண்டும் - என்றார்.

## ரூபா 1,680...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோடி ரூபா வழங்கப்படவிருந்தது. அத்தொகையை அங்கீகரிப்பதற்காக அடுத்த மாதம் கூடவிருந்த நாணயச் சபையின் பணிப்பாளர்கள் சபை கூட்டமும் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. நாணயச் சபையின் இந்த உதவியோடு உலக வங்கி வழங்கவிருந்த 960 கோடி ரூபா உதவியும் தாமதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## பிரபா-பெட்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக் கொண்டே சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே எமது கருத்தாகும் இவ்வாறு சரத் அமுனுகம தெரி வித்தார். (ம)

## 7 பேர் கொண்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்கள் பற்றியும் ஆராய உள்ளனர்.

விடுதலைப் புலிகள் தமது சர்வதேச தலைமையிடத்தை தென்னாபிரிக்காவுக்கு மாற்றிக் கொள்வதற்கு திட்டமிட்டு வருகின்றனர் என்றும் -

சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகளுக்கு தென்னாபிரிக்கா உதவிகளை வழங்கவுள்ளது என்றும்- முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புலித்தேவன் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்காவில் இருந்து விமானம் மூலம் புறப்பட்டுச் சென்றனர் என்று கூறப்பட்டது.

இதேவேளை -

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை யாழ் மாவட்டப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி மாவீரர் தின நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ளார். (ம)

## மாறி மாறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

இந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டுமானால், தேசிய நல்லிணக்க அரசு அமைவேண்டும். அதன் மூலம் பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வு காணப்படவேண்டும் என்ற கருத்தை நான் உறுதிபடக் கூறிவந்துள்ளேன். இன்றைய நிலையிலும் அந்தக் கருத்தையே வலியுறுத்துகிறேன்.

இனப்பிரச்சினை தீர்வுக்கான வழிவகைகளைத் இரண்டு பிரதான கட்சிகளும் கொள்கை அடிப்படையில் தேர்ந்தெடுக்க வேண்டும். அதை விடுத்து, மீண்டும் யுத்தம் தான் ஒரே தீர்வு எனப் புலிகளுடன் போரிட நேரிட்டால் இந்த நாடு இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிடும். எனவே, நாட்டின் ஒருமைப்பாட்டைக் கட்டிக் காக்க ஒன்றிணைய முன்வரவேண்டும்.

- இப்படி அவர் மேலும் கூறினார்.

இந்த நிகழ்வில் அமரர் டி.ஏ.ராஜபக்ஷவின் சாதனைகள் மற்றும் அவரின் தீர்க்கதரிசனச் செற்பாடுகள் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நீண்ட உரையொன்றை நிகழ்தினார்.

## பாதுகாப்புக்கு உதவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்புகளை உள்ளடக்கிய 'சமாதான ஆலோசனைக் கவுன்ஸில்' ஒன்றும் அமைக்கப்படும்.

கூட்டுச்சமாதானக் கவுன்ஸில் தனது கொள்கை மற்றும் திட்டங்களை வகுக்கும் போது சமாதான ஆலோசனைக் கவுன்ஸில் தெரிவிக்கும் யோசனைகள், சிபார்சுகள் ஆகியவற்றைத் தீவிரமாகக் கவனத்தில் எடுக்கும்.

சமாதான யோசனைகள் மற்றும் பல்வேறு தரப்புகளால் முன்வைக்கப்படும் ஆலோசனைகள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்வதற்காக, அரசியல் கட்சி சாராத நிபுணர்களைக் கொண்ட பல்வேறு தொழில்நுட்பக் குழுக்களை கூட்டு சமாதானக் கவுன்ஸில் அமைக்கும்.

★ பாதுகாப்பு விடயத்துக்கு ஜனாதிபதி பொறுப்பாக இருப்பார். சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகக் கூட்டு சமாதானக் கவுன்ஸிலுக்கும் அதன் உள்ளடங்கிய பிரிவுகளுக்கும் தேவையான உதவிகளைப் பாதுகாப்புச் செயலர் மூலம் ஜனாதிபதி வழங்குவார்.

★ புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களுக்கு பிரதமர் பொறுப்பாக இருப்பார். கூட்டுச் சமாதானக் கவுன்ஸிலின் கோரிக்கைக்கு அமைய காலத்துக்குக் காலம் - பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்து கவுன்ஸிலுக்கு அவர் அறிவிப்பதோடு கொள்கை விடயங்கள் தொடர்பாக அந்தக் கவுன்ஸிலின் வழிகாட்டல்களை அவர் பெற்றுக் கொள்வார். சமாதானச் செயலகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்கும் பிரதமரே தொடர்ந்து பொறுப்பாக இருப்பார்.

★ 'பாதுகாப்புக்கு உதவும் அமைச்சர்' என்ற பதவிக்கு ஜனாதிபதியுடன் இணங்கி செயற்படக்கூடிய பொருத்தமான ஒருவரை பிரதமர் நியமிப்பார்.

யுத்த நிறுத்த உடன்பாட்டைப் பேணுதல் மற்றும் கண்காணிப்புக்குழுவுடன் நேரடியாகத் தொடர்புபட்ட பாதுகாப்புச் செயற்பாடுகளை - மேல் உரிமைக்கட்டுப்பாடு தம்வசம் இருக்கத்தக்கதாக - வர்த்தமானி அறிவித்தல் மூலம் பாதுகாப்புக்கு உதவும் அமைச்சரிடம் ஜனாதிபதி கையளிப்பார்.

★ சமாதான நடவடிக்கைகள் மற்றும் அவை சம்பந்தமான விவகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் வரக்கூடிய சகல - பொதுவான - விடயங்களிலும் தேவைப்படும் இணைப்புச் செயற்பாடுகளை பாதுகாப்புக்கு உதவும் அமைச்சர் மேற்கொள்வார்.

★ பாதுகாப்பு அமைச்சின் செயலர், சமாதான செயகலத்தின் இயக்குநர் நாயகம், கூட்டு நடவடிக்கை கட்டளையகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஆகியோரை உள்ளடக்கிய குழு ஒன்று அமைக்கப்படும்.

இந்தக் குழு -

(i) சமாதான நடவடிக்கை தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரதமருக்கு ஜனாதிபதியால் அளிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு விடயங்களின் பட்டியலைத் தயாரிக்கும்.

(ii) யுத்த நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தல் மற்றும் அதன் மீறல்கள் தொடர்பான விடயங்களை சமாதானச் செயலகத்துடன் ஒருங்கிணைக்கும்.

(iii) கண்காணிப்புக் குழுவின் பணியை ஒருங்கிணைக்கும்.

(iv) புனர்வாழ்வு, புனரமைப்பு, அகதிகள் தொடர்பான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை ஒன்றிணைக்கும்.

(v) காலத்துக்குக் காலம் முன்னேற்றம் குறித்தும் பிணக்குகள் ஏற்படக்கூடிய விடயங்கள் குறித்தும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அறிவிக்கும்.

★ நோர்வேயின் அனுசரணைப் பணி தொடரும். அதனை மீள ஆரம்பிக்கும்படி நோர்வே கோரப்படும். புலிகளுடான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும்படியும் நோர்வே கேட்கப்படும்.

★ கண்காணிப்புக் குழுவின் தற்போதைய பணி சம்பந்தமான ஏற்பாடுகள் தொடரும். கண்காணிப்புக்குழுவின் சீரான செயற்பாட்டுக்காக விளக்க வழிகாட்டு மற்றும் ஒழுங்குவிதிகள் தயாரிப்படும். அன்றாட செயற்பாட்டுப பிரச்சினைகள் மேலே குறிப்பிடப்பட்ட குழு மூலம் தீர்க்கப்படும்.

**சமாதான பேச்சுகளை மீள ஆரம்பித்தல்**

(i) நோர்வேயின் அனுசரணைப் பணி மீள ஆரம்பிக்கப்படும்.

(ii) (புலிகள் சமர்ப்பித்த) இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனை தொடர்பாக முஸ்லிம் பிரதிநிதிகள் பதிலளிப்பர். இந்தப் பதில் பிரதமர் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கப்படும்.

(iii) பேச்சுகளுக்கான ஏற்பாடுகள் மற்றும் அவற்றை முன்நகர்த்துவதற்கான வழிகள் ஆகியவை குறித்து உடன்பாடு காண்பதற்காக ஜனவரி முதல் ஓரிரு சுற்றுப் பேச்சுகளை அரசின் தற்போதைய பேச்சுக்குழு மீள ஆரம்பித்து நடத்தும்.

(iv) புலிகளுடனான மேற்குறிப்பிட்ட ஆரம்பக்கட்ட சமாதானப் பேச்சுக்களின பின், சிங்கள மற்றும் ஏனைய மத, நிபுணர்கள் குழு வடக்கு - கிழக்குக்கு விஜயம் செய்யும்; புலிகளைச் சந்திக்கும்.

(v) பொ.ஐ.மு. மற்றும் ஏனைய கட்சிகளின் முஸ்லிம்களையும் உள்ளடக்கி இருக்கக்கூடிய முஸ்லிம் பிரதிநிதிகள் குழு புலிகளைச் சந்திக்கும்.

(vi) அரசினால் புலிகளிடம் சமர்ப்பிக்கப்படவிருக்கும் யோசனைகள் தொடர்பான ஒட்டுமொத்தக் கட்டமைப்பும், பேச்சுக்கான வழிகாட்டல்களும் முறையான பேச்சு தொடங்க முன்னர் கூட்டு சமாதானக் கவுன்ஸிலால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

(vii) புலிகளுடன் முறையான சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்க முன், இத்தேவைக்காகக் கூட்டு சமாதானப் கவுன்ஸிலின் ஆலோசனையுடனும், அங்கீகாரத்துடனும் தேசிய சமாதானப் பேச்சு பிரதிநிதிகள் குழு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

**ஜனநாயக நடைமுறைகள், நிறுவனங்களை பலப்படுத்தல்**

(i) தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான தற்போதைய நாடாளுமன்ற உபகுழுவுக்குச் சில சிபார்சுகளைச் செய்வதற்காக ஒரு செயற்பாட்டுக் குழுவை நிறுவுதல்.

(ii) இந்த நாடாளுமன்ற உபகுழு சகல அரசியல் கட்சிகளுக்கும் நியாயமான ஒரு தீர்வை எட்ட உதவும்.

(iii) செயலற்றிருக்கும் சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழுவை உடன் இயங்க வைத்தல்.

(iv) பொலீஸ் ஆணைக்குழு - பொலீஸ்மா அதிபர் விவகாரத்தை உடன் தீர்த்தல்.

(v) அரசியல் வன்செயலால் பாதிக்கப்பட்டோருக்கான நஷ்டஈட்டை விரைந்து வழங்குதல்.

(vi) நல்லாட்சியை மேம்படுத்தல் - லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவை விரைந்து செயற்படுத்தல் மற்றும் சுதந்திரமான, நீதியான ஊடகத்துறையை உறுதிப்படுத்தல்.


**தேவை**

எமது நிறுவனத்திற்கு தொலைபேசி இயக்குநர்கள் தேவைப்படுகின்றனர். அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை.

இன்றும் நாளையும் (சனி, ஞாயிறு) காலை 10 மணிமுதல் 3.00 மணி வரைக்குள் நேரில் வரவும்.

**S.P.ENTERPRISES**
**375, Kasthuriar Road,**
**Jaffna.** (c.31565) (14-36)

**T.P-222 5735**
**222 5736**

**MATHS CENTRE**
M.M.V. Road - Nelliady

புதிய பிரிவுகள்
Gr. 4 தொடக்கம் 11 வரை

ஆரம்பம்: 03-12-03 புதன் 3.30 p.m. (ப.தே.)

புதியமாணவர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் மட்டும் 29-11-03 முதல் அனுமதிக்கப்படுவர்.

(c.31498) (14-36)

**இயந்திர இயக்குநர்கள் தேவை**

Offset இயந்திரம் இயக்குவதில் அனுபவமுள்ள இயந்திர இயக்குநர்கள் தேவை. அனுபவமுடையவர்கள் கீழ்வரும் முகவரிக்கு சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்

மனிதவள சேவைப்பிரிவு,
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி , யாழ்ப்பாணம். (c.31568) (14-36)

**பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை**

பத்திரிகை விநியோகத்தில் ஈடுபடுவதற்கு ஊழியர்கள் தேவை. சொந்தமாக மோட்டார்சைக்கிள் வைத்திருப்பவர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு சகல ஆவணங்களுடனும் நேரில் வரவும்.

(சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

மனிதவள சேவை,
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி , யாழ்ப்பாணம். (c.31569) (14-36)

**உடனடி வேலை வாய்ப்பு**

எமது நிறுவனத்துக்கு பக்க வடிவமைப்பாளர்கள் உடன் தேவை. அனுபவமும் ஆற்றலும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை. நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சகல ஆவணங்களுடனும் நேரில் வரவும்.

மனிதவள சேவை,
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (c.31567) (14-36)

**கணேசன் அக்கடமி**
**திருநெல்வேலி**

புதிய வகுப்புகள் ஆரம்பம்
6-11 வரையிலான
வகுப்புகள் 29.11.2003
காலை 9.00மணிக்கு
ஆரம்பமாகும்.
- நிர்வாகி

(25082)(26)

அரியாலையின் கல்வி வளர்ச்சி கருதி சிறப்பான ஆசிரியர்களின் வழிகாட்டலில்

**புதிய ஸ்ரார் அக்கடமி**

அரியாலை
புதிய கல்வியாண்டு 2004
காலம் 04.12.2003 வியாழன் 4.p.m.
புதிய அனுமதிகள் உடன் பெறவும்
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
✡ எம்மிடம் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்கள் 03.12.2003 புதன் மாலை 4.00 மணிக்கு வருகை தரவும்
(25163) (14-36)

**SUBRA (14)**
சித்துன்கேணி [Regd]

இன்று

தரம் 3 முதல் O/L வரை
புதிய பிரிவு 29/11/2003
இல் ஆரம்பம்

அனுமதிக்கு விரையுங்கள

**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி றோட், யாழ்.

26 ஆவது ஆண்டு சேவை

புதிய அனுமதி வழங்கல்
கல்வியாண்டு - 2004
ஆண்டு 6 தொடக்கம் O/L வரை
ஆரம்பம்:5.12.2003 காலை 9 மணி

✣ இன்று தொடக்கம் அனுமதிகளை உறுதிப்படுத்தவும்.

(25206)(36)

**இறுதிப் பரீட்சை!**
**தரம் 5 மாணவர்களுக்கு**

'ஒல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்' ஆதரவில்
வடமாகாண ரீதியில் நடத்தப்படும்
**விசேட இறுதி மாதிரிப் பரீட்சையும் விசேட கருத்தரங்கும்**

இடம்: சென்.பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் (கச்சேரி நல்லூர் வீதி யாழ்.)
காலம்: நாளை(30.11.2003)ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணி.
விபரங்களுக்கு:

"ஒல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்" K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
சயன்ஸ் அக்கடமி, நல்லூர், யாழ்ப்பாணம்
சயன்ஸ் அக்கடமி, அரியாலை, யாழ்ப்பாணம்

முற்கூட்டியே பதிவுகள் மேற்கொள்ளப்படல்வேண்டும்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.11.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.